கல்முனைக் கார்மேல் பாத்திமாக் கல்லூரி

# தமிழ் மன்றம்

அளிக்கும்

# அணையா விளக்கு

894 811092
TAN

தமிழன்னையின் தவப்புதல்வரான

அமரர்

## தவத்திரு
## தனிநாயகம் அடிகளாருக்கு

சமர்ப்பிக்கும்

# அறிஞர்களின் கருத்தோவியங்கள்

894.811
TAN

வெளியீடு :

தமிழ் மன்றம்,
கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை,
1980.

University of Jaffna
894.811092
TAN
63539(AR; MAIN)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

University of Jaffna
63539
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

ஆசியுரைகள் (அ – ஐ)


* திருமலை மட்டுநகர் ஆயர் – கலாநிதி எல். ஆர். அன்ரனி
* யாழ் ஆயர் – கலாநிதி வ. தியோகுப்பிள்ளை
* கல்முனைப் பாராளுமன்ற உறுப்பினரும், முல்லை மாவட்ட அமைச்சருமான ஜனாப். ஏ. ஆர். மன்சூர்.
* புனித வளனார் சபை மேலாளர். வண. எஸ். ஏ. பிரான்சிஸ்
* துணைவேந்தர் . யாழ் பல்கலைக்கழகம். பேராசிரியர் சு. வித்தியானந்தன்
* பேராசிரியர் கே. நேசையா.
* தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர் வே. கிருஷ்ணபிள்ளை.
* கல்லூரித் துணை அதிபர். வண. சகோ. எம். லொறின்டா
* கல்லூரி அதிபரும் மன்றக் காப்பாளரும்.. அருட் செல்வ. எஸ். ஏ. மத்தியூ. எஸ். எஸ். ஜே.
* இதழ் ஆசிரியரின் எண்ணத்திலிருந்து. புலவர். அரியநாயகம்
* தவத்திரு தனிநாயக அடிகளின் வாழ்க்கையோட்டம்
*

கட்டுரைகள் – கவிதைகள்

* கலையுலகின் திருமகனே . அருள்செல்வி. எம். ஜெசி 1
* இறுதிச்சடங்குத் திருப்பலித் திருவுரை. அருள்திரு எம். மரிய நாயகம் அடிகளார். 2
* தமிழ்த்தூது . தவத்திரு தனிநாயகம் அடிகளார் 4
* பிள்ளைகளின் பழக்கங்கள் – பேராசிரியர் எஸ். முத்துலிங்கம் 18
* அடிகளார் தனிநாயகம் – வித்துவான் [illegible] எவ். எக்ஸ். நடராஜா 22
* Within the bosom of Sri Lanka Pro. F.K. Nesiah 30
* தனிநாயகன் புகழ் வாழ்க – பண்டிதர் கே. சந்திரசேகரனார் 33
* தமிழுக்கோர் அணிகலன் – ஜனாப். அ. ஸ. அப்துல் சமது. (பி. ஏ. ஆனர்ஸ்) 36
* எதிர்க்கட்சி முதல்வரின் இரங்கலுரை திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. 40
* தமிழ் வளர்த்த ஈழத்துறவி . திரு. பொன். ஏரம்பமூர்த்தி 44
* தனிநாயக மான்மியம் . பண்டிதர் க. யோ. ஆசிநாதர். 48
* தனிநாயக மான்மியம் . பண்டிதர். வீ. சி. கந்தையா 50
* வாழ்க வள தனிநாயக அடிகள். கவிஞர். ஏ. யூ. எம். [illegible] 53
* Father Xavier Thani Nayagam the dedicatad Tamil Patriot (Pro. F.A. Wilson) 55
* தமிழ் வளர்த்த தனிநாயக அடிகள். ஜனாப். கே. எல். ஏ. வாசிட் 60
* தவத்திருவே தனிநாயகம் அடிகளாரே, அமுதகவிப்புலவர் யாழ் ஜெயம் 62
* மறைந்ததோர் மணிவிளக்கு. திருமதி. எம். பி. ஜோசப் 64


894.8H092 TAN AR
63539
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O அறிஞர்கள் கண்ட அடிகளார் .... 65.

Oஅ [illegible] .......... 71.

O கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்.... 74.

கவிஞர் அமுதன், தமிழ்நாடு.

O விபுலானந்த அடிகள்.......... திருமதி. சி. விஜயரெட்ணம். 80.

O Fr. Beschi -A great Literary Genius 87.
Rev. Fr. X. S. Thani Nayagam

O தமிழ் மறப்பது [illegible] .......... [illegible]

ஆசிரியர். ர. டபிள்யு. அரியநாயகம்.

முன்னாள் ஆசிரியர்கள். திரு. பொ. சம்பந்தமூர்த்தி.
அருள்திரு. எ. யூஜீன் ரெவல்.

ஈழமணி நாட்டின்
இணையில்லாத் தமிழ் விளக்கு!
தனிநாயகமாம் தணியா நல்
திருவிளக்கு என்றும் ஒளிவீச
கார்மேல் பாத்திமாக் கல்லூரி
கனிவுடன் அளிக்கும்
அன்புக் காணிக்கை
அணையா விளக்கு!!


ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை - மட்டுநகர் ஆயர் கலாநிதி L. R அன்ரனி அவர்களின் ஆசியுரை.

பேராசிரியர் தவத்திரு தனிநாயக அடிகளாரின் பிரிவை நினைத்துக் கல்லூரிக் கார்மேல் பாத்திமாக் கல்லூரி மிகவும் சிறப்பாகக் கொண்டாடி நினைவு மலர் வெளியிடுவதையறிந்து, பெருமகிழ்வடைகின்றேன்.

தவத்திரு தனிநாயக அடிகளார் உண்மையாகவே தமிழுலகுக்குத் திவ்விய கருணையினால் தரப்பட்ட தவப்புதல்வரெனலாம். அவர் யாழ்க் குருமடத்திலிருந்து இந்தியாவிற்கும், அங்கிருந்து நித்திய நகரமாகிய உரோமாபுரிக்கும், பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும், அனுப்பப்பெற்றது இறைவனின் அருட்செயலாகும்.

உரோமாபுரியில் நான் கல்வி பயின்றபோதே தனிநாயக அடிகளின் உள்ளக்கிடக்கையை அறிந்து கொள்ளுகின்ற வாய்ப்பு கிடைத்தது. இவர் உலகில் இறை அறிவை, மெய்ஞானத்தைத் துலங்கச் செய்வதுடன் தமிழ் மொழியை உலகெங்கும் பரப்பும் தொண்டராக விளங்குவார் என்பதை நன்கு அறிந்து கொண்டேன். சிறப்பாக கத்தோலிக்க தமிழருக்கு ஒரு மேல் வரிச்சட்டமாய் என்றென்றும் இருப்பார். அவரின் சேவைக்கு நன்றி செலுத்துவோம். அச்சேவை தொடர்ந்து நடக்கத் தகுதி வாய்ந்த தனி அடியார்களுக்காக இறைவனை இறைஞ்சி மனமார்ந்த ஆசியை அளிக்கின்றோம்.

ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு,
29.09.1980.

+ எல். ஆர். அன்ரனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்பு மிகு யாழ்ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை
அவர்களின் ஆசிச்செய்தி (ஆ)

*************************************

கல்லூரித்தமிழ் மன்றத்தினர் எடுக்கும் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நினைவு தினத்துக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேர்மகிழ்வும், பெருவகையும் கொள்கின்றேன்.

" என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ்ச் செய்யுமாறே"

என்னும் திருமூலர் வாக்கை அடிக்கடி நினைவுகூரும் சுவாமி தனிநாயகம் ஆற்றிய சமயப்பணியும், தமிழ்த்தொண்டும் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் போற்றிப் புகழ வேண்டியதொன்றாகும்.

சுவாமிகளிடம் காணப்பட்ட ஆழ்ந்த அறிவும், நிரம்பிய புலமைத்திறன், பன்மொழிஆற்றல், திட்டமிட்ட செயற்பாடு, அன்பு * அடக்கம் போன்ற பல்வேறு உயர்குணங்கள் அவரை உலகறிந்த அறிஞர் ஆக்கியது.

ஈழத்துக் கிறீஸ்தவத் தமிழ்த்தொண்டர் வரிசையில் * நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரை அடுத்து சுவாமி தனிநாயகம் சிறப்பிடம் பெறுகின்றார். தமது இறுதிக்காலத்தின் பெரும்பகுதியை எனது மறைமாவட்டத்தில் வாழ்ந்து " தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்த" அடிகளாரின் புகழ் பாரெங்கும் பரவ வேண்டும்.

அதற்கு முதற்கல்லாக அடிகல்லாக, சிறப்பாக * நினைவு விழா எடுத்து மலர் வெளியிடும் கார்மேல் பாத்திமாக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர், அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

வளர்க சுவாமி புகழ்
வாழ்க கல்லூரித்தமிழ் மன்றம்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்

வ. தியோகுப்பிள்ளை
யாழ் ஆயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

******************************

கல்முனைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் முல்லை மாவட்ட அமைச்சருமான தட்டத்தரணி ஜனாப் ஏ.ஆர். மன்சூர்.
அவர்களின் வாழ்த்து
****************************************

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்,
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கொப்ப தமிழ் கூறும் நல்லுலகம் இன்று தமிழ்த் தாயின் தவப்புதல்வனும் வண. பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் அவர்களை இழந்து தவிக்கும் வேளையில் கிழக்கிலங்கையின் கல்வித்தீபங்களில் ஒன்றான கல்முனைக் கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் இருந்து அடிகளாரின் நினைவு மலர் வெளிவருவது மிகவும் பொருத்தமானதே.

அடிகளார் தமிழ்த்தாய்க்குச் செய்த சேவையின் மகத்தான தோர் ஆரமாக இந்நினைவு மலர் தமிழ் வாழும் காலம்வரை உலகத்து மாந்தர் நெஞ்சங்களில் நிலைத்து நின்று மணம் பரப்புமாக. கடல் கடந்த நாடுகளிலெல்லாம் தமிழ் மணம் கமழச்செய்த பேரறிஞர் வெளிநாட்டார் "தமிழோசை" யின் இனிமையிலே மையலுற்று அதனைக்கற்றுய்ந்து ஒழுகுவதற்குக் காலாய் இருந்த இப்பெருமகனைப் பெற்ற தாய் ஈழத்திருமாதா இன்று இறும்பூதெய்துகின்றாள். பெருமைக்குரிய இப்பேராயர் ஆற்றியுள்ள சேவைகள் அளப்பரியன, ஆழ்ந்த அறிவும் அமைதியான* நோக்கும் தூய அன்பும் கொண்டு துலங்கிய ஈழத்துப் பெருமகனார் வணக்கத்துக்குரிய பிதா. தனிநாயகம் அடிகளாருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் பொதுவாக உலகமாந்தருக்குமாக அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. தன்னலமற்ற அவர் அரிய சேவையைப் பொன்னெனப்போற்றி, வாழ்வில் பயன்பெறவதே நமது கடமையெனக் கொள்ளல்வேண்டும். அவர்விட்டுச் சென்ற பணிகளைத்தொடர்ந்து ஆற்றிவருவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனும். அந்நன்றிக்கடனின் ஒரு துளியென இன்று இக்கல்லூரியால் வெளியிடப்படும் நினைவுமலருக்கும் எனது ஆசியையும், ஆழ்ந்த அன்பையும் தெரிவிப்பதில் பூரிப்படைகின்றேன்.

நன்றி...

இவ்வண்ணம்.
ஏ.ஆர். மன்சூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித வளனார் சபை மேலாளரின் ஆசியுரை

தனிநிகரற்ற வண. பிதா தனிநாயகம் அடிகளின் மறைவை ஒட்டி தாங்கள் வெளியிட இருக்கும் நினைவு மலர் உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும்.

தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவ வழி செய்ய வேண்டுமென்று அன்றொருநாள் பாரதியார் தமது இதயத்துடிப்பை வெளியிட்டார். இத்தாகத்தைச் சிரமேற்கொண்டு நமது பைந்தமிழின் தொன்மையையும் புகழையும், பாரெங்கும் பரப்புவதற்கு * சுயநலம் கருதாது பெரும்பாடுபட்டு உழைத்துள்ள தியாகச் செம்மல் தனிநாயகம் அடிகளை நாம் எவ்விதம் வாழ்த்த முடியும்.? அவரது மூச்சிலும் பேச்சிலும் தமிழ் உணர்வினையே கொண்டிருந்தார். அவர் செய்த ஆய்வுகள் பல.

நடாத்திய மகாநாடுகள் யாவும் தமிழரல்லாவரும், தமிழின் சிறப்பையும் அருமையையும் நன்கறிந்து, இன்பத் தமிழ் மீது அன்புக் காதல் கொள்ளச்செய்த சிறந்த தியாகி. மங்காப்புகழைத் தமிழினத்துக்குப் பெற்றுத் தந்துள்ள சேவைச் செம்மல்.

இப்பெரியார் மேற்கொண்ட புனிதமான அன்புப்பணியினைத் தொடர தமிழுலகம் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதே இத்தவப்புதல்வருக்குச் செய்யும் மிகப் பொருத்தமான பணி. எனவே தங்கள் நினைவு மலருக்கு எனது மனமுவந்த ஆசிகூறி நிற்பதோடு * மீளாத்துயிலுற்ற பு...... தனிநாயகம் * அடிகளுக்கு புனித வளனார் துறவிகள் சார்பில் அஞ்சலியும் செலுத்துகின்றேன்.

( வண. எல்.ஏ. பிரான்சிஸ். எஸ்.எஸ்.ஜெ )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஆசிச் செய்தி

வண. பிதா தனிநாயக அடிகளாரின் நினைவாகக் கல்முனைக் கார்மேல் பாத்திமாக் கல்லூரியினர் வெளியிடும் இம்மலருக்கு இச்செய்தியினை வழங்குவதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

அடிகளார் தமிழ்த்தூதர், தமிழ்க்காவலர், உலகியல் ஆசையை நீத்தபோதும், தமிழ் ஆசையைத் துறக்காத முனிவர். அவருக்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது. உலகமெல்லாம் தமிழ் மொழியின் சிறப்பினையும், பண்பாட்டுப் பாரம்பரியத்தினையும், பரப்பிய பெருமை அவருக்கேயுரியது. அதனால் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் அடிகளாரை நினைவு கூருகின்றார்கள். அடிகளாருடைய தொண்டு எழுத்திலே வடிக்கப்படாவிட்டாலும், தமிழ் மக்கள் மனதிலே பசுமையாக நிறைந்துள்ளது.

அடிகளாருடைய மறைவு ஒரு புறம் மனத்துயரை ஏற்படுத்தியபோதிலும், அவருடைய தொண்டு மனப்பூரிப்பினை எப்போதும் ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும். தமிழ்மக்கள் மனதிலே அவர் என்றும் தமிழ் நாதத்தினை இசைத்துக் கொண்டேயிருப்பார். அப்பெரியாருடைய நினைவுமலர் சிறப்புற என் உளங்கனிந்த வாழ்த்துக்களை வழங்குவதிலே மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர். சு. வித்தியானந்தன்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம்
29.09.1980.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It has been our privilege to live in the Chelvanayagam-Thani Nayagam era of our history.It has been a historic turning point in the story of theTamils of Sri Lanka .While Thanthai Chelva led the Tamils in the 30-year march to the gates of liberty,Father ThaniNayagam helped to build their political and cultural personality.It is the Almighty who sends leaders to a people, the right men at the right moment.And so both these great leaders,both themselves men of prayer,were amidst our people to guide and strengthen them at their hour of need.It,is,in passing,an interesting coincidence that while the great political leader Chelvanayagam was an outstanding product of the near-by St.John's College,Father,the sage,Thani Nayagam was St. Patrick's great gift to theTamil Community.

He it was who strode the continents, carrying the flag of Tamil.Besides his native Tamil ,he addressed scholars at seats of learning in their own languages,in the University in Paris in French,in Rome in Italian ,in London in English, and helped to build the International Association of Tamil Research.

At Chelvanayagam Memorial Lecture ,he delivered those two lectures last April,' Tamil Culture and its salient characteristics' (in Tamil) and 'Research in Tamil Studies -Retrospect andProspect' (in English). That large gathering which listened to the lectures in pin drop silence would have agreed with Mr.Amirthalingam's comment,when proposing the vote of thanks,that there was hardly any other living scholar,here or elsewhere, who could have given a better exposition of this theme and that it would take decades before these masterpieces are excelled.

Father Thani Nayagam was one of my dearest friends.In this agonising moment I am compelled to cry :Where shall I look now for my succour? And, shall my people look for their sustenance?
May the good Lord bless his soul.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மேல் பாத்திமாக் கல்லூரித் தமிழ்மன்றப் பொறுப் பாசிரியர் கூறுகின்றார்.......................... 

தவத்திரு தனிநாயகம் அடிகளுக்கு விழா எதற்கு?.....

*******************************

" தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று " என்றார் வள்ளுவப் பெருந்தகை. இப்படியாக உலகிலே தோன்றிய பலருள் ஒரு சிலரே மனிதர் மனதில் இடம் பிடித்துள்ளனர். அப்படியான ஒரு சிலருள் புகழொடு தோன்றி மக்களுள் மாணிக்கம் ஆக மதிக்கப்பட்டவரே தவத்திரு அடிகளாராவர். எனவே நாம் அன்னாருக்கு விழா எடுக்கின்றோம்.

மேலும் இல்வாழ்வானைப் பொறுத்தவரையில் அவன் தன்னுடைய மனைவி மக்களுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்கின்றன். ஆனால் அடிகளாரைப் பொறுத்தவரையில் அவர் அப்படி வாழவில்லை. சாதி சமய, இனரீதியற்ற முறையில், தன் வாழ்நாளை உலக மக்கள் அனைவருக்குமே அர்ப்பணம் செய்தார். எனவே நாம் அன்னாருக்கு விழா எடுக்க முனைந்துள்ளோம்.

இன்னும் அடிகளார் தமிழுக்கும், தமிழ் பேசும் இனத்துக்குமாகச் செய்த சேவை உலகச் சரித்திரத்திலே இடம் பெற்றுவிட்டது. — அதாவது உலகிலே பரந்து வாழ்கின்ற கிட்டத்தட்ட 5 கோடி தமிழ் — பேசும் மக்களை அவர்களின் பிரதிநிதிகள் மூலம் மலேசியாவிலும் சென்னையிலும் ஈழத்திலும், ஒன்று கூட்டி, பல தமிழாராய்ச்சி மாநாட்டைத் திறம்படி நடத்திய பெருமை இவரையே சாரும். அதுமட்டுமா? ஈழத்திலும், பிற இடங்களிலும் சென்று தமிழ், தமிழ் என்று தமிழுக்காகவே தன் உயிரையே அர்ப்பணம் செய்ய முயன்றார். எனவே நாம் அடிகளாருக்கு — விழா எடுக்கின்றோம்.

அடிகளாரின் விழா திறம்பட நடைபெறவும் * நினைவுமலர் சீரியமுறையில் வெளிவரவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

செ. கிருஷ்ணபிள்ளை

*************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்மேல் பாத்திமாக் கல்லூரித் தலை அதிபரின் ஆசியுரை.



***************************************

தமிழ்த்தவப்புதல்வர் தனிநாயக அடிகள் மண்ணுலகை நீத்து விண்ணுலகை அடைந்ததால் சோகக்குரலொலிக்கும், சொல்லொணாத் துயர் நிறைந்த இந்நாட்டினில், அவரை நினைவுகூர, அவர் சேவை நலம் கூறக் கல்லூரி கார்மேல் பாத்திமாக் கல்லூரி முன்வந்து நினைவு மலரை வெளியிடுவது சாலப்பொருத்தமானதொன்றாகும். இம்மலருக்கு என் ஆசியும் வாழ்த்தும் வழங்குகின்றேன்.

தமிழ்த்தாய் தலைநிமிர்ந்து நிற்க, அகிலமெங்கும் தமிழ் மணம் பரப்ப நற்செய்தித் தூதுவராய் அமைந்த இத்திருவுருவேற்றிய தீபங்கள் என்று ஒளிகால தீவிரமாய் நாமும் தொண்டாற்றுவோம். உதயசூரியனாய்த் தமிழ்ஒலிபரப்பி தளராது இவர் ஆற்றிய மாபெரும் சேவைகளைப் போற்றுவோம். இவர் புகழோங்க இடையறாது உழைப்போம். இவருயர் நோக்குகளை இனிய நற்சேவைகளை நாமும் பின்பற்றுவோம். இறைமகன் யேசுவின் நிறைவுபெற்ற சேயென அவர் காட்டிய பாதையில் பலருடன் சென்ற இவர் பண்புகளைப் பாராட்டுவோம்.

கார்மேல் பாத்திமாக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் முயற்சியால் உருவான இம்மலருக்கு என் பாராட்டுகள் உரித்தாகுக.....................

அருட்செல்வி எம். லொறின்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி அதிபரின் கருத்துரை

********************

ஞானக்குரு தனிநாயகம் அடிகளார் நிகரற்ற பேரறிஞர். உலகெலாம் ஒன்றே, எனக்கண்ட பெருமகன். வள்ளுவர் கூறும் சான்றாண்மைமிக்கவர்.

எம் கல்லூரித் தமிழ் மன்றம் அறிஞரின் * நினைவு மலரை, சான்றோர் பலரை உருவாக்கும் உயர் திட்டத்தையும், நமனைக் கட்டும் இலக்கியப் பூங்காவையும் கொண்டிருக்கும் தமிழ்க்கலைக்குச் சாற்றுவது மிகவும் பொருத்தமானதே..

கல்லூரிகளிலேயிருந்து சான்றோர்கள் உருவாகி, உலகம் உய்ய வழிகாணவேண்டும் என்ற எண்ணத்தில்பார் புகழும் தவக்கொழுந்திற்கு, அறிவுச்சுடருக்கு, மலர் வெளியீட்டுவிழா எடுக்கின்றது எம் கல்லூரித்தமிழ் மன்றம்.

வெல்க, அவர்களின் உயர் எண்ணம்.

அருட்செல்வன். எல். ஏ. ஐ. மத்தியூ.
(பீ.ஏ. டிப்ளோமா இன், இடி,)
அதிபர், தமிழ் மன்றக் காப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் ஆசிரியரின் எண்ணத்திலிருந்து - - -(அ)

***********************************

கல்லூரிச் சார்மேல் பாத்திமாக் கல்லூரியின் வரலாற்று ஏடுகளை திருப்பி — திரும்பிப் பார்க்கின்றோம். அதன் — பாதையில் சாதனைகள் அளப்பல, என்பது எவருமே மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை. இது வெறும் புகழ்ச்சியல்ல. அவ்வகையில் தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்கு விழா எடுப்பதும் — நினைவு மலர் வெளியிடுதலும், இவ்வகைச் சாதனையின் பாற்பட்டதே.

" யாதும் ஊரே யாவரும் கேளிர் "
" பெரிதே உலகம் பேணுநர் பலரே "
" யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் "
" சாந்துணையும் கல்லாதவாறு "

என்றெல்லாம் சங்க கால நூல்கள் யாண்டும் வலியுறுத்திய கொள்கைகளைப் பாரெங்கும் பரப்பிய தமிழ்த்தூதர் தவத்திரு தனிநாயக அடிகளாராவர்.

காலமாகிய மணற்பரப்பில் காணப்படும் ... ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகள், தவத்திரு தனிநாயக அடிகள் போன்ற பெரியோர்களின் காலடித் தடத்தைப் பின்பற்றினால் மாணவ சமுதாயத்தில் பலர் சான்றோராய் உருவாகலாம்.

இவ்வெண்ணத்தடிப்பில் மனமகிழ்வில் கல்லூரித் தமிழ்மன்றம் " அணையா விளக்கு " என்னும் இம்மலரினை வெளியிடுகின்றது.

ஈழத்து, தமிழக, ஐரோப்பிய அறிஞர்பலரின் கட்டுரைகள் கவிதைகளை எதிர்பார்த்த பெருமலராக அச்சேற்றி — இன்னும் சில திங்களில் உங்கள் கரங்களில் மலரை மலரவிட்டுள்ளோம். நாம் எதிர்பார்க்கும் கட்டுரைகள் கவிதைகள் அனைத்தும் கிடைத்தவுடன் பல்சுவை நிறைந்த மலராக அம்மலர் மிளிரும் என்பது எம்மவரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அவ்வண்ண மலர் மலர்வதற்கு — உங்கள் அனைவரின் ஆதரவை நாடி [illegible]. அப்போது வெளியிடப்படும் இத்தட்டச்சால் வரு மலரானது எமது பாதையில் முதற் கல்லாக அறிஞர் பெருமக்களின் ஊக்கத்தைக் கொணரும் சிறந்த அரங்காக மிளிர்கின்றது.

இம்மலரை வெளியிட உழைத்த அனைவர்க்கும் — மன்றத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பேர்மகிழ்வு கொள்கின்றேன்.

"வாழ்க தமிழ் மன்றம், வளர்க சுவாமி புகழ்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழ் ஆசிரியர்:- செல்வன் ஏ டபிள்யூ அரியநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CURRICULUM VITAE

PROF. X. S. THANI NAYAGAM

M.A., M.Litt., (A'malai) Ph.D(Lond.) D.D.(Rome)

Born:Kayts,Ceylon: August 2,1913

Father: Naganather Kanapathypillai Henry Stanislaus (Delft)

Mother:Cecil Rasamma Stanislaus(Karampon,Kayts)

Died on 1.9.80 at7.00 p.m at Retreat House, Pandeterruppu

Burial on 3.9.80 after Con Celebration Mass

Chief Celebrant; Rt.Rev.Dr.B.Deogupillai

1953-1961: Lecturer in Education,University of Ceyl

1961-1969:Prof.of Indian Studies,University of Malaya

1970-Summer: Visiting Professor,College de France, Paris

1971-Spring: Visiting Professor,Instituto Universitario Orientale,Naples

1. Academic Qualifications etc.,

1920-1930 Grade School and High School at St.Patrick's College,Jaffna,Ceylon.E.S.L.C (1928) First Division, andSenior Cambridge(1930) with Distinctions in English and History. Gold Medalist in Elocution,Editor of school paper.Senior Prizeman in General Proficienc English,Tamil,History,Geography.

1931-1934 Course of Humanistic Studies ,Philosophy and Pedagogy at St.Bernard's Seminary, Colombo,Ceylon.Courses included ,Comparitive Religion and Sinhalese andTamil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1934 - 1939 | Divinity Studies, Pontifical Urban University, Rome. Doctorate in divinity, "Summa cum Laude". Thesis: "The Carthaginian Clergy". Course included Hebrew, Biblical Greek, Italian, European Art and Archaeology. |
| 1938, 19 Mar. | Ordained priest in Rome |
| 1940 - 1945 | Taught English, Tamil, History, in High School. Exempted from Teacher Training because ofcourse of studies done. |
| 1945 - 1947 | Post-graduate course in Tamil language and Literature at the Annamalai University, South India. Master of Arts degree. English Language and Literature subsidiary |
| 1947 - 1949 | Research scholar at the Annamalai University. Obtained Master of Literature degree. Thesis: "Nature in Ancient Tamil Poetry. |
| 1950 - 1951 | Lecture tour of the U.S.A. and South America. Visited several universities in Japan and North and South America. |
| 1954 | January: Lecture tour of Malaya<br>May-July: Study tour of Education Institutions in England and the European Continent. |
| 1952 - 1955 | Assistant Lecturer, Department of Education, University of Ceylon, Lecturer in Philosophy of Education, and Tamil Teaching Methods. |
| 1955 | April: Study Tour of South East Asia sponsored by the Asia Foundation (Malaya, Indonesia, Cambodia, Thailand, Vietnam). |
| 1955 - 1957 | Institute of Education, University of London. Doctor of Philosophy in Comparative Education. Thesis: "Ancient European and Indian Systems of Education compared, with special reference to Ancient Tamil Education |
| 1955 | December: participant in British Council course on English Literary Criticism at Wadham College, Oxford |
| 1957 - 1961 | Lecuturer in Education for post-graduate diploma & M.A. in Education, University of Ceylon. Courses in the Theory of Education; Tamil Teaching methods; Social education. |
| 1959 | December: Group Leader, New Educational Fellowship Seminar, New Delhi. |
| 1960 | April-September: Study tour of Adult Education in the U.S.A., Canada, Germany, Italy, Scandinavia and Russia. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1960 | Sornammal Endowment Lecturer, University of Madras and University of Annamalai. |
| 1961 - 1969 | Professor of Indian Studies and Head of Department of Indian Studies, University of Malaya. |
| 1964 | Lecture Tour of Germany under German Academic Exchange Service - DAAD. |
| 1964 | Joint-Secretary, International Association of Tamil Research. |
| 1965 | October-December: Acting Dean, Faculty of Arts, University of Malaya, Kuala Lumpur. |
| 1966 - 1967 | Dean, Faculty of Arts. |
| 1966 | Chief Academic Organiser, First International Conference-Seminar of Tamil Studies. |
| 1967 | Tour of the Carribean to study migrant communities |
| 1969 | September. Retired from the University of Malaya |
| 1970 | Visiting Professor, College de France, Paris. Study tour of European libraries sponsored by the Gulbenkian Foundation. Guest Lecturer, University of Stockholm, Uppsala and Scandinavian Institute of Asian Studies |
| 1971 | Visiting Professor, Instituto Universitario Orientale, Naples. |
| 1973 | Attended Congress of Orientalists, Paris. |

PUBLICATIONS - since 1952. (A select list)

1. "Religious Art in South India", in Liturgical Arts, New York, 1953.
2. "Tamil Manuscripts in European Libraries", Tamil Culture, Vol. III, No.2, pp.219-230, 1956
3. "Tamil Cultural influences in South East Asia", Tamil Culture, Vol. IV, No.3 pp. 203-220, 1955.
4. "Tamil Culture in Ceylon, Past, Present and Future". (Booklet published by the Tamil Cultural Society), Colombo, 1955
5. "Ancient Tamil Literature and the Study of Ancient Indian Indian Education", Tamil Culture, Vol.V, No.1, pp.1- 15, 1956.
6. "The Educators of Early Tamil Society", Tamil Culture, Vol.V, No.2, pp.105-119, 1956
7. "A Seminal Period of Indian Thought", Tamil Culture Vol. VI, No. 1 & 2, 1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. "Ancient Tamil Poet Educators", Tamil Culture, Vol. VI, No.4 pp. 272-285, 1957

9. "The philosophic Stage of Development in Cangam Literature" Tamil Culture, Vol. VII No.1 pp. 1-15, 1958

10. "The First Books Printed in Tamil", Tamil Culture, Vol. VII, No.3, pp 288-308, 1958

11. Earliest Jain and Buddhist Teaching in the Tamil Country", Tamil Culture, Vol. VIII, No.4, pp 337-349, 1959

12. "The Nature and Scope of Adult Education", Ceylon Journal of Historical and Social Studies, Vol. II, No.1, 1959.

13. "The Vocabulary and Content of Tamil Primers and First Readers" Journal of the National Education Society, Vol. No. II, 1959

14. "The Philosophy and Practice of Teacher Training", in National Education Society Journal, Vol. III, 1960.

15. "Dr. R.P. Sethupillai" Tamil Culture, Vol. IX, No.3, pp.217-230 1961.

16. "Tamil and Greek Ethics Compared", in Kalai punka, Organ of the Ceylon Literary Academy, 1961 pp. 65-76

17. "Regional Nationalism in Twentieth Century Tamil Literature" Tamil Culture, Vol. X No. 1, pp 1-23, 1963.

18. "The Novelist of the City of Madras", Tamil Culture, Vol. X No.2 pp. 1 - 18, 1963.

19. "Nature and the Natural in Kalyanasundarar", Tamil Culture, Vol. X No. 4, 1963

20. "The Typology of Ancient Indian Education" in Pedagogica Historica, International Review of the History of Education Published by the University of Ghent, Vol. II, 1963.

21. "The Aims of Education" (Tamil) in Journal of the National Education Society of Ceylon, 1963.

22. "Preface to the Tamil-Portuguese Dictionary, 1679" Translation in Collaboration with Dr. Edgar C. Knowlton, Tamil Culture, Vol. XI, No.2, 1964.

23. "Puisi perchintaan india purba" (Malay), in Penulis, Ogos-Disember, 1964.

24. "Classical Love of Poetry in Tamil" in Felicitation volumes of South East Asian Studies, Siam Society, Bangkok, 1965.

25. "Ancient Tamil poetry" in New Horizon, Hong Kong, 1966.

26. "Patterns of Studenthood in Ancient India", in Pedagogica Historica, University of Ghent, Ghent.

27. "The Identification of Nataram" in Proceedings of the First International Conference-Seminar of Tamil Studies. Vol II, Kuala Lumpur, 1966.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. "A perception in Tamil Studies", in Proceedings of the First International Conference-Seminar of Tamil Studies. Vol. II, Kuala Lumpur, 1966.

29. "The period of Ethical Literature in Tamil" in Pratidanum Studies presented to Professor Kuiper, Mouton & Co. 1967.

30. "Two Decades of Tamil Studies", Journal of Tamil Studies, Vol. I, 1969.

31. "Tamil Emigration to the Martinique", in Journal of Tamil Studies, Vol. I, 1969.

32. Tolkaapiyam - The earliest Record in Journal of Tamil Studies, Vol. I. No. 1 (1973)

Article in Encyclopaedia

Joseph Constantine Beschi, Italian Tamil scholar and poet (died in 1742) in Tamil Encyclopaedia, (Tamil), Vol.II pp. 449-451, 4 columns, 1963.

Articles in Newspapers (of research significance)

1. "Religion and Culture" in Malayan Times, Special University of Malaya's Convocation supplement, 1962.

2. "The Role of the Tamil writer in Malaya", in Tamil Nesan (Tamil), 9th June, 1963

3. The Historical Novels of Kalki" in Asiriyar Kalki",(Book) 1966

4. "Language and Liberty in Ceylon". Reprinted as Pamphet.Ceylon printers, 1956.

5. "Tamil Etymology". Eela Nadu, 1971.

Endowment Lectures

1. Aspects of Tamil Humanism in Annals of Oriental Studies, University of Madras, February 1961 (Sornammal Endowment Lecture - University of Madras).

2. Tirukkural in World Ethics - Compared with Greek, Roman and Buddhist Ethics (Tamil) Annamalai University, 1961. (Sornammal Endowment Lectures - University of Annamalai) Published by the University in bookform, 1967.

Papers submitted to Congresses - Published in Proceedings

1. The Catholic Contribution to Tamil Literature in Proceedings of the Indian Historical Congress, Annamalainagar, 1946.

2. Shamanism and Poetry. in proceedings of the XXVth Congress of Orientalists, Moscow, 1960.

3. Proenca's Tamil-Portuguese Dictionary, 1679. In proceedings of the International Congress of Orientalists, New Delhi, 1964.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. Cultural Elements common to India and South East Asia. In proceedings of the Malaysian Conference of Orientalists, Kuala Lumpur, 1965.

5. Tamil-Roman Trade of the Classical Period. paper submitted to the XXVIIth Congress of Orientalists Ann Arbor, Michigan, 1967.

6. Tamil Society. A Survey. Paper submitted to the Third International Conference Siminar of Tamil Studies. Paris, 1970.

7. Cilappatikaram. An epic of Synthesis. Fourth International Conference of Tamil Studies, Jaffna, 1974.

BOOKS

1. The Carthaginian Clergy, pp.112 Indian ed. 1942. American ed.1950

2. Nature Poetry in Tamil - The Classical Period, Dewan Bahasa dan Kebudayaan Kebangsaan, Singapore, 1963. p. xvii, 153 pp.

3. Tamil Tatu (Tamil) Essays of Criticism. First published in 1951. Revised ed. 1962. Prescribed text book for pre-University course of the University of Madras 1962-63. 152 p.

4. Onre Ulakam. One World (Tamil) Essays on travel and culture in different countries, Paari Nilayam, Madras, 1966. 224 p.

5. Reference Guide to Tamil Studies - Books - University of Mayala Press, 1966. viii, 122 p.

6. Landscape and poetry, Revised ed. of No.2 (Nature Poetry in Tamil - the Classical period), Asia Publishing House, Bombay, 1966. 153 p.

7. Tamil Studies Abroad. A symposium. (Editor) International Association of Tamil Researbh. Kuala Lumpur,1968. 269 p.

8. Tamil Culture and Civilization. Readings. The Classical Period. Selected and Presented by Asia publishing House, London. viii, 233 p.

Inaugural Lecture

Indian Thought and Roman Stoicism, University of Mayala, 1963.

Editorial Work

a) Founder and Chief Editor of Tamil Culture, Quarterly Journal of Tamil Studies published by the Academy of Tamil Culture, Madras, 1952-1967. (Twelve volumes).

b) The Tamil-portuguese Dictionary of Proenca, 1679. (Edition and critical study of the work). Brill & Co., Amsterdam, 1966. p. 524.

c) Chief Editor. Journal of Tamil Studies. Published twice in 1969 by the International Association of Tamil Research.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In Preparation

a) A Historycaof Tamil Typography up to 1825 A.D.

b) Relations between Italy and South Asia from earliest times to the present day.

c) Tamil Migrations to the French colonies.

d) The Tamils in Ceylon.

e) The Classical Geographers and the Tamil Country

f) Select Periods of Tamil Trade

g) The Quest for Happiness.

Activities within the University (1961 - 1969)

a) Chief Examiner: Tamil, Senior Cambridge and Higher School Certificate in Malaya (1961 - 1969).

b) Member, Board of Studies of the School of Education (until 1964) University of Malaya.

c) Member, Board of Studies - Psychology, Anthropology, Sociology Sociology, Philosophy, Politics & Government and Linguistics. (1963-1964)

d) Member, Board of Islamic Studies (until 1963)

e) Member, Academic Staff Committee (until 1966)

f) Member, Library Committee (until 1966)

g) Non-Resident Fellow - Fourth Residential College (until 1966)

h) Member, Board of Student Welfare (until 1968)

i) Arts Faculty Member to the Academic Committee of the School of Education (1964)

j) Member, Council-Senate Committee on Discipline

k) Vice-President, Malaysian Society of Orientalists (1964 - 1967)

l) Examiner for Ph.D theses, University of Madras.

m) Acting Dean, Faculty of Arts, University of Malaya, (October - December, 1965.

n) Dean, Faculty of Arts, January 1966 - April, 1967.

Activities outside the University

a) Joint Secretary, International Association of Tamil Research

b) Chairman, Committee for the Production of Children and Adults Literature, Madras State (until 1964)

c) Vice-President, Academy of Tamil Culture, Madras.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

d) Member, Tamil Research and Development Council, Madras State (until 1966)

e) Member, English-Tamil Dictionary Committee, University of Madras, (until 1963)

f) Member, Sri Lanka Sahitya Mandalaya, Ceylon (until 1961)

Guest lectures at several European, Asian and Americal Universities.

Languages

Mother tongue: Tamil

Other Languages: English, Italian, Latin, French, Spanish and German (varying degrees of fluency); Hebrew, Greek, Sanskrit, Portuguese, Russian, Malay, Sinhalese (working knowlege)

Press and Radio

Has contributed newspaper articles on educational and cultural as subjects to newpapers in various parts of the world e.g. Italy, U.S.A., Ceylon, India, England, and Malaya. Has been a speaker on literary themes over the B.B.C., Vatican Radio, All India Radio, Radio and Television Singapore, Radio and Television Malaysia.

Travel

Spent five years in Europe, two years in England, two years in North and South America, ten years in India; Travelled extensively in Japan, Southeast Asia, Middle East, Central and Northern Africa. Has studied University education and educational institutions in every part of the world including the U.S.S.R.

Special interests

East-West Culture contacts. Comparative cultures and literatures, tavel. Internationalism. problems of Minorities. problems of Happiness

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுலகின் தலைமகனே !

பல்லவி

கலை உலகின் தலைமகனே
நாயக நாயகமே
உன் அடிகளிலே கரம்குவித்து
அஞ்சலி செய்கின்றோம்.

(1) எட்டுத்திசையும் திடுக்கிடச் செய்த
அண்ணல் உன் மறைவோ ஐயா
உந்தன் அன்பர்கள் எம்மை
ஆழ்ந்த துயரில் மூழ்கிட வைத்ததையா
உம்மைப்போல் எம்முன் உறைந்த பல்சேவை
புரிந்து யார் இருப்பார்
ஈழத்தமிழகம் செய்த நந்தவமே
கலைநாயக மணியே (கலை உலகின்)

(2) பதவி வந்த போதிலும் அங்கு
பணிவு கொண்டதையா – உந்தன்
படிப்பில் பயனை அனுபவிக்கையிலே
பரவசம் அடைந்தோமையா
உன்னுயர் நோக்கு என்றுமே எம்மில்
துடிப்புற தெரியலையா ?
உண்மை உணர்ந்தும் உத்தமன் உனை
நெஞ்சம் மறக்காதையா,

(3) திருமறை காத்த குருமுதல்வா உடன்
அஞ்சலி மறவோமையா
உந்தன் தாயகம் விட்டு வேறகம் சென்றும்
தாய்த்தமிழ் புகழ் பரப்ப
நாம் பெற்ற செல்வம் பெருக இப்புவி
உன் வாழ்வதன் வடிவமையா
அன்னை தமிழ் மணம் எங்கும் பரவ
உன்னையே தந்தாய் ஐயா...

( அருட்செல்வி செ. லில்லி நீற்ல )
( மெட்டு: என்னைப்பறவை )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.09.80 தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் இறுதிச் சடங்கின் போது யாழ் ஆயர் தலைமையில் நிறைவேற்றப்பட்ட திருப்பலிப்பூசையில் புனித பத்திரிசியாரின் கல்லூரி முன்னாள் அதிபர் அருட்திரு மரியநாயகம் அடிகள் நிகழ்த்திய திருவுரை

****, ***********************************

" வழியும் சத்தியமும் உயிரும் நாமே " என்றார் கிறிஸ்து. ஐயர் அவர்களே அன்பர்களே வணக்கம்.

வழியும் சத்தியமும் உயிரும் நாமே என்ற கிறீஸ்தவ உண்மையையே கிறீஸ்தவ மக்கள் உண்மை வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டுள்ளனர். இந்த உண்மையைப் போதித்து வாழ்வதே குருக்களின் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்ற ஒரு புதிய முறையைக்கையாண்டார் தனிநாயகம் அடிகள். தனிநாயகம் என்ற பெயரும் இதற்கு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. 1952ம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரியில் மண்டபத்தில் தமிழ் மகாநாடு நடந்தபோது " எங்கள் இலட்சியத்தின் சிறப்பியல்பு" என்பது பற்றி சிறப்புரை தனிநாயக அடிகள் ஆற்றியபோது அவ்விழாவிற்குத் தலைமைதாங்கிய சேதுப்பிள்ளை அவர்கள் " தனிநாயகம் பேசிற்று " என்று அஃறிணையில் சிறப்பாகக் கூறி அவரின் பேருரை தானாகவே இயங்கக் கூடியதால் அஃறிணையே பொருத்தமானது. என்றும் குறிப்பிட்டார்.

தனிநாயகம் பேசும்போதெல்லாம் தனிப்பட்ட பேச்சாகவும் நிகரற்ற உரையாகவும் இருக்கும். அது வகித்த மேடைகள் எத்தனை? ஆற்றிய உரைகள் எம்மாத்திரம்? எழுதிய நூல்கள் எத்தனை? தமிழ்த்தூதின் மூலம் கிறீஸ்தவ நற்செய்திகளை எடுத்துச் சென்ற நாடுகள் பல. இன்று அது இறைவனின் திருவுளப்படி பேச்சுவன்மை இழந்து அசைவற்றுக் கிடக்கின்றது. மக்கள் பேச, தொண்டர்கள் ஆர்ப்பரிக்க, தமிழ் உலகம் சோர்வுற்றிருக்க, அது கேட்டுக் கொண்டிருக்கின்றது. சம்பத்திரிசியார் கல்லூரியில் சீனியர் வகுப்பை முடித்து உலகம் புகழோடு அவரை வாவென்று அழைக்க, " கிறீஸ்து என்னைப் பின்செல் என்று கூப்பிட்டார்" என்று கூறினார்..

அந்தக் கிறீஸ்துவின் அழைப்பிற்குச்செவிசாய்த்தார். குருத்துவத் தொண்டுக்குத் தம்மை அர்ப்பணித்தார். அன்று அழைத்த அதே கிறீஸ்து இன்று திரும்பவும் வாவென்று அழைக்கும்வரை வழியும் சத்தியமும் உயிரும் நாமே என்ற கிறீஸ்தவ போதனையை வாழ்ந்து பரப்பி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதனையைப் பரப்ப கிறீஸ்துவின் நற்செய்தியை உலகெங்கும், கொண்டு செல்லத் தேன்சுரக்கும் தமிழ்மொழியே சிறந்தது எனக்கண்டு, அதைக் கற்க முயன்றார். தமிழ்த்தாயும் ஆர்வத்தினை ஊட்டினள். பல்கலைக்கழகங்களில் கற்று பட்டங்கள் பலபெற்றதுடன் நின்றுவிடாமல் தனது தொண்டை ஆரம்பித்தார். தாயகத்திலே வீரமாமுனிவர் டீநொபிலி ஆற்றிய தொண்டு அவருக்கு வழிகாட்டியாக இருந்தது. ஈழத்திலே பல்கலைப்புலவர்* சுவாமி ஞானப்பிரகாசியார் இவருக்கு முன்னோடியாக இருந்தார். இவர் புரிந்த தொண்டு நம் நாடுகளில் மாத்திரம் . தனிநாயகம் நம் நாடுகளைக்* கடந்து அப்பால் சென்றது. அது தான் தனிநாயகம். மேற்குத் திசைநாடுகளுக்கும் தமிழ்த்தாயைக் கொண்டு சென்றபோதெல்லாம், கிறீஸ்துவின் நற்செய்தியைக் கொண்டு சென்றார்.

இன்பமாய்ப் பேசுவார், பண்புடன் பழகுவார், பணிவுடன் தொண்டாற்றுவார். இவரின் மறைவு தமிழகத்துக்கு ஒரு பேரிழப்பாயினும், கிறீஸ்துவில் நம்பிக்கை வைப்பவர்களுக்கு மரணத்தால் வாழ்வு மாற்றப்படுவதேயன்றி, அழிக்கப்படுவதில்லை என்று நாம் செபிக்கின்றோம். அவரின் உலக வாழ்வு முடிந்து பரலோக வாழ்வு ஆரம்பமாகின்றது. இந்த வாழ்விலே நாமும் ஒருநாள் பங்கு கொள்ளவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

அடிகளாருக்கு அஞ்சலி செலுத்த இங்கு வருகை தந்திருக்கும் அன்பர்களுக்கு நன்றி கூறுவதுடன் இறைவன் அவருக்கு முடிவில்லா வாழ்வை அளிக்க வேண்டும் என்பதுடன் கிறீஸ்தவத் தொண்டிற்கும், தமிழ்த்தொண்டிற்கும், தமிழ் மொழிக்கும், அவர் ஆற்றிய பணி என்றும் நிலைக்கவேண்டும் என்று * ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

" வழியும் உயிரும் சத்தியமும் நாமே "

**********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தூது

## அறிஞர் தனிநாயக அடிகளார்

இக்கட்டுரை ஆசிரியர் 1934ல் ஐரோப்பாவிற்குச் சென்று ஐந்து ஆண்டுகள் இத்தாலிய நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் கல்வி பயின்றார். 1949-1950-ல் நிகழ்த்திய உலகச் செலவின் பின் எழுதப்பெற்றதாகும்......

தமிழருள் பலரும், தமிழர் அல்லாதார் சிலரும், தத்தம் இயல்பிற்கு ஒவ்வும் வகையிலெல்லாம் தமிழுக்காக அரும்பணியாற்றி வருகின்றனர். இவருள், வேற்று மொழிகளுடனும், நாடுகளுடனும், மக்களுடனும் தொடர்புடைய என்னைப் போன்ற தமிழர், தமிழ்மொழி, நாடு, இனம், ஆகிய இவை மூன்றின் மாண்பை ஒப்பு நோக்கி அறிந்து அதனைத் தமக்கிசைந்த அளவு பிறர்க்குக் கூற விரும்புவதில் யாதும் வியப்பின்று.

இத்தகைய தொண்டில் முதன்முதல் ஈடுபட்டவர் அந்தணரும் குறிஞ்சிப் பாட்டினை இயற்றி, ஐந்திணை இலக்கணம் ஆரிய மன்னர்க்குப் புகட்டியவருமாகிய கபிலராவர். வேற்று நாடுகளுக்கு ஒருவாறு தமிழின் பெருமையை அண்மையில் காட்டியவர் ஈழநாட்டவரும், இந்தியக் கலைகளில் இணையற்ற தேர்ச்சி பெற்றவருமாகிய ஆனந்தக் குமாரசுவாமியாவர். இவரிருவருடைய காலத்துக்குள் இதே நோக்கத்துடன் பலர் உழைத்திருக்கின்றனர். இப்பலருடைய அறிவும் ஆற்றலும் படைத்தேனல்லேனாயினும், உலகச் செலவு செய்து தமிழ்க் கலைத்தூது நிகழ்த்த நானும் வாய்ப்புப் பெற்றேன் எனப் பெரிதும் உவந்து, அத்தொண்டினை மணமற்ற சிறு மலர்போன்று தமிழன்னையின் துணைமலரடிகளில் வைக்கின்றேன்.

இத்தொண்டு இக்காலத்து இன்றியமையாது வேண்டுமோவெனின், இன்றியமையாது வேண்டும். உலக மொழிகளின் பிறப்பைக் கண்டும் அவை சிதையவும், மாறவும், வழக்கொழியவும், தான் என்றும் தன் கன்னித்தன்மையைக் காத்து வருகின்ற தமிழன்னைக்கு, இன்று இடுக்கணும், இடும்பையும் நேர்ந்துள்ளன. தமிழன்னை மீது பல்வேறு பகைவர் அறிந்தும், அறியாதும் படையெடுத்துள்ளனர். இப்படை எல்லாவற்றையும் புறங்காணும் கருவி தமிழ்த்தூது முரசின் ஒலி ஒன்றே என நம்புகின்றேன்.

இனி மேனாட்டு மொழியாராய்ச்சியாளரும் இலக்கிய ஆராய்ச்சியாளரும், இந்தியப் பண்பினை அறிவதற்கு வடமொழி இலக்கியப் பயிற்சியே சாலும் எனக்கருதி அதனை மட்டும் கற்று வருகின்றனர். தமிழ்க்கலையின் தனித்தன்மையை இவர் உணர்ந்திலர். இவர்க்கு உணர்த்துவாரும் இலர். மேல்நாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில் தமிழிலக்கியத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய கருத்துச் சிறிதேனும் இல்லை. ஒரு சொல்லேனும் இல்லை. இந்திய நாட்டில் இந்தியக் கலைஞரால் ஆக்கப்பெற்ற இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்குத் தகுந்த இடமும் புகழும் அளிக்கப்படவில்லை. இந்தியக் குடியரசின் முதலமைச்சர் உயர்திரு. நேருநாமும், தம் நூல்களில் தென்னாட்டிற்குச் சிறிதளவே இடம் ஈந்துள்ளார். "இந்திய வரலாறு தென்னாட்டில் முதல் உறைவிடம் காணவும்" என்றும், "தென்னாட்டில் மிகு பழமை வாய்ந்த பொருட்களும் மக்களும் உண்டு" என்று மட்டும் கூறி, மேலே செல்லுகின்றனர் இந்நூலாசிரியர்கள். இம்மொழியின் சிறப்பியல்பை, இம்மக்கள் உலகிற்கு ஈந்த இலக்கியத்தின் தனித்தன்மையை, அவர்களுடைய பழவல்களைப் புரட்டிப் பார்க்கினும் காண்டல் அரிது.

நாட்டை விட்டுப்பிரிந்து ஏறக்குறைய ஈராண்டுகள் ஆகிய பின்னர் தமிழ்த்திருநாட்டை மீண்டும் என் கண்கள் பார்த்தன. இவ்வீராண்டுகளில் நான் மலாயா, சீனம், யப்பான், வடஅமெரிக்கா, தென்னமெரிக்கா, நடு ஆபிரிக்கா, வடவாபிரிக்கா, இத்தாலி, பலத்தீனம், எகிப்து என்னும் இந்நாடுகளைக் கண்டு வியந்தேன்.

தமிழைப் பொறுத்தவரை நான் அடைந்த பெருவியப்பு, தமிழும், தமிழரும், உலகிற் பரவியிருக்கும் வகை கண்டு ஏற்பட்டதேயாம். பர்மாவில் தமிழ் மொழிக்குச் செல்வாக்குண்டு, நடு அமெரிக்காவின் தீவுகளாகிய திரிநாடு, ஜமேக்கா, அட்லாண்டிக்குத் தீவுகளாகிய மார்த்தீனிக், ஆபிரிக்காவின் பலபிரிவுகள், இன்னோரன்ன இடங்களுக்குச் சென்ற தமிழர் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் மலாயாவிற்குச் சென்றபோது நான் அடைந்தது போன்ற வியப்பு வேறு எவ்விடத்திலும் நான் அடைந்தேன் அல்லேன். ஆங்குள்ள இந்தியர்களில் தமிழரே பெரும்பகுதியினர். அங்கு தமிழ் நாட் செய்தித்தாள்கள் நான்கு ஐந்து வெளியிடுகின்றனர். சிங்கப்பூர், கோலாலம்பூர், முதலிய பேரூர்களில் வானொலி நிலையங்கள் தமிழில் நாள்தோறும் ஒலிபரப்புகின்றன என்பது அறிந்தும் பெரிதும் மகிழ்ந்தேன். மேலும் நான் அங்கு சென்றிருந்தக்கால், மலாயாவின் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவத் திட்டங்கள் வகுத்து வந்தனர். அப்பல்கலைக்கழகத்தில், தமிழுக்கும் ஒரு பேராசிரியக் கட்டில் இருக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழரும், இந்தியத்தமிழரும் முயன்று வந்தது, என் களிப்பிற்கு இன்னொரு காரணமாயிற்று.

தமிழ் ஒலிகள் உரையாடுதலில் ஊர்தோறும் வேறுபடுவது குறிக்கற்பாலது. மலையாள நாட்டின் எல்லையில் இருப்போர் மலையாளம் பேசுவது போல் தமிழைப் பேசுவர். சிங்கள நாட்டில் இருப்போர் சிங்களத்தைப் போலத் தமிழை உச்சரிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ்வாறே மலாயாவில் சீன மொழியைப் போலவும், அமெரிக்க த்தில் ஆங்கிலத்தைப்போலவும் தமிழை ஒலித்து வருகின்றனர். எனினும் இந்த மிழ் அந்த ஒலிவேறுபாடுகளை நீக்கி மேல்நாட்டு மொழிகளுக்கு உள்ளதைப் போன்ற பொதுநிலை ஒலிப்பு ஒன்றைப் பரப்புவது, தமிழ்ப்பாதுகாப்பிற்கு பெரு நலத்தினைப் பயக்கும். நம் வெள்ளித்திரை நடிகரும் வானொலி உரை* யாளரும் அப்பொதுநிலை ஒலிப்பைக் கடைப்பிடிப்பாரெனின் இவ்வொலிப்பு* எங்கும் விரைவில் பரவிவிடும். ஆங்கிலத்திற்கு பி.பி.சி இன் ஒலிப்புப்பொது நிலை விதியாயிருத்தல் போல் தமிழிற்கும் யாதேனுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும்..

தமிழன் தன் மொழியைக் காதலிப்பதுபோல் வேறெவரும் தம்* மொழியைக் காதலிப்பதையோ, தமிழ்ப்புலவர் தம் மொழியைப் போற்று வதுபோல், வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம்மொழியைப் போற்று வதையோ கண்டிலேன். சேக்கிழாரை விரித்துப் பாரீன். அவர் தமிழ் என்னும் சொல்லைத் தம் செய்யுளில் அழைக்க வேண்டுமெனின், அதற்குஅடை இல்லாமல் எழுதப் பின் வாங்குவர். " சென்றமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ்; உயர்தமிழ், கோதில்* தமிழ், தேன் மொழியும் செந்தமிழ் " – என்றெல்லாம் யாழினும் இனிதி சைப்பர். இனி தேவாரங்களைப் பாடினார் என்னும் பொருளில், " தமிழ் பரிடியமைந்தார் ", " தமிழ் மாலைகள் சாற்றினார் " என்று அப்புல* வர் கூறுவதை யார்தான் நினைந்து நினைந்து இன்புற்றிலர்.? மேலும் திருமூ லர் " என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே " என்று கூறுவது போலெல்லாம் பிறமொழிப் புலவர் தம் மொழியைப் போற்றிக் கூறியதாகத் தெரியவில்லை. தமிழரின் இத்தமிழ்ப்ப ற்றுத்தான், மலாயாவின் தமிழர் என் விரிவுரைகளைக் கேட்க நெடுந்தூ ரமிருந்து வருவதற்கும், நான் செய்த சிறுதொண்டைப் பெரிதாகப் போற் றுவதற்கும் காரணமாய் இருந்தது. உலகிலிருக்கும் தமிழர் அனைவரும் தம் மொழிக்குத் தொண்டாற்ற ஒன்று கூடுவரேல் தமிழ் முரசு உலகெங்கும்* முழங்கி நிற்கும் என்பதில் ஐயமும் உளதோ? ஆயினும் இந்தியத் தமிழ் நாட் டிலுள்ள அரசியற் கருத்து வேறுபாடுகள்மலாயாத் தமிழரையும் பிரிக்கின்றன இவர் அரசியல் துறையில் வேற்றுமைகள் உடையரேனும், தமிழ்த்துறை யில் ஒற்றுமை பாராட்டி ஒன்று சேர்வது; தமிழுக்கு உறுதுணையாகும்..

வேற்று நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழர், தமிழை ஒருவாறு மறப்பதற்கு அவர்கள் சூழ்நிலை காரணமாயிருப்பதால், அந்நாடுகளின்* மொழிகள் வாயிலாகவும் தமிழின் புகழைப் பரப்புவது நம் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்று நாடுகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்து கல்வியின் பொருட்டும் வாணி
கத்தின் பொருட்டும் , அரசியலின் பொருட்டும் செல்லும் தமிழரனைவரும், தமி
ழின் வரலாற்றையும் , தமிழிலக்கியங்களையும் நன்குணர்ந்து செல்வாராயின் *
அவரும் தமிழ்க் கலைத்தூதைப் பெரிதும் நிகழ்த்துவதற்கு வழிகளைக்காண்பர்.
சென்ற நூற்றாண்டுகளில் மேல்நாட்டார் சிலர் தமிழைப்பற்றி ஒருவாறு அறிந்திரு
க்கின்றனர். ஆயினும் பண்பாடு படைத்த சீனம் , ஜப்பான் முதலிய *
நாடுகளிலும் தமிழ்க்கலைகளும் பண்பும் பரவியிருந்த சாவகம், புட்பகம் *
போன்ற நாடுகளிலும் தமிழின் புகழை எடுத்துக் கூறும் தொண்டை ஆற்றுவார்
இலர். நாம் சென்ற பல ஆண்டுகளாக மேற்றிசை நோக்கியே நம் எண்ணங்—
களைச், செலுத்தி வருகின்றோம். ஆசியப் பரப்பில் நடுநட்டவராயிருக்கும் தமி
ழர் நாற்றிசையிலும் தம் எண்ணங்களைச் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றுவது
இன்றியமையாதது. இக்கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம், முன்னொருகால் தமிழர்
புத்த சமயத் தொண்டாற்றுவதற்கும் தம் வாணிகத்தைப் பெருக்குவதற்கும் *
சென்றிருந்தனர். இங்ஙனம் உண்டாகிய பண்புத் தொடர்களை நாம் இழப்பது
எதற்கு?

ஜப்பான் நாட்டில் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அக்கழகங்களில்
வடமொழிப் பயிற்சி சிறிதளவிலேனும் உள்ளது. ஆயின் தமிழ்ப்பயிற்சியோ, அற
வேயில்லை. " திராவிடக் கலைகளைப்பற்றியும், பண்பைப்பற்றியும் யாம் *
அறிய விரும்புகின்றனம். ஜப்பானிய மொழியில் அவற்றைப்பற்றி அறியத்தக்க *
நூல்கள் எமக்குக் கிடைத்தில. ஆங்கிலத்திலும் மிகக்குறைவே " என்று ஜப்பா
னில் கீழ்த்திசைக் கலைமொழி ஆசிரியர் ஒருவர் எனக்குக் கூறினர். ஆயினும்
பல நூல் நிலையங்களில் போப்பு ஐயருடைய தமிழிலக்கணக் கைச்சுவடி எனும்
துணை நூலினைக் கண்டேன்.

தோக்கியோப் பேரூரில் , மாருசென் என்பது ஒரு புத்தக விற்பனை
க்கடை. இங்கு புதுநூல்களையும், பழைய நூல்களையும் , விலைக்குப் பெற
லாம். அங்கு பழைய நூல் விற்பனை நிலையத்திற்குச் சென்றக்கால் போப்பு
ஐயருடைய பல நூல்களையும், தீட்சிதரின் சிலப்பதிகார மொழிப் பெயர்ப்
பையுங் கண்டேன்.

செய்தித்தாள்கள் ஜப்பானிய நாட்டில் மிகக் கூடிய வளம் பெற்றுள்ளன.
மைனிச்சி, அசாஹி என்னும் செய்தித் தாள்களுள் ஒவ்வொன்றும் ; முப்பது *
ஆயிரம் படிகளுக்கு மேல் , நாள்தோறும் செலவாகின்றன. இவற்றின் ஆசி
ரியர்கள் தங்கள் செய்தித்தாள்கள் வழியாக ஜப்பானிய மக்களுக்கு நற்சொற்
கள் சில கூறுமாறு என்னை வேண்டினர்கள். அப்போது " மேற்றிசை கீழ்த்—
திசை வேற்றுமைகள் ஒழிந்து உலகமாந்தர், தமிழ்ப்புலவரின் " யாதும் *
ஊரே யாவரும் கேளிர் " என்னும் மனப்பான்மையை வளர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினேன். இனி இவ்வாறே உலகின் வேறுபல இடங்களிலும் என் நற்சொல்லையும் கையெழுத்தையும் விரும்பியவருக்கும், விருந்தினரின் நூல்களிலும் சங்கப் புலவரின் இவ்வழகிய அடியினைத் தமிழ் எழுத்தில் * பொறித்து, அத்த மொழி பெயர்ப்பையும், கேட்பார் மொழியில் வரைந்தேன்: ஆங்கிலத்திலும் ஸ்பானிய மொழியிலும், இனியவாய் ஒலித்தன அச்சொற்கள்.....

Every country is my country

Every man is my kinsman

Todos los pais son mi pais

Todos los hombres son mis hermanos

பிற நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழைப்பற்றிய ஆங்கில நூல்கள் இல்லாமையை அறிந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திருவாளர். மணவாள இராமானுசம் அவர்கள் என் வேண்டுகோளுக்கு இசைந்து ஜப்பானியப் பல்கலைக் கழகங்களுக்குப் பல நூல்களை * நன்கொடையாக அளித்தார்கள். இவ்வாறு நன்கொடையாக நூல்களை உலகெங்கும் அனுப்பித் தமிழின் உரிமைகளை நிலைநாட்டவும் கூடும். தமிழ் நாட்டு வள்ளல்கள் தங்கள் தமிழ்த்தொண்டை இம்முறையில் நிகழ்த்தலாம்.

நான் தமிழ் நாட்டை விட்டுத் தோக்கியோவை அடைந்து இரண்டு கிழமைகளாயின. பின் நண்பர் ஒருவர் என்னை விருந்துக்கு அழைத் - தார். அவ்விருந்தில் என்னைப் பெருமகிழ்வூட்ட எண்ணி ஜப்பானிய உணவை வழங்காது, தமிழ் உணவாகிய சோறும் கறியும் வழங்கினார். உண்ணும் * போது அவர் தம் வானொலிப் பெட்டியை அழுத்தி, அதனை இயக்கினார். உடனே புதுடில்லியிலிருந்து தமிழ்ப் பாட்டுக் கேட்டது. நான் " இவ்வளவு தொலைவிலும் நாவிற்கும், செவிக்கும் தமிழ் விருந்து கிடைத்ததே "என எண்ணி மகிழ்ந்தேன். ஆயினும் புதுடில்லியிலிருந்து வந்த தமிழ்ச்செய்தியும், இசையும் வடமொழி ஒலிப்புடையனவாகவே இருந்தன. தமிழில் இல்லாத ஒலிப்புக்களையும் தோற்றங்களையும் இந்திய வானொலி நிலையத்திலிருந்து - இடைவிடாது பரப்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் ஒலி பரப்பு தமிழ்ஒலிப்புடையதாகவே அமையுமாறு தமிழர் கடைப்பிடியாய் நிற்றல், நம் * மொழியின் பாதுகாப்பிற்கு ஒரு அடிப்படையாகும்.

ஜப்பானிய மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடைய * மொழியன்று. ஆயினும் தமிழைப்போல ஒட்டுநிலை வகுப்பினைச் சார்ந்தது. ஜப்பானியச் செய்யுட்களில் இறைச்சி போன்ற சில பண்புகள் உள. நம் சங்க இலக்கிய அகப் பாடல்களின் உரையாசிரியர். அப்பாடல்களுக்குக்*

கொடு எழுதியிருப்பதுபோல ஜப்பானியப் பாடல்களுக்கும் அந்நா
ட்டுப் புலவர் கோடு எழுதியிருக்கின்றனர். தமிழ் ஒலிபரப்பு, சிறப்பாக *
ஜப்பானிய இலக்கியத்தில் தங்கா எனப்படும் செய்யுள் முப்பத்தோரசைகளை
ப்பேரெல்லையாகக் கொண்டு, நம் குறுந்தொகைச் செய்யுட்களைப்போல்
கருத்திலும் சொல்லிலும் ஒளிர்ந்து விளங்குகின்றது.

ஜப்பானியர் இயற்கையின் எழிலில் பெரிதும் ஈடுபட்டு வளர்பவர்.
மலர்களைச் செட்டில் ஒழுங்குபடுத்தி வைப்பதில் அவர் தம் பெண்மணிகளுக்குச்
சிறப்பான பயிற்சி அளித்து வருகின்றனர். ஆயினும் ஹவாய்த் தீவுகளில் மல
ர்களையும், மாலைகளையும் இன்னும் சிறக்கப் பேணுகின்றனர். ஹவாய்த்
தீவுகளுக்கு யான் சென்றபோது சங்க இலக்கியக் காலத்தின் நினைவு என்னை
அறியாமலே எனக்குத் தோன்றிற்று. ஏனெனில் அங்குத் துறைமுகத்துக்கு வந்த
அனைவரும் கண்ணியும், மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்தனர்.
விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூட்டினர். வழியனுப்புவோருக்கும் *
மாலைகளைச் சூட்டி விடையளித்தனர். பாடினர். அலோகா என்றும் **
ஹவாய் இசையினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணி
ந்து வந்திருந்தனர். இப்பெண்டிரும் ஆடவரும் சங்ககாலத் தமிழ் மக்களைப்-
போல எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனும் உயர்வு நவிற்சியன்று.

ஹவாய்த்தீவில் விண்ணும் மண்ணும் எழில் படைத்திருக்கின்றன..
தெளிவான் நீலவானம், நிலத்தைச் சூழ்ந்த பசுமையான ஒலிகடல் நீர், பற
வைகள் பூக்கள், மரஞ்செடிகள், இவை யாவும் நான் கண்ட வேறு ஊர்களில்
இல்லா நிறத்தையும், மணத்தையும் படைத்தனவாய் இருந்தன. என் உலகச்-
செலவில் நான் கண்ட நாடுகளில் ஹவாய்த் தீவுகளே எழிலிற் சிறந்தவை.
இங்குள்ள தட்ப வெப்பநிலைகள் அச்சந்தக்கன அல்ல. என்றும் உடல் நலத்
துக்கு உறுதுணையானவைகளே.

பசிபிக்குப் பெருங்கடலின் நடுவிலிருக்கும் இத்தீவுகள் கீழ்த்திசை -
நாடுகளையும், மேற்றிசை நாடுகளையும் ; இணைக்கும் பாலமாய் விளங்கி
ன்றன. ஹவாய்த்தீவில் நான் தங்கியபோது அங்கு கீழ்த்திசை மேற்றிசைத்
தத்துவப் பேரறிஞர் மாநாடு நிகழ்ந்தது. இத்தகைய பேரவையைக் கூட்டுவ
தற்கு இதைவிடப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுப்பது அரிது. ஹவா
ய்த் தீவுகளிலும் பொதுவாகப் பசிபிக்குப் பெருங்கடலின் தீவுகளிலும், நம்சங்
ககாலப் பழக்க வழக்கங்களிற் சில இடம்பெறுவது தோன்றுகின்றது. மலர்
களை அகவொழுக்கத்திற்கும், புறவொழுக்கத்திற்கும் அறிகுறிகளாகக் கையா
ண்டு வருகின்றனர். இந்நாட்டவர் முற்காலத்தில் பெரும்பாலும் இந்திய நாடு
களுடன் தொடர்புடையவராகவே இருந்திருப்பர் போலும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வரலாற்றை அறிய விரும்புபவர் ஆசிரியர் பீற்றர்பக்கு * (Peter Buck ) என்பவர் எழுதிய Vikings of the Sunrise என்னும் நூலைப் படித்து அறிக.

ஹாவாய்த்தீவில் வாட்டுமல் என்னும் இந்திய வணிகர் என்னை விருந்தாக் காக அழைத்திருந்தார். அவர் சிந்து மாகாணத்திலுள்ள கைதராபாத் என்னும் ஊரவர்: ஹாவாய்த்தீவில் பெருஞ்செல்வம் படைத்த வணிகராய் விளங்குகின்ற வர். அவர் அமெரிக்கப் பெண்மணியை மணம் செய்தவர். இம்மணத்தால் நிகழ்ந்த இந்திய அமெரிக்க உறவின் பயனாக. அவ்விருவரும் தம் செல்வத்தின் ஒரு பகுதியை முதற்பணமாக நிறுவி இந்தியாவில் அமெரிக்கக் கலைகளைப்பற்றியும் அமெரிக்காவில் இந்தியக் கலைகளைப்பற்றியும், ஆசிரியர் வழியாக அறிவுரை பரப்பி வருகின்றனர். இத்தொண்டிற்கு அவர் ஒதுக்கிய முதல் பதினைந்து ஆயிர வெண் பொற்காசுகள் ( பதினைந்து இலட்சம் ரூபா). இவ்வாறு தமிழ்ச்செல்வர் அனைவரும் முதல் திரட்டித் தமிழ்த்தொண்டு நிகழ்த்துவாராயின் நம் கலைகள் பாரெங்கும் பரவுவதற்கு வழிகாண்பர்.

ஹாவாய்த் தீவுகளில் மொலோக்காய் என்பது தனக்கென வாழாப்* பிறர்க்குரியாளன் தன்மை வரலாற்றில் பெயர் பெற்றது. இங்கே தான்அருள் மறைத் திருவாளர் தமியான் அடிகள் என்பார் , தொழுநோயினர் பொருட்டுத் தம் வாழ்க்கையை வேள்வி செய்தார். அவர் வாழ்ந்த இல்லத்தையும் * சூழ்நிலையையும் காணுமாறு ஆங்குச் சென்றேன். அவண் வதியுந் தொழு .*. நோயாளரைப் பேணி மேற்பார்த்து வரும் கன்னியர், தமிழ்நாட்டின்தொழு நோய் மருத்துவ நிலையங்களைப்பற்றி நன்கறிந்திருந்தனர். மொலோக்காய்க்குச் சென்ற முதற்றமிழன் நான் என்று எண்ணி அன்பர் நான் மீண்டும் வந்து * வான் ஊர்தி ஏறும் வரைக்கும் தமிழ்நாட்டின் பற்பலபொருள் பற்றி என்னை இடைவிடாது உசாவலாயினர்.

ஹாவாய்த் தீவுகளை ஐக்கிய அமெரிக்காவின் வாயில் என்று கூறுவர். இத்தீவுகளிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் மேற்குக் கரை இரண்டாயிரம் கல் தொலைவில் இருக்கின்றது. எனினும் ஹாவாய்த் தீவினர் அதனை அக்கரை * என்று வழங்குகின்றனர். நண்பகலில் வானூர்தி ஏறினால் அன்றுமாலை சன்பிரான்சிஸ்கோ என்னும் பேரூர்க்குப் போய்ச் சேரலாம். ஐக்கிய அமெரிக்காவில் இருப்பவர் பிறநாடுகளைப்பற்றியும் பிற மக்களைப்பற்றியும், பிற * இலக்கியங்களைப்பற்றியும் அறிய அவா உடையவர். அவர்களுடைய பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், கூட்டங்களிலும், வேற்றுநாட்டுச் சொற்பொழிவாளரை அழைப்பது பெருவழக்காம். சொற் பொழிவுகள் கேட்பதிலும் விருந்துகளுக் கூட்டங்களைக் கூட்டுவதிலும் விருந்தோடு விரிவுரைகள் நிகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துவதிலும், ஐக்கிய அமெரிக்கா பிறநாடுகளை விடத் தேர்ச்சி பெற்றது. ஆதலால் ஐக்கிய அமெரிக்காவில் ஓராண்டில் நான் தமிழைப்பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியது வியப்பன்று. பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும், கிழமைக்கு ஒருமுறை மாணவர் * பொதுக்கூட்டம் கூட்டி ஆசிரியரையும், பேரறிஞரையும் வரவழைத்துப் பல விரிவுரைகளையும் நிகழ்த்துவிப்பர். அங்ஙனம் அழைக்கப் பெறுபவர்களுக்கு இருநூறு அல்லது முன்னூறு வெண் பொற்காசுகளைச் சம்பளமாகக் கொடுப்பர். அங்கு சொல்வன்மையுடையவர் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலேயே தம் வாழ்நாட்களைக் கடத்தலாம். இப்பல்வேறு கழகங்களுக்குச் சொற்பொழிவாளரை அனுப்ப இதற்கென வணிகக்குழுக்கள் இருக்கின்றன.

இவ்வித் தமிழ்த் தொண்டாற்றுதற்கு அமெரிக்க வானொலி நிலையங்களும்* எனக்குப் பெருந்துணையாக இருந்தன. ஒவ்வொரு பெரிய நகரிலும் இரண்டு, மூன்று வானொலி நிலையங்கள் உண்டு. அவை என்னை அழைத்துப் பேட்டி வழியாகப் பத்துப் பதினைந்து வினாடிகள், என்னைப்பற்றியும், தமிழ்நாட்டைப்பற்றியும் தமிழ்க்கலைகளைப்பற்றியும் இந்திய அரசியலமைப்பைப் பற்றியும் வினவினர். ஒளிக்காட்சி வழியாகவும் என்னை மக்களுக்குக் காட்டினர். அயலாரொருவர் ஒரு ஊருக்குச் சென்றால் அவ்வூர் செய்தித்தாள் செயலாளர் அவரைத் தேடிப்பிடித்து தம் செய்தித்தாளுக்கு வேண்டிய பொருள் பற்றிக் கேட்டு எழுதுவதில், மிக்க ஆர்வம் காட்டுவர், இவ்வாறு விரிவுரை வாயிலாகவும், * வானொலி மூலமாகவும், செய்தித்தாள் வழியாகவும் தமிழ்த்தூது நிகழ்த்துவது அமெரிக்காவில் எளிதாகும்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தமிழைப்பற்றியும் தென்னாட்டைப்பற்றியும் அறிந்தவர் ஒரு சிலரே. பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில்* தமிழ் கற்பிக்கவல்ல ஆசிரியர் ஒருவரைப் பெற முயன்றனர். ஆயினும் ஒருவரைக் கிடைக்கப் பெற்றனரோ, பெற்றிலரோ, நான் அறியேன். நியூயார்க்கில் இருக்கும் மொழிப்பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் என்னை ஆசிரியராக இருக்கும்படி கேட்டனர். சில பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து மூன்று திங்கள் காலம் பாடம் நடத்த அழைத்தனர். எனக்குப் பல ஊர்களில் விரிவுரை நிகழ்த்தவுடன் ஓரிடத்தில் கற்றுக்கொடுப்பது அரிதாதலின் நான் உடன்படவில்லை. கொலம்பியா, ஹவார்டு, கலிபோர்னியா போன்ற பல்கலைக்கழகங்களில் கீழ்த்திசை நாடுகளைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி நடந்து வருகின்றது. ஆயினும் தமிழைப்பற்றி ஆராய்ச்சி மிகக்குறைவேயாம். ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில், இந்தியக் கலைகளைப்பற்றி விரிவுரை நிகழ்த்தும்* ஆசிரியர் ஒருவருக்கு பி. ரி. ஸ்ரீநிவாச ஐயங்கார் ஆங்கிலத்தில் எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வரலாற்றைக் கொடுத்தேன். அவர் அந்நூல் தனக்குப் புதிய*
வொரு உலகைக் காட்டியதாகப் பெருவகையுடன் கூறினர். மொழி நூலைக்
கற்ற சிலர் திராவிட மொழிகளின் தனித்தன்மையை ஒருவாறு உணர்ந்திருந்த
னர். ஆயினும் இந்திய மொழி என்றால் சமஸ்கிருதம் என்றும், இந்தியக்கலை
கள் என்றால், வடகலைகள் என்றும், இந்திய நாடு என்றால், சிந்து கங்கைப்
பெருவெளி என்றும், இந்தியப் பேரூர்கள் என்றால், பம்பாய், டில்லி, கல்க
த்தா என்றும் நினைக்கும் அளவிற்கு இந்தியாவின் வடபிரிவின் பெருமையையே
இன்றும் மாசுபட உணர்ந்துள்ளனர்.

இந்நாடுகளில் நான் ஆற்றிய விரிவுரைகளில் பெரும்பாலும் தமிழைப்பற்
றிய சில பொதுக்குறிப்புக்களே அமைந்துள்ளன. தமிழைப்பற்றி நேரே அறி
யார்க்கு ஆராய்ச்சியுரை நிகழ்த்துவதற்கு இடமின்று. பல்வேறு கழகங்களிலும்
ஊர்களிலும் வெவ்வேறு குழுவினர்க்கு உரை நிகழ்த்தியதால், ஏறக்குறைய *
நான்கு ஐந்து விரிவுரைகளையும் அதே கருத்துக்களையும் மீண்டும் மீண்டும் கூற
வதாயிற்று. அமெரிக்கா இற்றை ஞான்று தோன்றிய நாடு. இன்றும் இளமை
நிலையில் இருக்கின்றது. ஒரு நூற்றாண்டு இருநூற்றாண்டுகள் படைத்த இடங்கள்
அல்லது பொருட்கள், என்றால் அமெரிக்கருக்கு மிகப் பழைய பொருட்களா
கவும் இடங்களாகவும் தோன்றுவன. ஆதலால் அவர்கட்குத் தமிழர் பழமை
யையும், தமிழரின் பண்டை வாணிகத்தையும், யவனர், உரோமர் போன்
றோருடன் தமிழ்நாட்டு நட்பையும் கூறியபோது, அவர்க்குப் பெரிதும் வியப்பு
உண்டாயிற்று. அவருட் பெரும்பாலோர் இந்திய இலங்கை வறுமை பற்றியும்,
உடல் நலம் குன்றிய மக்கள் பற்றியும், நோயுற்றோர்கள் பற்றியும் கேள்வி
ப்பட்டிருந்தனர். எனினும் தமிழ்நாட்டின் கலைகளை, தமிழ் இலக்கிய சிறப்பெ
ருக்கை, தமிழ் மொழியின் சிறப்பியல்பை, பழந்தமிழ் காதற்பாக்களை பத்தி
மாலைகளைப்பற்றிக் கேள்விப்பட்டவர் அல்லர். அவர்கட்குத் தமிழிலக்கியத்தி
லிருந்து நான் மொழி பெயர்ப்புடன் கூறிய சில பகுதிகள் இவை.

திருக்குறளில் " அகரமுதல எழுத்தெல்லாம், ஆதி பகவன் முதற்றே
யுலகு" என்னும் குறள் வெண்பாவை விவிலிய நூலில் வரும் " நானே அகர
மாயிருக்கின்றேன்." என்னும் திருமொழியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்படி கேட்
டேன். மேலும் " யாம் இரப்பவை பொன்னும் பொருளும், போகமும் *
அல்ல" " தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ, கல்லினுள் மணியும்
நீ, சொல்லினுள் வாய்மையும் நீ, " என்ற பரிபாடற் பகுதிகளை இசையுட
ன்றந்து விளக்கினேன். இனித் தமிழ்மொழியில் வியத்தகும் இயல்புகளையும் *
தமிழரின் இயற்கை ஈடுபாட்டினையும் ஐந்திணை இலக்கணத்தையும், மலர்மா
லைகளின் நம் முன்னோர் கையாண்ட முறைகளையும் எடுத்துக் கூறினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கலையின் எழில் வடிவத்தைப்பற்றி இப்பொழுதும் எனக்கு அமெரிக்கர் ஓலைகள் விடுத்துத் தெளிந்து கொள்கின்றனர். தமிழைப்பற்றி மேடை உரைகளை ஆங்கிலத்தில் நடாத்திய எனக்குத் தமிழில் உரையாடுவதற்கோ வாய்ப்புக் கிடைத்ததே இல்லை. வானொலிப் பேட்டிகளில் யாதேனும் தமிழ்ச் சொல்லும்படி கேட்டால் பாரதியாரின் " செந்தமிழ்நாடு " "யாமறிந்த மொழிகளிலே" என்ற தலைப்புப் பெற்ற செய்யுட்களில் ஒன்றைக் கூறுவேன். பின்முறை பேட்டியின் பதிவை நானே தமிழொலி கேட்பதற்காக மீண்டும் ஓர்ந்து கேட்டின்புறுவேன். தேநீர் விருந்துகளிலும், பிறநண்பர் கூட்டங்களிலும் என்னைத் தமிழிற் பாடக் கேட்கும்போது தமிழ் இசைப்பயிற்சி மிகுதியாகப் பெறாத நான் " தமிழ் மணம் கமழ வேண்டும்" " வெண்ணிலாவும் வானும் போலே" என்ற பாட்டுக்களைப் பாடுவேன். " செந்தமிழ்நாட்டைக் " கும்மியாய்ப் பாட மீண்டும் மீண்டும் கேட்பர். நான் பாட அவர் கைதட்டித் தாளம் போடுவர். தமிழிசை அறியார் மாட்டுத் திடமுடன்பாடுவது எளிதெனச் செயலில் அறிந்துள்ளேன்.

அமெரிக்காவில் நான் கண்ட தமிழர் ஒரு சிலரே ஆயினும் நான் அமெரிக்காவில் கண்ட தமிழ்ப்பற்றுடைய தமிழர்களுள், நாற்கூடி இயக்கத்தின்* தலைவராகிய திருவாளர் அரங்கநாதனும் தமிழிற் புத்தகங்கள் இயற்றிய * திருவாட்டி உருக்குமணி அம்மையாரும் சிறந்தவர். இவர் இருவரும் என்னைப்போல உலகில் தமிழ்த்தாய் நிகழ்த்தும் இன்றியமையாத் தன்மையை நன்குணர்ந்தோர். உருக்குமணி அம்மையார் இந்தியக் கலைகளைப்பற்றி பல விரிவுரைகள் அமெரிக்காவின் பல பகுதிகளில் நிகழ்த்தி வருகின்றனர்.

பிறநாட்டில் வைகுங்கால், சிறிதேனும் தமிழ் மணம் கமழ்ந்தால் நாம் மட்டற்ற மகிழ்ச்சி எய்துவது இயல்பன்றோ? ஒருகால் இலகுவாடியா வானொலி நிலையத்தில் அமெரிக்கர் ஒருவர் என் முகவெட்டைக் கண்டதும் என்னை அணுகி " நீவிர் தமிழ் நாட்டவரோ" என்று வினவினர், அவ்வினா என் செவிக்குத் தேனாய் இருந்தது, கீற்றே எட்டும் எட்டுவதோரின் தலை நகர்க்கண் உள்ள அரசியற் கலைச் சாலையில் ஒரு சொற்பொழிவு முடிந்ததும் ஒருவர் ஓடிவந்து தமிழில் விவிலிய நூலைக்காட்டி " உங்கள் நாகரிகத்தைப் பற்றிக் கேள்வியுற்றே இந்நூலை வருவித்தேன். இனிமேல் தமிழ் பயின்று * இந்நூலைத் தமிழிற் படிக்கப் போகின்றேன் என்றார். வேறோர் இடத்தில்* திருத் தொண்டாற்றும் ஆங்கிலக் கன்னியர் ஒருவர் " வணக்கம் அடிகள்,* நீங்கள் எந்த ஊர்? என மழலைத் தமிழிற் கேட்டார். இவர் முன்னொரு காலம் நாகர் கோவில் மடத்தில் இருந்ததாகவும், இப்போது மணிலாவில் திருத்தொண்டு செய்து வருவதாகவும், அங்கு கூடத் தமிழை இன்னும் பயின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருகின்றதாகவும் அறிந்தேன். வேறொரு நாள் ஐக்கிய நாட்டுப்பேரவையிலிருக்கும் ஏதோ கூட்டத்திற்குச் சென்றபோது தமிழ்நாட்டுத் தமிழ்ச் செய்தித்தாள்கள் சில அங்கிருக்கக்கண்டு அவற்றை விரைவாகத் திறந்து படித்தேன். என் கண்கள் முதன்முதல் பார்த்தக் கட்டுரை பெரும்பேராசிரியர் உ.வே.சாமிநாதையர் நினைவு நாளைப்பற்றியதாயிருந்தது. நியூயார்க்கில் ஐக்கிய நாட்டுப் பேரவைத் ஏதோ கூட்டத்தில், சுதேசமித்திரன் செய்தித் தாளிலிருந்து, சாமிநாதையரின் சங்க நூற்பதிப்புக்களைப்பற்றி படிக்கிறதென்பதில் தமிழன் உள்ளம் இறும்பூதினை எய்தாது நிற்பது எங்ஙனம்?

நியூயார்க்கிலும் லொஸ் அஞ்சலீசிலும், சன்பிரான்சிஸ்கோவிலும் இந்திய உணவுச் சாலைகள் உள. நியூயார்க்கில் இருப்பவை நான்கு. அவற்றின் பெயர் Rajah Prince, East India Curry Shop, Indo - Ceylon Inn என்பன. இங்கு அவர்கள் பரிமாறும் கறிகள் பல. இவற்றின் உணவு நிரலில் "கட்டை சம்பல்", "சிங்கள மிளகுதண்ணீர்", "சென்னைக் கறியும் * சோறும்", "தமிழ் இலிப்பு" என்றெல்லாம் விளம்பரம் செய்திருக்கின்றனர். இந்தியா உலகுக்கு ஈந்த நலங்களில் கறியே சிறந்ததென்று ஒரு ஆசிரியர், இடக்காகச் செப்பிருராயினும், ஒரு நாட்டவரின் நாகரீகத்தை அறிவதற்காக அவரின் உணவும் ஒரு வாயிலாவது உண்மை. என் அமெரிக்க நண்பருடன் அமைதியாய் உரையாட விரும்பும்போதெல்லாம் அவரை இவ்விந்திய* உணவுச் சாலைகட்கு என் விருந்தாக அழைப்பேன். அமெரிக்கரைச் செவிக்குணவு தருதலால் மட்டுமன்றி, வயிற்றுக்குணவு தருவதாலும் வெல்லமுடியும். நான் முதன்முதல் "இராஜா" என்னும் உணவுச் சாலைக்குச் சென்றபோது, என்னைத் தென்னாட்டவரென்று உணர்ந்த ஊழியன் ஹிந்தி இசைத்தட்டுக்களை நீக்கி "தெருவில் வாராண்டி" என்ற தமிழிசைத்தட்டைப் போட்டான். நியூயார்க்கில் தெருவில் வாராண்டி கேட்டதை நினைக்கையில் இன்னும் நகையாகின்றது.

வேற்று நாடுகளில் வாழும்போது தமிழ்ப்பற்றும் ஆர்வமும் மிகுவது, வேற்று நாடுகளில் வாழ்ந்துள்ள தமிழர் உண்மையென உணர்வர். உரோம மாநகரில் நான் உறைந்த ஒரு மடத்திலும், திருமறை நூற்கல்வி பயின்ற பல்கலைக்கழகத்திலும், நாற்பத்து மூன்று வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்னுடன் மாணாக்கராய் இருந்தனர். அவருடன் ஐந்து ஆண்டுகள் * ( 1934 - 1938) வாழ்ந்ததன் பயனாகவே பரந்த உலக மனப்பான்மை படைத்தேனாயினேன். அவரிடை வதியுங்கால், என் தமிழ்ப்பற்று மிகுந்ததே அன்றிக் குறைந்திலது. அயல் நாட்டுத் தொடர்பாலும் நம்நாட்டு மொழிப்

பற்று தனி சிறந்து வளர்கின்றது. பிறமொழிகளுடன் தமிழைச் சீர்
தூக்கிப் பார்க்கும் பெரும் பேற்றினையும் அடைகின்றோம். அவ்வாண்டுகளில் *
உரோமை மாநகரில் ஒருங்கு வாழ்ந்த தமிழர் எண்மர். நாங்கள் வீரமாமு
னிவர் கழகம் என ஒன்று ஒருமடத்தில் நிறுவி தமிழை ஆண்டும் ஒரு சிறிதும்பயி
ன்று வந்தனம். வத்திக்கான் வானொலி நிலையத்திலிருந்து தமிழில் ஒலிபரப்பும்
வாய்ப்பும் பன்முறை பெற்றோம். அங்ஙனம் ஒலிபரப்புந்தோறும் " சேமமுறத்
தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை" செய்தோம் எனக் கருதி
க்களிப்புற்றோம். ஆங்கு வதியும் காலத்தே தான் அயல்நாடு செல்லும்,
தமிழ் மாணவர் தமிழ்ப்பயிற்சி மிக்குளரேல் எத்துணை உயரிய தமிழ்த்தொண்டு
இயற்றுதல் கூடும் என்பது இனிது உணர்ந்தேன் . இலண்டன் மாநகரிலும் தமிழ்
மாணவர் ஒருங்கிணைந்து தமிழ்க்கழகம் நிறுவியுள்ளனர். என்பது இதனைப் படி
ப்போர் அறிந்திருத்தல் கூடும்.

தமிழ்த் தொண்டிற்கென வேற்றுநாடு செல்வோர் திருவள்ளுவர் கூறும்*
மூன்று பண்புகளில் முதன்மை சான்றவராய் இருத்தல். இன்றியமையாது வேண்ட
ப்படுவதொன்றாகும்.

" அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு"

இயற்கையாகிய அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும்
பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும் என, நன்கு மதித்தற்கேது*
வாய இம்மூன்றன் செறிவு உடையவன். அவ்வினைக்குச் செல்லுதல் வேண்டும்..
அவ்வண்ணம் அப்பண்பு அமையப்பெற்ற தூதர் அவ்வேற்று நாடுகளில் அவ்வே
ற்று மொழியை நன்குப் பேச அறிந்த மேடைக்கலை வல்லுனராய் இருத்தல்
வேண்டும். என்பது ஒருதலை. வேற்று நாட்டினரிடை, அவர்முறையில், அவர்
பழக்க வழக்கங்களின்படியே அவர் பேசுவதுபோல அவர் மொழியைப் பேசி
அவர் உண்பதுபோல அவர் உணவை உண்டு அவருடன் பழகுதல் வேண்டும்....

". அமெரிக்காவில் மூன்று திங்கள் தமிழர் எவரையும் காணும்
வாய்ப்புப் பெறாத நான் தமிழின் ஒலி இன்பத்தை நுகரக்கருதி ஒருநாள் *
திருக்குறளை எடுத்து வாய்விட்டுப் படிக்கத் தொடங்கினேன். அவ்வேலைத் திருந்
தனம் முதல்முதல் நான் கண்ட குறட்பா.

" இருவே றுலகத் தியற்கை : திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

என்பது அந்நேரத்தில் இச்செய்யுளின் ஆழ்ந்த கருத்தொன்று *
எனக்குத் தோன்றிற்று .

அந்த உரைகாரர் கருத்துமன்று மொழிப்பற்றிய கருத்துமன்று. என் அருள்மறையின் கருத்தொன்று அச்சொற்களில் பொதிந்திருப்பது கண்டேன். அவ்வடிகளின் மெய்ம்மையையும் இனிமையையும் நுகர்ந்தேன். அப்பொழுதும் இத்தனைச் சிறப்புப் பெற்ற இலக்கியத்தையும், இதனைத் தோற்றுவித்த மொழியையும், பரப்புதல் வேண்டுமெனும் துணிவும் மிகுதியாய் ஏற்பட்டது. திசைநோக்கி முருகனின் கோயிலையும், தமிழ் மொழியை * எனக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனையும். கைகூப்பி வணங்கினேன்..

தமிழ்க் கலைகளை விரிவுரைகளோடு வெள்ளித்திரை வாயிலாகவும் விளக்குவதற்குத் துணையாக என்பால் இரு சினிமாப் படச்சுருள்கள் இருந்தன. அவற்றில் ஒன்று தமிழ்நாட்டின் கட்டடங்களையும் , மாளிகைகளையும் கோவில்களையும் காட்டுவது. பிறிதொன்று தமிழ் நாட்டியக் கலையை உணர்த்துவது. அவ்விரு படங்களையும் மேல்நாட்டினர் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்றனர். பன்னீராட்டைப் பெறும்பை "தில்லானா" ஆடிய படத்தைக் கண்ணுற்று மகிழாதார் இலர். "நீங்கள் காட்டிய* நடனப்படம் இள அருவியின் சலசலவென்னும் ஓட்டம், போன்று இருந்தது." என்று அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் அழகாக எனக்குக் கூறினார்.

வட அமெரிக்காவில் மாந்தர் தமிழ்க் கலைகளைப்பற்றி அறியப் பெரும் அவாவுடையவராய் இருக்கின்றனர். தென்னமெரிக்காவிலோ, * பண்டை நாகரிகம் படைத்தவரும்; பழங்குடிகளுமான இலத்தீன் வழித்தோ* தோன்றல்கள் இந்தியாவின் பெருமையை நன்கு அறிந்திருப்பதாய்த் தெரிந்தது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பழைய நாகரிகங்கள் அரும்பி மலர்ந்து வாடின. மெக்சிகோவில் அஸ்தெக்கரும், தோல்தெக்கரும், பெருவில் இன்காகரும், வரலாற்று நூல்களில் பெயரும் புகழும்* பெற்ற மக்கள், அவர்களுடைய கோட்டைகளையும் மாளிகைகளையும் * நான் கண்டபோது திராவிட மக்களின் கட்டடத் திறன் என் நினைவிலே* தோன்றியது. அவர்கள் இத்துறையில் கட்டடக் கலைஞருடைய வியப்பையும் புகழையும் பெற்றவராயினும் இலக்கிய நூல்களை யாத்தவர்கள் அல்லர். இப்பண்டை நாகரிகங்களுடன் தமிழ்ப் பண்பு நிலையைப் படித்துப் பிணைத்து, ஆராய்ச்சி செய்வதும், தமிழாராய்ச்சியின் புதியதொரு துறையாகும்.

தென்னமெரிக்காவில் ஒரு திங்களாகப் பலநாடுகளுக்குச் சென்று — விரிவுரைகள் நிகழ்த்தி வந்தேன். அங்குள்ள செய்தித்தாள்கள் தமிழையும்

என் கருத்துக்களையும் பற்றிய என் உரைகளை விரிவாக எடுத்துக்
கூறின. அவர்கள் தங்கள் ஊர்களில் நான் தங்கவேண்டுமென்ற என்னைக் கே-
ட்டனர். அங்கு செல்லும் தமிழர் மிகு சில ராகவின் எளிற் பழமையையும்*
புதுமையையும் ஒருங்கே கண்டனர். தம் மொழியாகிய இஸ்பானிய மொழியி
லும் நான் தமிழ்ப் பண்பினை எடுத்துக் கூறியது அவர்களுக்குப் பெரும் மகிழ்
ச்சியைக் கொடுத்தது. தென்னமெரிக்க நாடுகளில் ஆர்செண்டீனா என்ற நாடு
யரசு முன்னேற்றத்தில் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது. அங்குள்ள பல்க*
லைக்கழகங்கள் இந்தியக் கலைகளை அறிய விரும்புகின்றன. அங்கெல்லாம்*
நம்மவர் தமிழ்த்தூதாகச் சென்று விரிவுரைகள் நிகழ்த்துதல் வேண்டும்...
நிலப்பிரிவையும் மக்கள் தொகையையும் ஒருங்கே ஆராயும்போது இஸ்பானி
யரின் மொழி ஆங்கிலத்தைப்போல உலகில் முதன்மை பெற்றிருப்பதால் ஆங்
கிலத்தில் நம் நூல்களை மொழி பெயர்ப்பதுபோல் இஸ்பானிய மொழியிலு
-ம் அவற்றை மொழி பெயர்த்தால் உலகிற் பலர் நம்மைப்பற்றி அறியவழி
காண்போம்.

வட அமெரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் பதினொரு திங்கள் *
நான் தங்கியிருந்தலின் பின்னர்த் தொண்டியற்ற நேரமின்மையால் விரைந்து—
வீட்டுக்குத் திரும்ப வேண்டுவதாயிற்று. எனவே இரு திங்களுக்குள் வடவாபிரி
க்காவின் பழைய ஊர்களையும் எகிப்து நாட்டையும் பலத்தீன் சீரியாபோன்
றவிடங்களில் பண்டை நாகரீகங்களின் நிலைக்களங்களையும் பார்த்துத் திரும்
பினேன்.

இதற்கு இடையில் கலைக்கு உறைவிடமாய் விளங்கும் உரோமாபுரி
க்கு புனித ஆண்டின் வரங்களைப் பெறுமாறு, மீண்டும் சென்றேன். நிலக்கட
லாகிய நடுநிலைக்கடலை உடுத்திய நாடுகள், என்றும் பண்பாட்டில் சிறந்த
வையாகும். அவற்றை இன்டம் கூர்ந்து ஆராய்ந்து ஆங்குள்ள மக்களுக்கெதிர்
காலத்தில் தமிழ்த்தூது நிகழ்த்துமாறு எனக்குப் பல அழைப்புகள் வந்து*
சேர்ந்தன. அத்தொண்டை ஆற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைப்பது எதிர்கா
லத்தின் மறைபொருள்..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பழக்கங்கள்
***************

S.Muthulingam B.Sc.,(Cey.) M.A.Ph.D (Lond.)
Department of Educational Psychology
University of Colombo

காலையில் எழுந்து பல் துலக்கியோ அல்லது பல் துலக்காமலோ தேனீர் அருந்துதல், பொடிபோடுதல், புகைபிடித்தல், அதிகாலையில் முழுகுதல் போன்ற பல செயல்களைப் பலர் தமது வாழ்க்கையிலேயே கடைப்பிடிக்கின்றனர். இவற்றைப் பழக்கங்கள் என்கின்றோம். சிலர் மனதுக்குள்ளேயே படிப்பது, சிலர் உரக்கப் படிப்பது, வேறு சிலர் ரேடியோ வைத் திருப்பி இசையொலியினுள்ளே தமது சிந்தனை வேலைகளில் ஈடுபடுவது, வேறு சிலர் அமைதியான இடத்தில் இருந்து சிந்திப்பது, இவ்வாறு பல பழக்கங்கள் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். ஆகையால் பழக்கங்கள் நல்லவையாகவும் இருக்கலாம், கெட்டவையாகவும் இருக்கலாம். உடற் செயல்களைக் கொண்டவையாகவும் இருக்கலாம். உளச் செயல்களைக் கொண்டவையாகவும் இருக்கலாம் என்பதை நாம் முதலில் அறிதல் வேண்டும்.

பாதை இல்லாத இடங்களில் சிலவேளைகளில் மக்கள் குறுக்கே நடப்பதால் ஒற்றையடிப்பாதை புதிதாக உண்டாவதை நாம் அறிவோம். முதல் தடவை ஒருவர் நடக்கும்போது அங்கே கல்லும் முள்ளும் பல தடைகளும் இருந்திருக்கும். ஆனால் மீண்டும் மீண்டும் அப்பாதைவழியே பலர் நடந்தால் தடைகள் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கப்பட்டவுடன் நல்ல [illegible]ந்த பாதை ஒன்று ஏற்பட்டுவிடும். பழக்கங்கள் ஏற்படுவது இவ்வாறே.

ஒருவர் ஒரு பழக்கத்தைப் பெறுகின்றார் என்னும்போது, அவர் ஒரு செயலைக் கற்கின்றார் என்பதாகும். ஒரு தூண்டி உடலிலேயோ பொறியைத் தாக்கும்போது நரம்புத் தொழிற்பாட்டின் விளைவாக மூளையில் ஒரு பதிவு ஏற்படுகின்றது. ஒரே விதமான தூண்டி மீண்டும் மீண்டும், ஏற்படும்போது தூண்டி - துலங்கல் தொடர்பு வலுவடைகின்றது. நாளடைவில் ஒருவித பிரயாசையும், இன்றி அத்தூண்டிக்குக் குறிப்பிட்ட வகையில் துலங்கல் ஏற்படும். இவ்வாறு மூளையின் பதிவுகள் ஆழ்ந்த உடனே ஏற்படும் துலங்கல்களே பழக்கங்களாகும். எனவே பழக்கங்கள் ஏற்படுவதற்குப் பயிற்சி வேண்டும் என்பது புலனாகின்றது. இயற்கையாகவும், செயற்கையாகவும், குழந்தைகள் பிறக்கிற வயதிலிருந்தே தமது பொறிகளின் மூலமாக அறிவைத் தேட ஆரம்பிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation

குழந்தைப் பருவத்திலிருந்தே உடலுறுப்புக்கள் வளர்ச்சியடைந்து முதிர்ச்சி பெற ஆரம்பிக்கின்றன. அவை முதிர்ச்சியடைந்து உறுதிப்பட்டுவிட்டால் பிறகு அவை நாம் விரும்பும் முறையில் வளைவதோ அல்லது வேறெந்த வகையிலாவது இயங்கவோ செய்வது கடினம். ஆகையால் எந்த வகையில் உறுப்புக்களும், உள்ளமும் தொழிலாற்றவேண்டுமோ அவ்வகையில் அவை தொழிலாற்றக்கூடிய பழக்கங்களை இளம் வயதிலிருந்தே பயிற்சி செய்தல் அவசியமாகும். மேற்கூறிய காரணங்களினாலேயே தீய பழக்கங்கள் ஏற்பட்டு விட்டால் அவற்றைப் போக்குவது கடினம். எந்த எந்தப் பழக்கங்கள் எந்த எந்த வகையில் அமைய வேண்டுமோ, அவை ஆரம்பத்திலிருந்தே அவ்வாறு அமையுமாறு செய்தல் வேண்டும்.

அரைகுறையான வகையில் திருப்தி அடைந்து விடக்கூடாது. அவ்வாறு அமையுமானால் அவற்றைத் திருத்துவது, அல்லது அவற்றின் குறைகளைப் போக்கிச் செம்மைப்படுத்துவது, கடினமாகும். உதாரணமாக ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளுக்குக் கையெழுத்தை நன்குப் பழக்கும் அனுபவம் ஏற்படவேண்டும். இவை விடுபட்டால் குழந்தைகள் தாமே நாளடைவில் எல்லாம் சரியாய்ப் போய்விடும்; தற்சமயம் எப்படி வேண்டுமானாலும் எழுதட்டும் என்று இருந்து விட்டால், பிறகு கையெழுத்தில் நேர்த்தியையோ தனிப்பட்ட எழுத்துக்களை எழுதுகின்ற விதத்தையோ மாற்றுவது கடினமாகும். அநேக எழுத்துக்களை, நாம் எழுதும் விதம், அவற்றைத் தொடுத்தெழுதும் விதம், 8 போன்ற இலக்கங்களை எழுதும் விதம் ஆகியவற்றை நாம் கவனித்தால் விளங்கும்.

குழந்தைகள் அதிகாலையில் எழுந்திருத்தல்; காலைக் கடன்களை முடித்துப் பாடசாலைக்குச் செல்லல். சரியான வேளையில் சாப்பிடல்; விளையாடல்; உறங்குதல் முதலியவை இவ்வாறு ஆரம்பத்திலிருந்தே கற்கப்படுவனவாகும். மேலும் உட்காருதல், நிற்றல், நடத்தல் ஆகியவற்றில் ஒழுங்கு, படிக்கும்போது சரியாக உச்சரிப்பது, ண — ன; ழ — ள; ற — ர; போன்றவைகளைச் சரியாக உச்சரிப்பு^ பிறருக்கு மரியாதை செலுத்துதல்; தாய் தந்தையருடன் நடந்து கொள்ளும் முறை, ஆகியவற்றில் பிழைகள் ஆரம்பத்திலேயே பின்னர்* மாற்றுவது கடினமாகிவிடும். அவ்வாறே எண்களைக் கூட்டும்போது * விரல்களைப் பயன்படுத்தாது கூட்டல், எழுதும்போது வரிகோணாமல் அழகாக இடம் விட்டு எழுதல், போன்றவையும் இளம் வயதிலிருந்தே பழக்கப்பட வேண்டியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுவந்த பலர் இன்னும் கைவிரலைக் கொ
ண்டே கூட்டுவதை நாமறிவோம். இவ்வகையாகச் சரியான பழக்கங்
கள் ஏற்படும்போது வீடு, பாடசாலை, ஆகியவற்றிலுள்ளோர்க
ளும் கவனமாய்க் கவனிக்கவேண்டும்.

பழக்கங்கள் சரியான முறையில் இளம் வயதிலி
ருந்தே ஏற்படவேண்டும் என்பதை அறிந்தோம். எனினும் அவ
ற்றை எவ்வாறு கற்கவேண்டும் என்பதை இனி நோக்குவோம். கற்ற
லைப் பற்றிய செயல்முறைகளில் பயிற்சி விதி, பயன்விதி ஆகியன முக்
கியமாகும். பழக்கங்கள் ஏற்பட மீண்டும் மீண்டும் செய்தல் அவசியம்
ஆகும். எவை திருப்தியான விளைவைக் கொடுக்கின்றனவோ அவை மீண்
டும் செய்யப்படுவது இயல்பு. ஆகையால் பழக்கத்தை ஏற்படுத்துவதி
ல் இவ்விதிகளை அனுசரிக்க வேண்டும். அதாவது சந்தோசமாக நல்ல
முறையில் வெற்றி தரும் செயல்கள் மீண்டும் மீண்டும் செய்யப்படவேண்
டும். அதற்கு வாய்ப்புக்கள் அவசியமாகும். மேலும் குறித்த ஒரு
பழக்கத்தைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்தும்போது அதனைக் ...
கொஞ்சம் கொஞ்சமாகப் பழக்குதலும், ஒவ்வொரு நிலையிலும் —
பிள்ளை நாம் எதிர்பார்க்கும் நல்ல செயல்களைச் செய்யும்போது
அதற்கு வெகுமதி கொடுத்து அச்செயலை மீள வலியுறுத்துதல் மூலம்
வலுவடையச் செய்தலும், சிறந்த முறைகளாகும். பிழையான செய
ல்களுக்கு மீள வலியுறுத்தல் அளிக்கப்படாவிட்டால் அவை மறக்கப்பட்
டுவிடும்.

இவ்வாறு ஒரு திட்டத்தை நாம் கைக்கொ
ள்வோமானால் ஒரு பிள்ளையை நல்ல பழக்கமுடையவனாக உருவாக்க
முடியும் என்று உளவியலாளர் "ஸ்கின்னர்" கருதினார். சாகசச்
செயல்களைச் செய்யும் சர்க்கஸ் மிருகங்களையும் இவ்வாறே கற்பிக்
கின்றனர். ஒருவனைத் தீயவனாக்குவதும் இவ்வாறான மீள வலியுறுத்தல்
முறைகளேயாகும். எப்பழக்கங்களை நாம் கற்கவேண்டும். ஏன் கற்
கவேண்டும்? அவை எவ்வாறு தினசரி வாழ்வில் பயன்படும் என்று பிள்
ளைகள் தெரிந்திருப்பாரானால் பழக்கங்கள் எளிதில் ஏற்படும் எனினும்
அவ்வாறான அறிவு ஏற்பட வயது முதிர்ச்சி ஆகியன தேவை. எதனைக்
கற்பதும், அதில் ஒரு நோக்கம் அல்லது இலக்கு இருத்தல் வேண்டும்.
தடைகள் ஏற்பட்டால் எடுத்த முயற்சியைக் கைவிடுதல் கூடாது. —
விடாமுயற்சி இலட்சியம் ஆகியன நற்பழக்கங்கள் ஏற்பட அவசியமான
வை. நீந்தக் கற்பவன் நீரில் இறங்கித்தான் கை.கால் இயக்கங்
களிலேயே நீந்தக் கற்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation

இதற்கு விடாமுயற்சி வேண்டும். இதற்குத் தடை ஏற்படுமானால் அவற்றைப் பொருட்படுத்தக்கூடாது. பிறர் நம்மை ஏளனம் செய்கின்றனர். நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றனர். என்று அவர் நினைப்பாரானால் நீந்தக் கற்கமுடியாது. இவ்வாறே சிகரட் பிடிப்பவன் அல்லது குடிகாரன் தனது தீப்பழக்கத்தை கைவிட வேண்டும் என்று தீர்மானித்தால் அதனை விதிவிலக்கில்லாமல் நிறைவேற்ற வேண்டும். மேலும் தீய பழக்கத்தினைக் கைவிட விட்டுவிட்டு ஒருவன் அப்பழக்கத்துக்கு மாறான ஒரு நற்பழக்கத்தைப் பயில வேண்டும்.

வாழ்க்கையில் எமது காலம், சக்தி ஆகியவற்றைச் சிக்கனமாகச் செலவிடுவதற்குப் பழக்கங்கள் அவசியமாகும். குறிப்பிட்டதொன்றுக்கு உடனடியாகவே [illegible]லங்கள் கிடைக்குமானால் மூளைக்கு வேலை குறையும். 5 + 6 எத்தனை என்று கணிப்பதற்கு நாம் ஒவ்வொரு முறையும், ஆலோசிப்போமானால் அது போன்ற ஒவ்வொன்றுக்கும் உளச்செயலுக்கும் மூளை எவ்வளவு வேலை செய்யவேண்டும்? ஆனால் சிந்திக்காமல் 5 + 6 = 11 என்று விடையளிக்கும் திறனை நாம் பெறுவோமானால் மூளையின் வேலை குறையும். பழக்கப்பட்ட வேலைகளின் தரமும் விரைவும் பழக்கப்படாத வேலையின் தரத்திலும், விரைவிலும் உயர்ந்தன என்பதை நாம் அறிவோம். ஓடிப் பழக்கப்பட்டவன் நெடுந்தூரம் ஓடும்போது, சிறிதளவும் களைப்படைவதில்லை. ஆனால் ஓடிப் பழகாதவன் சற்றுத்தூரம் ஓடினாலும் களைப்படைகின்றான். இவ்வாறே உள்ளத்தின் வேலைகளினால் ஏற்படும் களைப்பும் படித்தல், எழுதுதல், போன்ற வேலைகளில் சரியான பழக்கங்கள் ஏற்படுவதால் குறையும்.

நடக்கப் பழகும் ஒருவன் ஆரம்பத்தில் எவ்வளவு பிரயாசையும் அநாவசியமான உடலசைவுகளும் கொண்டிருப்பான். ஆனால் நாளடைவில் பழக்கம் ஏற்பட அவன் கண் உதவியின்றி அநாவசியமான அசைவின்றி நடக்கப் பழகிவிடுவான். இவ்வாறு நாம் நற்பழக்கங்களை நாம் பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டியது எமது கடமையாகும். சிறுவயதிலேயே, நல்ல கையெழுத்தில் எழுதுவது, வாய்ப்பாடுகள், செய்யுள்களை மனனம் செய்வது, அதிகாலையில் எழுந்திருப்பது, பெரியோரைக் கண்டு பணிவது, சமூகத்துடன் ஒத்து வாழ்வது, தெருக்களைச் சரியான முறையில் கடந்து செல்வது, ஆகிய நற்பழக்கங்களை உண்டு பண்ணுவது பெற்றோர், ஆசிரியர் ஆகியோரின் கடமையாகும்.

****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகளார் தனிநாயகம்.

அடிகளார் தனிநாயகம் உண்மையிற் தனிநாயகம் தான். தனிமைப்பண்பு நிறைந்தவர். ஈடும், ஒப்புமற்ற தலைவர் என்பது பொருள். தமிழ்ப் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டு: தாய்மொழிப்பற்றுக்கு உறைவிடம்; கண்டார் பரவசமடையும் தோற்றப் பொலிவுடையவர்; திருவுங் கல்வியும் நிறைந்தவர். உண்மைதரும் கல்வியும் கற்ற பெருமகன். புத்திவழி நடக்கும் சித்தம் படைத்தவர். நடையும், உடையும் பாவனையும் பூத்து பொலிந்த நிறைகுடம்; ஆண்டவன் படைத்த அகிலமெல்லாம் பார்த்துப் பழகியவர். பற்பல மொழிகளிற் தேர்ச்சி பெற்றவர். உடல் வலிமையும், உள வலிமையும் உடையவர். கல்விச் செல்வர்; கருணையே உருவானவர். பொருட்செல்வர். தன்னைப் போல் பிறரை நேசிப்பவர். யாவர் மாட்டும் அன்பானவர். பழிபாவங்களை அஞ்சுபவர். வாய்மைக்கு இருப்பிடமானவர். பாடறிந்தொழுகுபவர். நெஞ்சில் உரம் பொருந்தியவர். நேர்மைத் திறன் வல்லார். புனிதர். தூயர். உற்ற நண்பர். பேருபகாரி. சொல் வல்லார். தாராளம். தமிழர் பாராள வேண்டுமென்று பணியாற்றியவர். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றச் செயலாளர். அதனை உருவாக்கிய பெருந்தகையாளர்.

இத்தனைப் பெருந்தகையெல்லாம் பூரித்த நல்லார் நம்மை விட்டுப் பிரிந்தார். தமிழர் பண்பாட்டின் சிகரம் சாய்ந்தது. தவத்திரு அடிகளார் சொல்லாமற் கேளாமல் மறைந்தனர். யாவரையும் அணைத்த கரங்கள் பறந்து விட்டன. யாதும் ஊரே யாவருங் கேளிர் என்ற நட்சத்திரம் கரைந்து விட்டது. ஞானநலக் குன்று நின்ற இடமே தெரியவில்லை. உலக மக்களின் உறைவிடம், தமிழ் மக்களின் பெருமனை ப[illegible]டங்கி விட்டதே. இரத்தக்கண்ணீர் வடிக்கின்றோம். பரிதவிக்கின்றோம். பாடறியாது விழிக்கின்றோம். துன்பசாகரமே எங்கள் கதியாயிற்று.

தனிநாயகம் அடிகளார் தனி நாயகனாகவே தாரணியிற் தமிழ் ஒளியாத் திகழ்ந்தனர். தமிழோசை ஒலியாக ஓங்கி வளர்ந்தவர். தமிழ்ப் பெருமகனாக வரை [illegible]ந்கடல் சூழ் பெருநிலத்திலே நற்குடியிலே திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கப் பிறந்தவர்.

— வின்சுட்

டிறைவணிகர். செல்வினெழில்செறி சேயூரான்
நிறை பொறுமை நீதியகலாதான் _நறைகமழும்
பூங்காவி மார்பன் புகழுள வென் னாமரசன்
நீங்காத கீர்த்தி நிலையாளன் — பாங்காய்
[illegible]யெருவு ரொவினா ஒரு நலமுந் துய்யன்
தனிநாயகனென்றும் போர்தாங்கும் — [illegible]னியவனை
மற்றுள பற்று ந ர வளமை குந்திநெல
பற்று நெடுந்தீவு பரிக்க வைத்து

என்று பெரிதும் போற்றப்பட்ட சிறப்பு மிக்க குல கோத்திரத்தில் அடிகளார் பிறந்தார். பசுத்தீவு எனப் போற்றப்பெறும்நெடுந்தீவு தந்தை வழிப் பிறப்பகம். தாயார் ஊர் காவற்றுறை. ஆகவே ஊர்கா

வற்புறையில் ஆயிரத்துத் தொளாயிரத்து பதின்மூன்றும் ஆண்டில் ஆவணிமாதம் இரண்டா 23
ந் தேதியில் உதித்தனர். கற்கவேண்டியவற்றைக் கற்று, நிற்க வேண்டிய இடத்தில்நின்
று, முற்றத் துறந்த துறவியுமானார்.

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்
றைநிலை முனியாது கற்றுத் தேறினர். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு. சென்ற
விடமெல்லாம் கல்வி. பன்மொழிப் புலவருமானார். முறையான வழியில் நிறைவான செல்வமும்
வளமும் படைத்தவர். செட்டியாருக்கும், முஸ்லிம் முதலாளிக்கும் பொருந்தி வராத மானி
ககையொன்றினைத் அந்தக்குடியிற் பெற்றனர். தமிழ் இலக்கியக் கழகம் ஆண்டு உதயமா
யிற்று,. 1950 தமிழ் இலக்கியக்கழகத்தின் காரியதரிசிகளுள் உருவாக்கிய அடிகளார் புரவலன் என்ற
பான்மையில் புலவர்கள் பலரை ஆதரித்துப் பல நூல்களை அச்சேற்றினர். தமிழ்க் கலா
ப்சாரம் என்ற பத்திரிகையை 1952ல் ஆரம்பித்து நடாத்தி வந்தனர். இப்பத்திரிகை
ஆங்கிலத்தில் வெளிவந்ததெனினும் இடை அகம் தமிழிலும் கட்டுரைகள் இடம்பெற்றன.
தமிழ் நாட்டுப் பேரறிஞர், ஈழத்து வித்தகர்கள், ஐரோப்பிய அமெரிக்க அறிஞர்கள்
தமிழ்மொழித் தொடர்பில் பற்பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தனர். அந்தக்
குடி தமிழ் இலக்கியக்கழகம் ஆண்டுதோறும் கத்தோலிக்க எழுத்தாளர் பேரவையினை
க்கூட்டி பெருவிழா எடுத்தும் வந்தது, 1953ல் கோயம்புத்தூரில் நடைபெற்ற எழுத்
தாளர் மகாநாட்டில் கலந்து கொள்ள அடியேனுக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அந்தக்குடியில் அடிகளார் வாழ்ந்து வந்தாலும் பிறந்த பொன்னாட்டினை மறந்
தாரல்லர். இடையிடையே கொழும்பு நகரம் வந்து குருப்பட்டத்திற்காக ஆரம்பகால
ங்களில் பயின்ற பொறளை குருமடத்திற்றங்கி பண்பாட்டுக் கழகமொன்றை நிறுவலாயி
னர். உயர்நீதி மன்ற நீதியரசர் திரு. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் இக்கழகம் இ
யங்கலாயிற்று. இது நிகழ்ந்தது 1952லாகும். திருவனந்தபுரம் மற்றும் மலாயா,
சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் பண்பாட்டுக் கழகங்களை நிறுவி வந்தார்.

1950.ல் இலங்கைப்பல்கலைக்கழகம் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் படிப்பித்
தற்கலைப் பயிற்சி வகுப்புகள் நடாத்த முன்வந்தது. பல்லாசிரியர்கள் பலரைத் தெரியிக்க
விழைந்ததன் பேருக, அடிகளாரும் விரிவுரையாளராகப் பதவி ஏற்றனர். பேராதேனியா
வுக்குப் பல்கலைக்கழகம் மாற்றப்பட்டபோது புத்தகக் கண்காட்சி ஒன்றினை ஏற்பா
டுசெய்து இலங்கை மக்களை விழிப்படையச் செய்தனர். அற்றைநாட்களிலும், இற்றைப்
புத்தகங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவற்றின் பட்டியலும் வழங்கப்பட்டன.

அடிகளார் ஏலவேஉரோமை மாநகரக்குருத்துவக் கல்லூரி
யில்பன்னிரு ஆண்டுகளாக விவிலிய நூல்களைக்கற்றுத் தேறியவர். சிறீத்துவத் தத்துவ
ஞானங்களில் 1939ல் கலாநிதிப்பட்டம் பெற்றவர். ஆங்கிருக்கும் வெவ்வேறு மொழி
களிற் தேர்ச்சியும் பெற்றவர். குருத்துவப்பட்டம் பெற்ற பின்னரே இந்தியத் தென்னகம்
அடைந்து பட்டங்கள் தளத்திற் பணிச் சேவை புரிந்தனர்.

தமிழிலும் மிகுந்த தேர்ச்சிபெறவேண்டுமென்ற ஆர்வமிகுதி
யால் அண்ணாமலைப் பல்கழகத்திற் சேர்ந்து முதுமாணிப்பட்டம் (எம். ஏ.) பெற்றார். இலக்
கிய முதுமாணிப்பட்டத்தினையும் (எம். லிட்.) 1949ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கியது. இலங்கைப்பல்கலைக்கழகத்தில் கல்விப்பீடத்தில் 1952 முதல் தமிழ்ப் பேரா
சானாகக் கடமையாற்றிய பின்னர் இங்கிலாந்து சென்று அங்கு இலண்டன் பல்கலைக்க
ழகத்தில் 1957ல் கலாநிதிப்பட்டத்தினைப் பெற்றார். 1961ஆம் ஆண்டு வரையும் இலங்கைப்
பல்கலைக் கழகத்திலே கல்விப் பீடத்தில் நற்பணி புரிந்து வந்தார்.. இதே ஆண்டில்
இந்தியப் புலமைப் படிப்புகள் என்ற புத்தரும் பேராசிரியராகப் பணிபுரியத்
தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வண்ணம் பல்கலைக்கழகங்களில் நற்பணி புரியும் பொறு
ப்புடையவராயினும் தமிழர் பண்பாடு என்ற சஞ்சிகையைக் கைவிடாது அதன் ஆசிரியராக
த்தொடர்ந்தும்நடாத்தி வந்தார். அதன் வளர்ச்சிகருதி முதன்மூன்று ஆண்டுகளும் அத்
துக்குடி தமிழ்க்கழகச் சார்பில் தாமே நடாத்திய சஞ்சிகையினை சென்னை தமிழ்க்கழக
முத்திருக்கு ஒப்படைத்து வெளியிடச் செய்தனர். தொடர்ந்தும் அதன் ஆசிரியராகப்
பணி செய்தார்.

நிகழ்ச்சிகள் இவ்வாறு தொடர்ந்து வருங்காலத்தில்1964ல் புதுடெல்லி
மாநகரத்தில் அனைத்துலகக் கீழைத்தேசக்கலைஞர் மன்றத்தின் இருபத்தாறுவது மகாநாடு
நடம்பெறலாயிற்று. அந்த நல்லவேளையை வாய்ப்பாக்கிக்கொண்டு அடிகளார் தமது
தூயஉள்ளத்தில் அரும்பிக்கொண்டிருந்த அனைத்துலக ஆராய்ச்சிமன்றத்தினை உருவாக்கத்
திருவுளங் கொண்டனர். பதினைந்து நாடுகளிலிருந்து வந்த அறுபதின்மரைச் சேர்த்துப்பிடி
த்து7.1.1964ல் அம்மன்றத்தினைத் தொடக்கி வைத்தனர். அதன்கிளைகள் இந்தியாவில்
இலங்கை, மலாயா முதலிய நாடுகளிலும் உருவாக்கப்பட்டன. மலாயாவில் உருவாக்கப்பட்ட
மன்றம் முதலாவது மகாநாட்டை நடாத்த முன்வந்தது. அதன்பிரகாரம் முதலாவது மகா
நாடு 1966ம் ஆண்டு சித்திரைமாதம் நிறைவேறியது. இருநூறுக்கு மேற்பட்ட கட்டுரையா
யாவரும் பார்வையாளரும் சமுகமாயிருந்தனர். உலகின் நாலா பக்கங்களிலுமிருந்து தமிழ்
ஆராய்ச்சியாளர் வந்து திரண்டனர். மகாநாடு வெகு விமரிசையாகவும், யாவருக்கும்
மகிழ்ச்சியளிக்கும் வகையிலும் ஏற்பாடுகள் செய்து வைக்கப்பட்டன,

இந்த மகாநாட்டின்.
எழுச்சி,பெருமை,: மேன்மை காரணமாக பாரிசு, சென்னை, யாழ்ப்பாணம், என்னும்
தலைநகர்களில் மகாநாடுகள் நடைபெற்றன. மக்களும் நல்லாதரவு நல்கினர். ஐந்தாவது
மகாநாடு மதுரையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மகாநாடுகளில்
ஆராயப்பட்ட கட்டுரைகள் நூல்வடிவம் பெறலாயின. இவ்வகையில் மிருந்த எழுப்பமும்,
விருப்பமும் வாய்ந்த மாநாடு நடாத்தி சிறப்புறச் சிந்தனைச் சிறப்பியாக இருந்தவர்
அடிகளார் என்றல் அது மிகைத்து என யார்தான் கூறமுடியும்.

தவத்திரு தனிநாயகம் அடிகளார் என்றால், அனைத்துலகத் தமி
ழாராய்ச்சிமன்றம் என்பதே பொருள் என்றாண்மையில் யாவரையும் தமது பண்பாலும்
அன்பாலும், இயன்ற ஈகைத்தாலும், சாதிசமய வேறுபாடற்ற பான்மையாலும் அரவணைத்
துத் தமிழணங்கு வளம்பெற பெரிதும் முயன்றனர். இவ்வகைச்சிறந் தாய் மொழிக்குழைத்த
பெருமை எந்த மொழிவாரிச்சமுகத்திலும் இதுவரை உலகெங்கணும் நடைபெறவில்லையெ
ன்பதை யாவரும் ஒப்புக்கொண்டேயாதல் வேண்டும்.

தவக்கோலமும் தமிழும் அடிகளாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்கோலமும், தமிழும் அடிகளாரின் உடையருத சிந்தனைகளாகும். அங்கையில் மொழிப் பிரச்சினைக் கிளர்ச்சிகளிலும் கலந்து கொண்டு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருங்கினர். மொழியுரிமைக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி, பிரசார இயக்கங்களிலும் கலந்து வந்தார். அவர் தமது வாழ்க்கையிற் கலந்து கொள்ளாத மகாநாடுகளில்லை. 1951ம் ஆண்டில் சித்திரை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற தமிழ் விழாவிற் கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்தினர். அவே அடிகளார் இலங்கையில் நிகழ்த்திய முதற் சொற்பொழிவாகும். சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் நடாத்திய நான்காவது விழா அவாகும். சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு என்பது எடுத்துக்கொண்ட பொருள். பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் தலைமை தாங்க வேண்டியவர். மதிய போசனம் அவரை நேரந் தாழ்த்தி விட்டது. மக்களின் கூட்டமோ திரண்டு விட்டது. தலைவரின்றியே அடிகளார் பேச அழைக்கவும் அளிக்கப்பட்டது. அசைவு ஆட்டமின்றி, முழக்கம் குழப்பமின்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். சபையில் சலசலப்பில்லை. அமைதியான கலகலப்பு. மக்கள் மனதிற் குதூகலிப்பு.

என்னை நன்குய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்குய்த் தமிழ் செய்யுமாறே

என்று சிகரம் வைத்தாற்போல்

முடிபுரை நவின்ற போது மக்கள் பெருந்திரள் கைகொட்டி ஆரவாரித்தனர். முகங்கள் மலர்ந்தன. கரங்கள் குவிந்தன. சிரங்கள் தாழ்ந்தன. மகிழ்ச்சிக் குரல் எழுப்பினர். எழுந்த குரல் வானைப்பிளந்து அப்பாலுஞ் சென்றது. ஆர்ப்பரிப்பு ஒலியின் மத்தியில் ஏந்தார் நடையில் வந்து தலைமையினைத்தாங்கிய பேராசிரியர் சேதுப்பிள்ளை. தமி நாயகம் பேசு கையில் சபாநாயகம் இருக்கடி குதம்பாய், என்றபான்மையில் அடிகளாரை வாழ்வைப் போற்றிப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டினர்.

திருமூலர் வாக்கில் அடிகளார் வழங்கிய

முடிபுரை அன்று தொட்டுப் பேச்சாளர் வாயில் கைவல்லியமாக மாறிவிட்டது. இலையிற்கிட ந்த திருமூலரையும் வெளியில் உலாவ விட்டனர் அடிகளார். இலை மறைகாயாகவிருந்த அடி களாரும் நூற்றைபக்கலியாக உலகுவப்ப. வலவேர்பு திரிபுரு பலம்புகழ் ஆரியர் வாகத் திகழ்ந்தனர். பேரவை கூட்டுவோர் யாவரும் அழைத்தனர்.

அற்றைக்காலை ஆவணி 1953.

ஆண்டில் மட்டக்களப்பில் வாலிபர் சங்கம் தமிழ் விழா ஒன்றினை ஏற்பாடு செய்தது. தாய்நாட்டு அறிஞரையும் வரவழைத்தனர். சிவஞானக்கிராமணியார் வருகை தந்தார். சேய்நாட்டுப் பேரறிஞர் அடிகளாரும் சொற்பொழிவாற்றினர். தமிழ் மக்களும் அவர் கவின்கலைகளும். என்பது அடிகளாரின் பொருள். அப்பொருளை விரித்துரைக்கும்போது உலகத்து வழங்கும் சிறப்பு மொழிகளை அவற்றின் இயல்பு வாரியாகப் பிரித்துத் தமி —ழ்மொழி பக்திக்கு உரியதென அருந்தம் திருத்தமாகக் காட்டினர்.

பேச்சுக்ககலை அடிகளாருக்குக் கைவந்தசரக்கு. ஆங்கி லம் நன்கு கற்றவர். ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி மூலம் தமிழ்ப் பேச்சுக்கலையினையும் பெருக்கப்பயின்றவர். திருச்சபைப் பிரசங்கங்களும் அடிகளாரின் பேச்சுக்கலைக்கு உறுதுணை

63539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க விருந்தவர். அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திலே மேற்பட்டப்படிப்பினை முடித்துக்கொண்டு உலகைச்சுற்ற ஆரம்பித்தார். புகைக்கப்பல் மூலம் உலகை நான்குமுறை சுற்றியுள்ளார். ஆகாயக்கப்பல் மூலம் பன்முறை பறந்துள்ளார். தமிழர் கலை, பண்பாடு பரப்புவதே நோக்கம். 1950ல் அமெரிக்கா சென்று, ஆங்குள்ள பல்கலைக்கழகங்களிலும் மற்றும் மன்றங்களிலும் விரிவுரை நிகழ்த்தினர். அக்கண்டத்தில் ஓராண்டில் தமிழ்பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியதாகக் கூறியுள்ளார்.

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் விரிவுரை நிகழ்த்தி வரும் காலத்தில் ஆங்குள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் கடமையாற்றும்படி அழைத்தனர். இசைந்தனரல்லர். ஓரிடத்திலமர்ந்திருந்து கற்றுக் கொடுப்பது அடிகளாருக்கு இயலாக் கருமம். ஏகவேதான் மலாயாப்பல்கலைக்கழகப்பேராசிரியர் பதவியையும் துறந்தனர். இவ்வகையில் அடிகளார் போற்றப்பட வேண்டியவராவர். பதவி பிடிப்பது வேறு. பதவி விடுவது வேறு. அடிகளார் பதவி பிடித்ததுமில்லை. அதனைத் துறக்கவும் பின் வாங்கவில்லை. டட்லி சேனநாயக்கஅவர்கள் பதவி துறந்தார். அடிகளார் பேராசிரியர் பதவியைத் துறந்தார். இருவரும் இந்நாட்டு மக்கள். இவ்வகைத் துணிச்சல்நாட்டை முன்னேற்ற வழிவகுக்கும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர். என்னும் புறநானூற்றடிகள் அடிகளாரின் திருவாக்கியம், சென்றவிடமெல்லாம் அன்று தொட்டு இன்றுவரை போற்றப்படும் தமிழ்மக்களின் மனப்பான்மையைப் பரப்பி, விரிவுரை நிகழ்த்தினர். தாம் உருவாக்கிய அனைத்துலக தமிழாராய்ச்சிமன்றத்தின் திருவாக்கியமும் அதுவே. அடிகளாரின் திருவாக்கியச்செல்வாக்கு உலக நாடுகள் நிறுவனத்திலும் ஒலித்தது. வாக்குச் சாதுரியம் படைத்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அந்த நிறுவனத்திற் பேசியபோது தமிழ்மக்கள் போற்றிப் பேணும் இவ்வாக்கியத்தை மொழிபெயர்த்துத் தமது உரையை நிகழ்த்தியுள்ளார்.

மலேசியாவில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முதல் வி மாநாடு நடாத்தியபோது அந்நாட்டு மக்களும் அரசும் உறுதுணையாக இருந்தனர். ஐந்து லட்சம் வெள்ளிநாணயங்களைச் சேர்த்துக் கொடுத்தனர். இருபதுக்கு மேற்பட்டோரின் ஆகாயமார்க்கச் செலவு, கப்பல் மார்க்கச் செலவு, அவர்களின் உணவுச் செலவுஎன்பனவைகள் அந்நிதியிலிருந்தே பெறப்பட்டன. அன்றியும் பல நூல்கள் அச்சிடப்பட்டு இலவசமாக கொடுக்கவும் பட்டன. மலேசியப்பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அவரின் துணைப் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மகாநாட்டிற் கலந்து கொண்டும், சமுகமாயிருந்தும் உபகாரமாக இருந்தனர். மலாய் மொழியினை அரசகரும மொழியாய்க் கொண்ட ஒரு அரசு முழுமூச்சாகப் பக்கபலமாக நின்று மகாநாட்டினைச் சிறப்பாகநடாத்தி வைத்தது. தமிழ்நாட்டு முதலமைச்சர் பெருமையுடன் மகா நாட்டிற் கலந்து கொண்டார். மலேசியப்பிரதமரும் அந்நாட்டுப் பாராளுமன்றக் கட்டடத்திலேயே மகாநாட்டிற் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் விருந்துபசாரமளித்து யாவரையும் கௌரவித்தனர். இவையெல்லாவற்றிற்கும் காரண கர்த்தா யாவர். அடிகளாரே. ஒரு இராட்சியத்தையே கவர்ந்திழுத்து விட்டார்.

இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் நாலாவது மகாநாடு நடந்தது. இங்கும் பேராசிரியர்களுக்கோ, பீடத்தலைவர்களுக்கோ மற்றும் அரசுசார்பு தமிழர்களுக்கோ துறையில்

லை. கருடர் அடிகளாரைப்போல் லர். கடைசியில் நடந்தது என்ன? யாவரும் அறிந்ததே. மங்கல கோலம் முடிவில் அமங்கல கோலமாயிற்று. தமிழ்த்தூது அடிகளார் எழுதி வெளியிட்ட முதனூல் தூத்துக்குடித் தமிழ் இலக்கியக் கழகத்தால் 1952ல் வெளியிடப்பட்டது. மதுரைத் தே கோபிலி அச்சகத்தில் அச்சேறியது. ஐந்து கட்டுரைகளை யுடையது. காதலர் ஆண்கள் பெண்கள் தூது விட்டதாக இலக்கியங்கள் உண்டு. இந்நூல் அவ்வகைத்தன்று. தமிழ்வளத்தை உலகெங்கணும் கொண்டு சென்ற தூதர் தமது அனுபவத்தை முதற் கட்டுரையில் தமிழ்த்தூது வரைந்துள்ளார். எனவே நூலுக்கும் அப்பெயராயிற்று.

மலரும் மாலையும் என்னும் கட்டுரை வெகு விசித்திரமானது. தமிழ் மக்கள் பூவோடு வாழ்ந்தவர்கள், மங்கலமானது பூ. மணமுள்ளதான் மலர். தாரும் மாலையுமான அணிக்கு முதற்பொருள் பூ. எல்லாராலும் விரும்பப்படுவது. ஈசனுக்கும் உவப்பானது. ஆகவேதான் பூ செய் என்ற சொல் பூசையென்றாயிற்றென்பர் அடிகளார். தமிழோ பக்திக்குரிய மொழி. பூசெய்யாமற் பக்தியில்லை. பூவின்றேல் பக்திரம்.

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன். தமிழோடிசை பாடல் மறந்தறியேன்.

என்றார் நாவுக்கரசர். சலம் பூவொடு தூப மறந்தறியேன் என்றும் பாடம். பாடம் எதுவாயினும் பூவென்ற சொல் உண்டு. பூவோடுதான் தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை அடிகளார் திறம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

தமிழர் காதலிற் பூவுந்தமையும். புறப்பொருள் முழுவதும் மலர் மாலை. அகப்பொருள் கூறும் குறிஞ்சிப்பாட்டில் தலைவி தோழியுடன் கூடி நீராடி விளையாடித் தொண்ணூற்றொன்பது வகைப் பூக்களைப் பறித்துக் குவித்தாள் என்ற செய்தியைக் கபிலர் வெகு அழகாக முப்பத்தைந்து அகவடிகளில் யாத்துள்ளார். என்று அடிகளார் எடுத்துக் காட்டியுள்ளார். இவை போன்றவையெல்லாம் அடிகளார் நூல்களில் கண்டெடுத்த அரும்பொருள்களாம்.

இலக்கிய முதுமாணிப்பட்டத்துக்கு எழுதிய பண்டைத்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்ற ஆராய்ச்சிக் கட்டுரையினை 1953ல் நூல் வடிவமாக்கினார். எட்டு அதிகாரங்களையுடையது. இலக்கிய ஈற்றதிகாரத்தில் சங்கதம், கிரேக்கம், இலத்தின், ஆங்கிலம் என்ற மொழிகளின் இலக்கியங்களிலுள்ள இயற்கையினை ஒப்பிட்டு எழுதியுள்ளார். வேற்று மொழிகளிற் சிறந்த பயிற்சியின்றி இவ்வகை ஒப்பீடு சாத்தியமாகாது. அடிகளாரின் பன்மொழிப் புலமையினை இது எடுத்துக்காட்டுகின்றது. கலாநிதிப்பட்டம் பெற்றோர் பலர் ஈழவளநாட்டிலுள்ளர். அன்னிய தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட முடியாதவர்களாயிருக்கின்றார்கள். ஏன் என்ற கேள்விக்குரிய விடை யாவருமறிந்ததே.

உலகத்தின் பல பாகங்களில் அமைந்து கிடக்கும் பல்கலைக்கழகங்களில் விரிவுரை நிகழ்த்துதல், மகாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றுதல், உத்தியோகக்கடமைக ளை நிறைவேற்று முகமாக விரிவுரை செய்தல், செய்தி ஏடல்லாத பேரறிவுக் களஞ்சியமாக விளங்கும் சஞ்சிகைக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதல், தமிழர் பண்பாடு என்ற சஞ்சிகைக்கு ஆசிரியராகவிருந்து கட்டுரை எழுதல் மகாநாடுகள் வியாக்கியானம் எழுதல், பண்டைய நூல்களுக்கு மறு பிரசுரங்களை எழுதியும், தொகுத்தும் பிரசுரிப்பதேகடமையாது, பண்டைய

ஆதியாம் நல் சிறறல்., அறவறநெறியில் சிறறல்.,

ரங்காரப்பது ,மகாநாடுகள் ஏற்பாடு செய்தல், 1950ம் ஆண்டு தொடங்கி இதிச்சில ஆண்டுகள்

முயற்சிகளில் அப்பிரும் அயராது, சலியா 1950ம் எல்லாக்கருமங்களிலும் ஈடுபட்டு வீரம் சித்தியு

வரையும் உழைத்தனர். தொடர்ந்து

மடைந்தவர். பதவி துறந்தனர். "எனக்கு

1970ம் ஆண்டில் மலேசியப் பல்கலைக்கழகத்திலிருந்து பதவி துறந்தனர். எனக்கு சொந்த வாக்கு. உலகத்

நூரிடத்திலிருந்து கற்றுக்கொள்ளப்பட அரிதாகவின்" என்பது அடிகளாரின் சொந்த வாக்கு. அடிகளார் மறுத்தார்.

ஏற்பதை நிறுத்தும்படி கேட்டனர், பல்கலைக்கழக ஆட்சிப் பீடத்தினர். உலகஞ்சுற்றினர். பல்கலைக்

பதவியுந் துறந்தார். பதவி துறந்த பின்னர் தமிழ்த்தாயின் பொருட்டு உலகஞ்சுற்றினர். பல்கலைக்

கழகங்களிலிருந்து அழைப்புகள் கிடைத்தன. மாதம், இரு, கெடு என்ற கால அளவையில் கழ

கங்களுடன் விரிவுரையாற்ற ஒப்புக்கொண்டனர்.

அரு வேயுலகத்து இயற்கை இருவேறு, தெள்ளியராதலும் வேறு... என்ற திருவள்ளுவர்

அமிர்த வாக்கிற்கு விதி விலக்குமாகிறார். தாம் பெற்ற கல்வியிற் செல்வருமாவர்.

சுத்தச் சோறு தரும் என்பதற்கிசைய பரிசுத்தமான உடையணிவதில் அடிகளார்

பெருமகிழ்ச்சியடைவர். உண்டி, உறையுள் வசதிகளைப் பெரிதும் விரும்புவர். உணவில் மிகுந்த

கவனஞ் செலுத்துவர். தலைக்கு ஒலிவ் எண்ணெய் பயன்படுத்தி அழகாக மயிரினைச் சீர்ப்படுத்

துவர். வாகனச் சவாரியில் விருப்புடையர். அகத்தினழகு முகத்திற் தெரியும். என்பதற்கிலக்கா

கமைந்திருப்பவர். பதி வருடங்களில் ஞானவொடுக்க இல்லத்திற் தங்கியிருந்து ஞானவொடுக்க

பிரசங்கங்கள் செய்வதில் ஈடுபட்டனர்.

" ஏயேசுவின் கோ விலையும், திசைநோக்கித் தமிழ்மொ

ழியை எனக்குத் தாய் மொழியாகத் தந்த இறைவனையும் கைகூப்பி வணங்கினேன் " என்னு

அடிகளாரின் அருள்வாக்கு. அறவுந் தாய்மொழியும் ஒன்றியும் பிணைந்தும் மிளிர்ந்தன அடிக

ளார் வாழ்க்கையில்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் சார்பில் ஏற்பாடு செய்த முதல்மகா

நாட்டில் உறக்கமின்றி உழைத்தனர். மகாநாடு தொடங்குவதற்கு முன்னர் ஏற்பட்ட மழைவெள்ள

த்தில் மயிரிழையில் உயிர் தப்பினர். ஒரே ஓட்டமும் நடையும். ஒன்றே உலகம் என்ற நூல் அடிக

ளாரால் 1966ல் மார்ச் மாதம் வெளியிடப்பட்டது. தாய்லாந்து ,கம்போதியா, வியட்நா

ம், பர்மா, இந்தனேசியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா ,சோவியத் ஒன்றியம், இங்கிலா

ந்து, பிரான்சு, ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, வத்திக்கான், கிரேக்கநாடு, போர்த்துக்

கல், ஐரோப்பாவின் சில நாடுகள் ,ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்தியகிழக்கு நாடு

கள் என்ற தலைப்புகளில் பல சுவையான செய்திகளும், காட்சிகளும் விளக்கப்படுகின்றன.

பிரான்சு, ஒல்லாந்து, ஜேர்மனி, பிரித்தானியா, செக்கோசெலவக்கியா, உருசியா

சோவியத் நாடுகள், அமெரிக்கஐக்கிய மாகாணம், தமிழ்நாடு தவிர்ந்த இந்தியா, இலங்கை

மலேசியா, ஆயல்லா வேறுநாடுகள் என்ற உலகதேசாதேசங்களில் எவ்வாறு தமிழ் பயிலப்பட்ட

தென்பதைப் பொருளாக வைத்து வெளிநாடுகளிற் தமிழ்ப்படிப்புகள் என்ற தலைப்பில் பல்லோர்

எழுதிய கட்டுரைகளைச் சேர்த்து அறிஞர் கருத்து என்ற பாங்கில் நூலொன்றினைத் தொகுத்து

1968ல் வெளிப்படுத்தினார். தமிழ்ப் போர்த்துக்கீச அகராதி ஒன்றும் வெளி வந்தது. பன்னாட்டிய

நூல் .. இதற்கு மறு பிரசுரம் கண்டனர் அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் ஈழவளநாட்டிற் பிறந்து வளர்ந்து, ஊர்காவற்றுறை சந். அந்தோனியார் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்று மேற்படிப்புக்குச் சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்து கற்றுத்தேறி பொறளைக் குருத்துவ மடத்தில் குருத்துவ நெறி பயின்று வருங்காலத்திலே மலையாளத்துத் திருமறை ஆயர் மாக் இவானியோஸ் என்பவரின் அழைப்பின் பேரில் அங்கு சென்று, ஆயர் அடிகளாரை உரோமைக்கு அனுப்ப குருத்துவப் பட்டம் பெற்றுப் பாரதம் திரும்பி அங்கு தமிழ் பயின்று தமிழ்ப் பெருமகனாய்த் திகழ்ந்து பிறர் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து வாழ்வினைப் பூரணப்படுத்திக்கொண்டார். பழக நல்லவராய்ப் பண்பாடுள்ளவராய், பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல், என்ற கலித்தொகை அடிக்கு நிகரானவர், எவரையும் புண்படுத்த நினையாதவர். எங்களை விட்டுப் பிரிந்து சென்றார்.

உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

வித்துவான் எஸ்.எக்ஸ்.நடராஜா
அரச கருமமொழி மொழி பெயர்ப்பு அத்தியட்சர்.

********************

தமிழிலக்கியத்தில் சிறந்து விளங்கும் பல்வேறு சமய இலக்கியங்களைப்போல் வேறு எம்மொழியிலும் இல்லை. சைவரும், வைணவரும், பௌத்தரும், சமணரும், மகம்மதியரும், கத்தோலிக்கரும், புரொட்டஸ்டாண்டாரும், ஒருங்கே இலக்கியவுரிமை பாராட்டக்கூடிய ஒரு மொழி உண்டெனில் அம்மொழி தமிழ்மொழியேயாம். ஆதலின் பெரிய புராணம் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரீகம், கம்பராமாயணம், மணிமேகலை சீவக சிந்தாமணி, சீறாப்புராணம், தேம்பாவணி, போன்ற காப்பியங்களுக்கு ஒப்பாய பல்வேறு சமயங்களுக்குரிய நூல்கள் வேறு எந்த ஒரு மொழியின் இலக்கியத்திலும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

********************

( தமிழ்த் [illegible] )
வண. தனிநாயக. அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITHIN THE BOSOM OF SRI LANKA

Whatever patriots are left in Sri Lanka, three decades after Independence, must be grieved that race and religion have become the fatherland for so many, as before the advent of the West. In fact, the very idea of community has tended to break down whether in ancient villages or towns of colonial creation, while the civic spirit could hardly emerge in districts administered from above by revenue officials. And, instead of the concept of a modern nation emerging, sensitive souls have witnessed with agony the waste of years in futile racial controversies, and the waste of talent following discrimination in access to education and in filling directive positions in Society! And counted too, the loss where in the towns and villages, in work places and the security services, in the schools and other socio societies, a large proportion lead mental lives in which feelings of group hostility play an appreciable part !

Symptoms and consequences of deepening race prejudice are the race riots, which have some six times since 1956 dug deep the valleys of separation between the two major communities, and the two exercises in writing new constitutions, which both in their content and manner of making built further walls of separation.

The absence of a mass struggle for independence, like the many-sided Gandhi-led Indian movement, many possible explain why this country failed to throw up the leadership committed to the ideal of a secular, democratic nation state, and failed too to place before the people a social philosophy on which to rear a new nation. Instead, the political leadership of the majority community found an easy road to power in starting a return journey to medieval tracks covered with myths. For, as FrederickHertz recalls," Every national ideology has made great use of two types of myths, that of noble descent of the nation and that of its great mission." By way of defensive reaction, the Tamil leadership cited the historical argument, that it is the British Occupation which "shackled together" the hitherto separate Sinhalese and Tamil kingdoms. So estranged, neither side is prepared to concede that history is a flowing stream; that the

Digitized by Noolaham Foundation

that when the British super-imposed an Island-wide political and administrative unity, it was but a fulfilment of the fundermental cultural and spiritual unity, which was the cumulative message of Sri Lanka's history. Also, even top-ranking civil servants, belonging to the College of professional administrators developed on the British model and in the new context of the rule of law, often forgot their pledged loyalty to the entire nation and the obligation to treat all citizens as equals at every public counter.

O O O O

Pro. A.J.Wilson has said recently that even if all the blatant discrimination practised against the Tamil people be blotted out and the Sinhalese army of occupation in their midst is removed, he would still doubt that Tamil nationalism will ever be stilled. Ernest Renan said a century ago that more than anything else, it is common grief that binds a nation together. Yet, given lofty statesmanship on both sides, it may be possible to work out at a Round Table a settlement assuring the Tamils the essence of their demand within the framework of Sri Lanka. The present turmoil in Assam, which has evoked a positive response from a Gandhian peace mission from Delhi, has perhaps lessons for us. Gandhi Peace Foundation Secretary Radhakrishna identified the main problems as " a desire for identity, economic development and political personality". Could we evolve here an Asian model of decentralised government that would both ensure such regional autonomy and obviate the domination of one ethnic group by another? Given good will, conventious may be agreed upon, such as the proportion of members from both language groups and the regions of the country to serve in the Central Cabinet, the Supreme Court, State Corporations, and the various directive and consultative bodies. Given good will, there will also be a fair allocation of national and freign resources for development. Not least, the language accord will cover the entire country.

O O O O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A political settlement can but be the beginning. What we should be after is integration of the people at people's level, more than of the state at state level. We may point to five roads leading to this desirable goal. First, the multi-ethnic classroom, with reasonable concentration of both the language groups, so as not to violate the identity and self-esteem of either group, can contribute to a harmonious multi-cultural, multi-ethnic society in Sri Lanka. For, here they learn each other through each other's language and each other's language through each other. Second, since by the nature of the case, the number of multi-ethnic schools will be limited, the distance between different ethnic groups and social classes and even different regions, would be reduced if senior pupils and school leavers are encouraged to live and work in sarama-dana campus in different parts of the country. Third, by a similar token, one or two universities, conceived as national universities, and some post-graduate departments of regional universities also so designed, will help to bind the generations together, when they come to share "a common intellectual estate". It goes without saying that all universities should be autonomous and access should be on merit. Fourth, "burn the books which teach hatred, burn them all". Following this cry of Anatole France at the end of World War I, the movement for the mutual revision of history books commenced, French and German historians, the historians of the five Scandinavian countries and so on. We too would do well to rewrite the History of Sri-Lanka as an integral nation-wide conception, discarding racial myths and without elevating spells of fighting among adventurers into national wars. On the other hand, a trilingual anthology of selections from ancient and modern writing, will help to convey the badly needed message of reconciliation. Lastly, a free Press, with a Code and with dedicated journalists, and other mass media, also free of state control could help to open a new page in our history.

K. Nesiah, Chundikuli, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிநாயகன் புகழ் வாழ்க
************** ******

( பண்டிதர் கே. சந்திரசேகரனார்)

(1) செந்தமிழ் மொழியை தன்னை
சிறப்பினைச் சிறப்பித் தற்காய்
முந்தவே சிலம்புஞ் சிந்தா
மணியுமே கலையுஞ் சாத்தி
சந்தமார் வளையுங் காதில்
தயங்கு குண்டலமு மிட்டு
வந்தவர் வழியில் தோன்றி
மாத்தமிழ்த் தொண்டு செய்த

(2) நின்றவர் பலரு மீழம்
நிலைத்திட வாழ்ந்த பல்லோர்
கன்றிய காதல் மேவி
கனிதமிழ் முனங்கைக் கூடி
யொன்றிய நாவலோரும்
உயர் தமிழ் மொழியே பூவில்
நன்புய வேரெனுய்ந்த
ஞானப் பிரகா சனும்.

(3) சிலம்பிடள் மறைந்த செய்தி
சேர்ந்துயாம் நன்றே லாக்கி
நிலத்தினை மகிழத் தந்த
நிருமலன் எல்லோரும்
புலத்திலே தமிழின் மேன்மை
புகுத்தின மேல்பால் உள்ளார்
புலத்திடைப் பட்டதாலே
புகுந்தனர் கீழ்பாலிங்கு.

(4) தம்மொழி கொண்டு கல்வித்
தமிழ்மொழி கற்க எண்ணிச்
செம்மையுவந்த நிற்கத்
திலக்காவ ஊரில் வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பல மற்றனை யன்
முது தமிழ்ப் பண்பு சான்றோன்
செம்பதித் துறவோன் பூவின்
சிறந்த பல்மொழிகள் தேர்ந்தோன்

(5) எல்லையை வைத்தார் முன்னோர்
எம்மொழிக்கிதனை நச்சி
நல்லை நீ வாழியம்மா
நாவலம் முழுது மென்று
தொல்லைகள் பல வந்தாலும்
தொலையெலாம் பறந்து சென்று
வெல்லும் நாவால் அன்னை
மேன்மைகள் தெரிந்து நின்றேன்.

(6) பெறுவதற் கரிய பேறும்
பெட்புடைத் துறவு மேவி
யுறுவதற்கரிய ஞான
முற்றிடும் துறக்க வேலா
நடுநிறை தமிழின் காதல்
நயந்த ^ தமிழின் ஞா தாய்
அறிவறி மகளும் எங்கும்
அன்னை சால்பெடுத்து நின்றேன்.

(7) தண்டமிழ்ப் பண்பு சான்ற
தமிழ்க்கழகங்கள் கூட்டி
எண்டிசை யறிஞ ரீர்த்து
எழில் மகாநாடு சேர்த்து
தொண்டினைப் போல யாரோ
தொடருவார் துறவோய் நின்போல்
கண்டுழந் தமிழோ டோடிக்
கலந்தனை கலங்கி னேமால்

(8) ஏசுவின் நெறியில் நின்று
இன்தமிழ்த் தொண்டு செய்த
தேசுறுந் தமிழ் முத்தின்
திகழ்தவத் தறிஞ ஞானி
பேசுறும் வாய்க ளெல்லாம்
பிரிந்திடாப் பிரியஞானி
காசினி விரையா யெங்கும்
கலாநிதி கலந்ததம்மா

(9) நகையொடு மிகையின் சொல்
நற்றமிழ்ப் பண்பு யாவும்
வகையொடு மேவி நின்ற
வண்டமிழ் வடிவம் யார்க்கும்
பகுயிவா ளீழந் தந்த
பத்தியி ருவ மாழ்ந்த
தகைத் தனிநாயகத்தின்
தனிப்புகழென்றும் வாழும்.

********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு ஓர் அணிகலன்.

அ. ஸ. அப்துஸ்ஸமது. B.A. Hons.

தமிழிலக்கிய வரலாற்றின் நவீனகாலம் மேனாட்டுப்
பாதிரிமாரின் அருந்தொண்டினால் புதுமையும் எழிலும் பெற்றுத் திகழ்ந்தது.
அதுபோல் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறும் கிறீஸ்தவத் தமிழ் அறிஞர்
களின் பணியால் ஆக்கமும் அழகும் பெற்று விளங்குகின்றது. " சொற்பிற-
ப்பு, ஒப்பியல் தமிழ் அகராதி " தந்த சுவாமி ஞானப்பிரகாசர் –
வசோக் பாலந்தை – நாவல் தந்த இன்னாசித்தம்பி, " பாவலர் சரித்
திர தீபகம் " வழங்கிய ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, " நியாய இலக்கணம்
யற்றிய உவில்லியம் நெவின்ஸ், " பதிவிரதை விலாசம் " விளக்கிய *
குமார குலசிங்க முதலியார் " யோசேப்பிப் புராணம்" பாடிய பிலிப்பு
–தெ.மெ.ல்லோ .............. இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம்*
பதிப்பாசிரியர் வித்வான் எவ்.எக்ஸ்.சீ. நடராஜா வரை நீண்டு செல்
லும் ஒரு பாரம்பரியத்தின் இடம் பெறும் அறிஞர்தான். தவத்திரு தனிநாய
கம் அடிகள் ஆவர்.

பொதுவாக சிலநூல்களை எழுதிவிடும் ஒருவரை **
தமிழ் தொண்டு செய்தவர் என்று போற்றும் மரபு நம்மிடையே உண்டு..
தமிழ்த்தென்றல் வி.கல்யாண சுந்தர முதலியாரைப்போல ஆய்வறிவும், அரும்
பணியும் நாட்டுப்பற்றும் கொண்டு பன்முகப் பணியாற்றும் அறிஞர்கள் மிக
க்குறைவு. இந்த வகையில் ஈழம் பாக்கியம் செய்த பூமி, ஆறுமுகநாவ
லர், சுவாமி விபுலானந்தர், வண. தனிநாயகம் அடிகள் என்போர், அறி
வுப்பணி மட்டுமின்றி அறிவு சார்ந்த தமிழ்ப்பணியும், சமயப்பணியும் தேசப்ப
ணியும் ஒருங்கே செய்து நற்புகழ் பெற்றவர்களாவர். இலங்கை சுதந்திரம்*
பெற்றதும், தமிழர் நிலையும், தமிழ்மொழியின் அந்தஸ்தும், பெரும்போ–
ராட்டங்களுக்கு இலக்காகி விட்டன. இந்தப் போராட்டங்களுக்கு முகங்கொ
டுத்து நின்ற ஒரு அறிஞர் வண. தனிநாயகம் அடிகளேயாவர், என்பது ஒப்
புவமைக் கூற்றல்ல

" மெல்ல மெல்ல தமிழ் இனிச் சாகும்" என்ற பாரதி
வாக்கை உற்றுணர்ந்தவராக அடிகளார் செயற்பட்டார். இதற்கெல்லாம்*
அவருக்குத் தமிழ்ப் பாரம்பரியத்தின்பேறும், அதன் கலாச்சாரத்தின் மீதும்இரு
ந்து வந்த ஆழ்ந்த அறிவும் உணர்வும், ஈடுபாடுமே காரணங்களாகும். இதன்
விளைவாக தமிழ் கூறும் நல்லுலகத்தை ஒன்றுபடுத்தி அதன் மூலம் தமிழர்க்குத்
தம் பெருமையையும்பாரம்பரியத்தையும் உணர்த்தி, அவர்கள் விழிப்புணர்ச்சி–
பெறுமாறு செய்ய எண்ணினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விதையாக 1964ல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை [illegible] மகாநாடுகள் நடாத்தியுள்ள உலகத் தமிழாராய்ச்சி மன்றமாகும். அடிகளாருக்குத் தமிழ்மொழியின்பாலும், தமிழ்ப்பண்பாட்டின்பாலும் ஆரா அன்பு உண்டு. அதன் விளைவாகவே அவர் தமிழ் [illegible] சிறப்புப்பட்டத்திற்கு [illegible] பட்டம் [illegible] பெற்றார். [illegible] அவர் [illegible] தலைப்பு "பண்டைத் தமிழ் இலக்கியத்தில் இயற்கைக்கோட்பாடும் [illegible]" என்பதாகும். இவ்விருந்து தமிழ்க்கியத்தில் அவருக்குள்ள ஈடுபாட்டை [illegible] என்பது புலனாகிறது. [illegible] [illegible] சிறப்பியல் இவருக்குப் பெரிதும் உண்டு. ஆதலால் தான் அவர் பேராதனைச் சர்வகலாசாலையில் கல்வி [illegible] பயிற்றியபோதும் இவர் ஒரு தமிழறிஞராக வேகருதப்பட்டார். பின்னர் மலேசியாப் பல்கலைக்கழகத்துக்கு இந்தியத்துறைப் பேராசிரியராகச் சென்றபோதும், அங்கு தமிழ்த்துறையை வளர்ப்பதற்கும் முயற்சியிலேயே பெரிதும் ஈடுபட்டார்.

ஒருநாள் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களுடைய வீட்டிற்கு நான் சந்திக்கச் சென்றேன். அப்போது அவர் சாய்மனையில் படுத்தபடி "திருவாசகம்" படித்துக்கொண்டிருந்தார். "என்ன, சேர் திருவாசகத்தில் உருகிவிட்டீர்களா"? என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் "ஆம் டாக்டர், தனிநாயகமடிகள் அவ்வாறு உருகச் செய்துவிட்டார்" என்று கூறி அதற்கான காரணத்தையும் எடுத்து விளக்கினார். கலாநிதி அவர்கள் திருவாசகம் படிக்கக் காரணமாயிருந்தது தனிநாயகமடிகளின் ஒரு ஆய்வுச்சொற்பொழிவாகும். அது தமிழ்ச் சிறப்பைச் செவ்வையாக எடுத்துக் காட்டிற்று. "வரலாற்றிலும் [illegible] [illegible] பிராக்கும் காதலுக்கு இந்நாவிலும், தமிழ்மொழிக்கு [illegible] எப்படிப் பிரபல்யமோ, பக்திக்குத் தமிழ்மொழி அப்படிச் சிறப்பாகும்" [illegible] மூலம் தமிழ் மொழியை எவ்வளவு [illegible] [illegible], [illegible] ஏனைய மொழிகளுடன் ஒப்பு நோக்கிக் கூறியுள்ளார் என்பதை, நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது.

இதுவே அவர்கள் தமிழ்ப்பக்திப் புத்தகங்களைப் [illegible] நாடக் காரணமாயிருந்தது. தனிநாயகம் அடிகள் சிறந்த பேராசிரியர் மட்டுமல்ல சிறந்த பேச்சாளருமாவர்; கருத்தாழமிக்க அவரது [illegible] பேச்சுக்கள் அறிஞர் மட்டத்தில் பெரும் ஆதரவைப் பெற்றன. 1955ம் ஆண்டு கொழும்பு நகர மண்டபத்தில் அவர் நிகழ்த்திய "இலங்கையில் தமிழ்ப்பண்பாடு அன்றும், இன்றும், இனியும்," என்பது [illegible] சொற்பொழிவு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையச் சிங்கள அறிஞர்களும் அதற்குச் சமுகமளித்து அவரது சொற்பொழிவால் வெகுவாகக் கவரப்பட்டனர். இறுதியில் அது நூல் வடிவமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது. தந்தை செல்வநாயகம் அவர்களும் அச்சொற்பொழிவுக்கு வந்திருந்து தமிழ்ப்பண்பாட்டின் சிறப்பைக் கேட்டு புளகாங்கிதமடைந்தார்.

"தமிழ்ப் பண்பாடு" வண. தனிநாயகம் அடிகளை வெகுவாகக் கவர்ந்த ஒரு அம்சமாகும்; எல்லா இடங்களிலும் அதனை விளக்குவதில் அவர் உவகை கொண்டார். "தென்னிந்தியத் தமிழ் மக்களின் வாழ்வுமுறை, கலை, ஆசாரங்கள் என்பன கிரேக்க, எகிப்திய மக்களின் நாகரீகங்களோடு ஒப்புநோக்கும் பான்மையன." என்று விபுலானந்த ஆராய்வு என்னும் நூல் கூறுகின்றது. எனவே பன்மொழிப் புலமை மிக்க அறிஞரான தனிநாயகம் அடிகள் இதில் ஈடுபாடு கொண்டதில் வியப்பு ஒன்றுமில்லை. 1952ம் ஆண்டளவில் தூத்துக்குடி கிறிஸ்தவத் தமிழ் மன்றத்தினரின் உதவியுடன் "தமிழ்ப்பண்பாடு" என்னும் ஆங்கில காலாண்டு இதழ் ஒன்றை வெளியிட்டார். சிலகாலமே நடைபெற்ற அம்மாசிகை தமிழ்கமெங்கும் பண்பாட்டு மணம் கமழச்செய்தது. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற உலகளாவிய தமிழ்ப்பண்பாடு ஒன்றை வலியுறுத்தியவாறு நின்றது அவ்விதழ். ஒரு சமுதாயம் தனித்துவம் பெறப் பண்பாடு எவ்வளவு முக்கியம் என்பதை முதல் இதழ் ஆசிரியர் தலையங்கத்தில் எடுத்து விளக்கிய அடிகள் பொருத்தமான முறையில்,

"பண்புடையார் பட்டுண்டு உலகம்
அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற வள்ளுவரின் குறளை எடுத்துக் காட்டினார். பண்பாடு என்ற அம்சம், அடிகளாரைப் பலவிதத்திலும் ஆட்கொண்டது. 1952ல் கொழும்பில் "தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்" என்ற ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்துச் செயற்பட்டார். இதேபோல் தூத்துக்குடியில் "கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய மன்றம்" ஒன்றையும் ஸ்தாபித்துப் பணியாற்றினார். 1964ல் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் இணைச் செயலாளராக இவரும் பேராசிரியர் [illegible] அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு இலங்கை, இந்தியா, மலேசியா, முதலாகத் தாம் சென்ற நாடுகள் தோறும் பண்பாட்டு தமிழாராய்ச்சிக் கழகங்களை அமைத்து இயக்க ரீதியில் இவற்றை வளர்ப்பதில் முன்நின்று உழைத்தார்....

இரு சுதந்திரம் பெற்ற இந்நாடுகளெல்லாம் தமிழர் சம உயர்வு பெற்று விளங்குவதற்கும், தம் உரிமைகளுக்காகப் போராடுவதற்கும் பெரிதும் உதவியது. இலங்கையில் தமிழர் தமது நீதியில் தம் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதிலும் தனிநாயகம் அடிகள் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவதாலும் சிங்கள மொழி எவ்வித பாதிப்பையும் பெறமாட்டாது. என்பதனை எடுத்துக் காட்டி செயற்பட்டார், 1956ல் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற தமிழ்மொழி உரிமைப் போராட்டச் சத்தியாக்கிரகத்தில் நேரடியாகக் கலந்துகொண்டார். 1961ல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவு கொடுத்ததோடு பொருளுதவியும் செய்தார். தமிழ்மக்கள் பெறவேண்டிய நியாயமான உரிமைகள் பற்றியும், இந்நாட்டின் தேசிய நலனுக்காக அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் பற்றியும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் சிறுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிட்டார். தமிழ்மொழிக்கு உரிமை வழங்கப்படவேண்டும் என்று சில வெளிநாடுகளில் சிங்களப் பிரமுகர்களின் ஒப்பம் வாங்கி அதனையும் பகிரங்கமாக வெளியிட்டார்.

கடைசியாக அடிகள் யாழ்ப்பாணத்தில், சு.பொ. இரத்தினம் அவர்களால், நடாத்தப்பெற்ற திருக்குறள் மகாநாட்டில் கலந்துகொண்டு தம் அயராத பணியை நிறைவு செய்தார். தனது 17 வது வயதில் துறவு பூண்டு, குருகுலம் சேர்ந்த அடிகள் தனது அறுபத்தேழாம் அகவை வரை சமயத்திற்கும், தமிழுக்காகவுமே தம்மை அர்ப்பணித்திருந்தார். அவரது பேச்சும் மூச்சும் தமிழ் என்ற உணர்வோடுதான் இருந்து வந்தது.

இவ்வாறு ஒரு தியாக சீலரோடு அறிவுப் பெருங்கடலோடு, நாமும் வாழ்ந்திருக்கின்றோம் என்பது பெருமைக்குரியதாகும். * ஆனால் அவர் மறைந்து விட்ட அதிர்ச்சி ஏற்பட்டிருந்தும், கொண்டதே நாம் அறிந்ததும் அந்த மகா அடிகளாரைப் போன்றவரை நாம் நேருக்கு நேர் ஒரு முறை சந்திக்கும் அரிய வாய்ப்பை இழந்து விட்டோம். "தமிழ்த்தூது" முதலாம் சில புத்தகங்களோடு வாழ்ந்து விட்டோம். தனிநாயகம் அடிகள், தமிழுக்குக் கிடைத்தற்கரிய பெருமையுள்ள அறிஞர். தமிழுக்கு அவர் செய்த பணி ஈடும் இணையும் அற்ற ஒரு பொன் அணியாகும். தமிழ் உலகம் அவர் பணியைப் போற்றி மறவாது என்பதில் ஐயமில்லை. மலர் அர்ச்சனைகளை நிச்சயம் அவர் அங்கீகரிப்பார்.

* * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation

03.09.80ல் யாழ். பேராலயத் திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சி முதல்வரும், கூட்டணிச் செயலாளர் நாயகமுமாகிய அ. அமிர்தலிங்கம் ஆற்றிய இரங்கலுரை

**********************************

பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய ஆயர் அவர்களே, யாழ். முதல்வர் அவர்களே, பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களே, திரளாகக் கூடியிருக்கும் வணக்கத்திற்குரிய சுவாமிகளே, வணக்கத்திற்குரிய கன்னியாஸ்திரிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, என் இளம் சகோதரர், சகோதரிகளே!...

தனிநாயகம் அடிகளார் அவர்கள், இவ்வளவு சீக்கிரமாக எம்மை விட்டுப் பிரிவார் என நாம் யாருமே எதிர்பார்க்கவில்லை. நான்கு மாதங்களுக்கு முன்பு தந்தை செல்வநாயகம் அவர்களின் நினைவுச் சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்தியபோது அவர் சற்றுப் பலம் குன்றியிருந்தார். என்று நினைத்தோமே தவிர மரணத்தின் வாசற்படியில் அவர் நிற்கின்றார் என்று நாம் யாருமே நினைக்கவில்லை. உடலம் குன்றியிருந்த அந்த நேரத்திலே கூட தமது ஆழமான கருத்தினால் தனித்தான அறிவால், தமிழிலக்கியத்தினுடைய தமிழ்க் கலாச்சாரத்தினுடைய பரப்பை, ஓரளவிற்கு எடுத்து அளந்து காட்டினார். தமிழ்த்துறை ஆராய்ச்சியினுடைய கடந்த கால வருங்கால வளர்ச்சியை நமக்கு முன்னே படம் பிடித்துக் காட்டினார்.

தலைமை தாங்குகின்ற பேராசிரியர் நேசையா அவர்கள் குறிப்பிட்டதுபோல அன்று அவர்களுக்கு நன்றியுரை கூறுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது வண. தனிநாயகம் அடிகளாரைவிட வேறெவராலும் அந்த அரிய உரையை நிகழ்த்தியிருக்க முடியாது. உலகிலே வேறு எவராலும் அதைச் செய்திருக்க முடியாது என்று நான் கூறினேன். ஆனால் எவராலும் தவிர்க்க முடியாத எமனாலும் வில லை [illegible] நிற்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்திலே மறைந்து விட்ட அடிகளார், என்ன குறிக்கோளோடு வாழ்க்கையை வாழ்ந்தார் என்பதை நாம் சற்று நினைத்துப் பார்க்க கடமைப்பட்டவர்களாய் இருக்கின்றோம். நான் ஒருவேளை [illegible] இருந்தபோது பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழ்விழா ஒன்று நடைபெற்றது. அன்று தான் முதன்முதலாக அடிகளாரைக் காணுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 1951ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்பட்ட அந்த விழாவிலே அடிகளார்* பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பதிலே கூறினர். தனை குறித்தோர் தன்னை
எத்தனைக் கடவுள் படைத்துவிட்டார் என்று " என்னை நன்கு இறைவ
ன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று அழ
காகக் கூறி தன்னுடைய பேச்சை ஆரம்பித்தார். அந்த அழகிய தோற்
றம், அந்த அறிஞர் பரப்பும் கனிவு, அவருடைய வாயிலிருந்து
வந்த அந்த அருமொழிகள் என்றும் என் முன்னே நிற்கின்றன.

தன்னை ஆண்டவனே படைத்துவிட்ட நன்றாகத் தமிழ்
செய்யுமாறே. என்று கூறி கடந்த முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு
மேலாக தமிழ்ப்பணியே தன் பணியாக இட்ட இறைவன் தமக்குச் செய்யும்பணி
தமிழ் வளர்ப்பது, தமிழை உலகமெல்லாம் பரப்புவதுதான் ஆண்டவன் இட்ட
நாம் செய்யும் பணி என்று உரைத்தார். பாரதி கண்ட கனவை நனவா
க்கிய ஒரு தமிழ்த் தாயின் தவப்புதல்வன் ஒப்பிடமுடியாத தனிநா
யகம் அடிகள் தாம்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்." என்று பாடிய பாரதி இந்தியாவிற்கு
வெளியே செந்தமிழ் பெருமையைப் பரப்பவில்லை. "சேமமுறத்
தமிழ்மொழியை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று கூறி
அவர் மறைந்து விட்டார். ஆனால் தமிழ்த்தாயை தமிழ்க்கல்வியை தமி
ழ்ப் பண்பாட்டை, உலகம் முழுவதும் பரப்பிய பெருந்தமிழ் அறிஞர்
..., அவர்களுக்குரிய தனிநாயகம் சுவாமிகள் என்பதை எவ
ரும் மறுக்க முடியாது. உண்மையில் இந்த நூற்றாண்டில் பல்வேறு அறி
ஞர்கள் ... நின்று அறிஞர்கள் போற்றும் தமிழ்க்கு நல்லுலகத்திற்கு
அளித்திருக்கிறார். தமிழ்மக்கள் பெருந்தொகையாக வாழ்கின்ற தமிழ்
நாட்டில் எந்த வகையிலும் சளைக்காத முறையிலும், எந்த வகையி
லும், ... முறையிலும் ... அறிஞர்கள் தமிழைப் பரப்புவ
தில், தமிழ் பெருமையை நிலைநாட்டுவதில், ஈடுபட்டு உழைத்திருக்கின்
றார்கள். ... ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஒப்பற்ற ஆராய்ச்சித்
திறன் விபுலானந்த அடிகளாருடைய இசை ஆராய்ச்சி, அறிஞ
ர் ... அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி இந்த
நூற்றாண்டில் ... காலத்திலே வந்த தனிநாயக
அடிகளார் ஆற்றிய பணி சரித்திரத்தில் இடம் பெறும் என்பதை எவரும்
மறுக்க முடியாது.

1966ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை
மலேசியாவில் அவரைவிட வேறு யாரும் நடத்தி வைத்திருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய அவருக்கு விபத்தும் ஏற்பட்டது. முதல்நாளில் அந்த ஊர்வலம் சென்றுகொண்டிருக்கும்போது முதல்நாள் பெருமளவு மழைபெய்து கோலாலம்பூர் நகரத் தெருக்களெல்லாம் வெள்ளக்காடாய் ஆன நேரத்திலே வீதியில் திறந்திருந்த குவாரத்தின் ஊடாக உள்ளே விழுந்துவிட்டார். அந்த ஊர்வலத்தில் சென்ற வெளிநாட்டு அறிஞர் அத்தனைபேரின் உள்ளமெல்லாம்; ஒருகணம் திக்கென்று நின்றது. ஆனால் ஆண்டவன் அவரை இன்னும் பல ஆண்டுகள் தமிழுக்காக உழைக்கவேண்டுமென்று இருக்கும்போது அவர் அன்று மறைந்திருக்க முடியாது. அவர் அங்கு காப்பாற்றப் பட்டார்.

அவர் உலகிலே பல பல்கலைக்கழகங்களுடன். இத் தொடர்பு கொண்டு அந்தப் பல்கலைக்கழகங்களின் தமிழறிஞர்களுடன் * தொடர்பு கொண்டு அதன்மூலம் தமிழாராய்ச்சித் துறையை உலகின் பல பல்கலைக்கழகங்களில் நடாத்த வழிவகுத்தார். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை. திறமையான புலமையையும், பிறநாட்டவர் அதை வணக்கம் செய்தல் வேண்டும். என்று பாரதி கூறியது — போல பிறநாட்டவரும் வணக்கம் செய்யும் ஒரு சிறந்த புலமைக்கு உறைவிடமாக, வண. தனிநாயகம் அடிகள் விளங்கினார். அந்தத் துறையிலே * மாத்திரமல்ல. என் மனக்கண்முன்னே இன்னொரு காட்சி இன்று தோன்றுகிறது.

1956ம் ஆண்டு ஆனிமாதம் 5ம்திகதி தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றத்திலே புகுத்தப்பட்ட அன்று காலிமுகக் கடற்கரையிலேயந்தப் பச்சைப்புல் தரையிலே, மழையிலே ஈரமாகக்கிடந்த நிலத்திலே நாமெல்லாம் இருந்து சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்தபோது எம்மை ஆயிரக்கணக்கான காடையர் சுற்றி வளைத்து கல்மாரி பொழிந்து தாக்கிக் கொண்டிருந்த நேரத்திலே பொலீசார் எமக்கும் அவர்களுக்கும் இடையிலேயே இடைவெளியை ஏற்படுத்தி எங்களை அரணிற்கு* அந்தத் தாக்குதலில் இருந்து எங்களைத் தடுத்துக்கொண்டிருந்த அந்தநேரத்தில் திடீரென்று அந்தத் தாக்குதலுக்கூடாக ஒரு உருவம் துறவிஉடையிலே எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. எங்கள் மனம் ஒரு நிமிடம் — பெருமிதப்பட்டது. இந்த இளைஞர்களுக்கு மத்தியிலும், நான் இந்த சத்தியாக்கிரகத்தை நடத்துபவர்களோடு சேரப்போகின்றேன் என்று அந்தக் காடையர் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வரக்கூடிய உளம் படைத்தவராக தமிழுக்காக நடைபெறுகின்ற சத்தியாக்கிரகத்திலே நாமும் பங்குகொள்ளவேண்டுமென்ற அந்தத் தெளிவோடு அங்கு வந்திருந்த தனிநாயக அடிகளாரை நாம் என்றும் மறக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனபடியால் அவராற்றிய பணி இலக்கியத் துறையிலே ஆராய்ச்சித்துறையிலே மாத்திரமல்ல. அரசியல்துறையிலே எங்கள்* தலைவர் அவர்கள் தந்தை, செல்வநாயகம் அவர்கள், எமக்கு அரசியலில் ஒரு பாதையை வகுத்து அதை நோக்கி எங்களை அழைத்துச்சென்று மறைந்தார் என்றால் எமக்குக் கலாச்சாரத்துறையிலே கலாச்சாரத்தையும் அரசியலையும் பின்னிப்பிணைந்து எமது கலாச்சாரத்தைக்காப்பதற்கு அரசியல் எந்த வகையில் பணிபுரியவேண்டுமென்று காட்டக்கூடியவராக அல்லது எமது அரசியல் இலட்சியத்தை அடைவதற்கு கலாச்சாரமெந்த வகையில் உதவ முடியும் என்பதை எடுத்துக் காட்டுபவராக வணக்கத்திற்குரிய தனிநாயகம் அடிகள் விளங்கினார்.

இந்த விதமான ஒரு சிறந்த அறிஞரை இழந்து * இன்று நாம் கண்ணீர் வடிக்கின்றோம். ஆனால் நான் அதிகமாக உரையாடிக்கொண்டு போகவிரும்பவில்லை. டடா நேற்றுக்கொழும்பிலே * காலைப் பத்திரிகைகளைப் பார்த்தவுடன் இந்த அதிர்ச்சி தரும்செய்தியை அறிந்தவுடன் நான் எப்படியாகுதல் எனது இறுதி அஞ்சலியை வணக்கத்திற்குரிய அடிகளாருக்கு செலுத்தவேண்டுமென்ற அவாவினால் வந்தேன். எனக்கு பேசுகின்ற வாய்ப்பை அளித்த ஆயர் அவர்கட்கும் இந்த மரண வைபவத்தை ஏற்பாடு செய்த வண. எல்லாச் சுவாமிமாருக்கும் நன்றி கூறி. தனிநாயகம் அடிகளாருடைய பாதையிலே தமிழோசையை தமிழ்முழக்கத்தை உலகெங்கும் பரவும் வகை செய்வது ஒன்றே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறு என்று கூறி ஆண்டவருடைய அடியாருகிய அவர் ஆண்டவருடைய பாதத்தில் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவராக என்றென்றும் வாழ்வார் என்ற நம்பிக்கை எங்கள் எல்லோருக்கும் உண்டு.

அதனைக் கூற அருகதையற்றவன். மீண்டும் ஒரு முறை அவருக்கு எனது அஞ்சலியை வணக்கத்தைத் தமிழ் மக்கள் சார்பில் தெரிவித்து நான் விடைபெற்றுக்கொள்கின்றேன்.

தொகுப்பு: அருட்செல்வன். எஸ். ஏ. ஐ. மத்தியூ.

புலவர். ஏ. டபிள்யூ. அரியநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த ஈழத்துறவி.

பொன் ஏரம்பமூர்த்தி. B.A.

இல்வாழ்வை வெறுத்தொதுக்கித் துறவிகளான பலர் தமிழணங்கின்பால் காதல் மீதூரப் பெற்று அவளுக்காகவே வாழ்ந்த கதைகள் தமிழ்கூறும் நல்லுலகில் நிறையவுள, செந்தமிழ்க்காப்பியமாம் சிலப்பதிகாரம்* செய்து அளித்துச் சிந்தை மகிழ்ந்தார் ஒரு தமிழ்நாட்டுத் துறவி. தேம்பாவணி பாடி அவளை அணிசெய்து அகமகிழ்ந்தார் ஒரு இத்தாலியத்துறவி. இன்னுமோர் ஐரோப்பியத்துறவி தமிழிலே தன்னைப் பறிகொடுத்து தமிழ்மாணவனாக வாழவமைந்தார். இந்த வரிசையிலே ஈழத்திருநாட்டிலும் துறவற வாழ்வில் தலைப்பட்ட துறவியர் பலரும் தமிழணங்கைப் பல்லாற்றாலும், அணிசெய்து ஆதரித்து வளர்த்து வந்துள்ளனர்.

ஈழநாடு ஈன்றெடுத்த தவப்புதல்வர்களாம் வசனநடை கைவந்த வல்லாளர் நாவலர், யாழ்நூல் உலகுக்குத் தந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் வழித்தோன்றலாய் தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளும் தமிழ் வளர்த்த துறவியாவர், நம்மிடையே திகழ்ந்தவர். தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமது அறுபத்தேழாவது அகவையிலே புகழுடம்பெய்தியது தமிழர் செய்த தவக்குறைவோ என எண்ணத்தோன்றுகின்றது. அடிகளாரின் மறைவு தமிழுலகம் இழக்கமுடியாததொன்றை இழந்து விட்டது போன்ற ஓர் உணர்வைத் தோற்றுவித்துள்ளது. தமிழ்ப்பற்றின் மிகுதியால் இவ்வுலகில் அடிகளார் வாழும்வரையும், தமிழில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராயும், தமிழன், தமிழர் கலாச்சாரத்தின் பெருமையையும் உலகோர் அறியவேண்டுமென்ற ஆர்வமுள்ளவராகவும், தொண்டாற்றியமை எமக்கு வியப்பன்று.

அடிகளார் தமிழ்த்தொண்டு உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் * உவகை பயப்பதாய் உள்ளது. தமிழ் வளர்ச்சியில் அவர் பணி ஒரு துறையில் மட்டும் ஏற்பட்டதல்ல. பல்வேறு துறைகளிலும் பரந்துபட்டுச் சென்றுள்ளதை அவரது தமிழ்வாழ்வை உற்று நோக்குவோருக்குப் புலப்படும். அடிகளார் வெளிநாடுகளில் தமிழ்த்தூதராய்த் திகழ்ந்தார். விரிவுரையாளராக- பேராசிரியராகச் சேவைபுரிந்தார். ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியும், நூல்களை இயற்றியும். தொண்டாற்றினார், பத்திராசிரியராயிருந்து உலகமெங்கும் தமிழ் மணம் கமழச்செய்தார். தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றுவரக் களம் அமைத்தார்.

தமிழ் வளர்த்த அறிஞருள் தனிச்சிறப்புள்ளவராகத் தவத்திரு தனிநாயகம் அடிகளைத் திகழ வைத்தது அவர் தமிழ்த்தூதராய் விளங்கியமையே என்பதில் [illegible] மிகைபடக்கூறியதாகா. அடிகளாரைத் தமிழ்த்தாய் [illegible] சிறப்பிக்கக் காணவிருந்தவரல்லர் [illegible] வழிப்பட்ட தமிழ்த்தொண்டு அமைந்துள்ளது. புரட்சிக் கவி பாரதியின் "சேரத் தமிழ்மொழியை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" [illegible] ற்றலை நடவாக்கும் பொருட்டு பிரான்ஸ், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று தமிழர் தம் பெருமையினையும், தமிழ்க் கலாச்சாரத்தின் உயர்வினையும் பற்றி பல விரிவுரைகளை நிகழ்த்தித் தமிழின் தூதராய்த் திகழ்ந்தார்.

நாற்பதிற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் ஆய்வுரை நிகழ்த்தி [illegible] வியக்குமாறு தமிழின் பெருமையினை உலகறியச் செய்தார். அடிகளார் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராய் அமைந்து தமிழை வளர்த்தார். அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் ஈராண்டுகளாகத் [illegible] பற்றி விரிவுரை நிகழ்த்தி மேனாட்டாரும் தமிழ் [illegible] தனியே அவர்க்கு இலக்கியம் உண்டு [illegible] பண்பாடு உண்டு என்பதை அறிய வெளிப்படுத்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கொழும்பு வளாகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார். பேராதனை வளாகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்து பணி செய்தார். ஏழாண்டு காலமாக மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறைத் தலைமைப் பேராசிரியராக இருந்து அருந்தொண்டாற்றினார். அங்கிருக்கும் போது விடுமுறைக் காலங்களில் வெளிநாடு சென்று [illegible] விரிவுரை நிகழ்த்தலில் [illegible] ஈடுபடுத்தினார்.

தனிநாயகம் [illegible] ஆய்வுக் கட்டுரை எழுது[illegible] ஒரு [illegible] கலையாக விளங்கியது. தம் கட்டுரை வன்மையை [illegible] தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதி [illegible] வெளிப்படுத்தியதோடு அரிய கருத்துக்களை [illegible] கட்டுரை [illegible] ஆங்கிலத் தமிழ்க் கட்டுரைகளில் சிலவும், மற்றும் [illegible] நூல் வடிவில் வெளிவந்துள்ளன. அவரது தொகுதி தமிழ்த்தா[illegible] தமிழில் [illegible] ஈடுபாட்டுக் கட்டுரைகளைப் படிக்கும் போது அவருக்குத் தமிழில் [illegible] கலாச்சாரத்தை அறியவே பற்றும், வெளிநாட்டார் தமது மொழியை [illegible] மேற்கொண்ட [illegible] ஊட்டும் [illegible] நெஞ்சை நெகிழ வைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டார் இந்திய இலக்கியம் என்றால் வடமொழி இலக்கியம் தான் – இந்திய வரலாறு என்றால் வடஇந்திய வரலாறு தான் – என்ற எண்ணமிருந்த எண்ணத்தை எடுத்துக்கூறும் அடிகளாரின் ஆய்வுரை அவரது "தமிழ்த்தூது" என்ற கட்டுரையில் மேலோங்கி நிற்கின்றது. அந்த மனப்பான்மை வெளிநாட்டினரிடையே நீக்கி தமிழையும், தமிழர் கலாச்சாரத்தினையும் உலகறியச்செய்த பெருமை அடிகளாருக்கே உரியது.

அடிகளார் நூலாசிரியராகவும், பத்திராசிரியராகவும், இருந்து தமிழ் வளர்த்தமை தமிழுலகம் பெருமைப்படக்கூடியதொன்றாகும். தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டுமன்றி இலத்தீன், இத்தாலி, பிரான்ஸ், மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தமையால் ஒப்பியல் ரீதியாக தமிழ்மொழியின் சிறப்புக்களை எடுத்துக்கூற அடிகளாருக்கு இயன்றது. அடிகளார் தம் ஆக்கங்களை ஆங்கிலத்திலும் தமிழிலுமே பெரும்பான்மையும் ஆக்கியளித்தார். தமிழில் எழுதும் நூல்கள் தமிழ் தெரிந்தோர்க்கு மட்டுமே உதவுமாதலின் தேமதுரத்தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்யவேண்டுமாயின் ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்பதை உணர்ந்து பல நூல்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். * சங்க இலக்கியத்தில் இயற்கை, தமிழ்ப்பண்பாடும், நாகரீகமும், வெளிநாடுகளில் தமிழ், தமிழ் மக்களியல் போன்ற ஆய்வு நூல்களை ஆங்கிலத்தில் யாத்தார். தமிழ்மொழியில் தமிழ்த்தூது என்ற கட்டுரைத்தொகுதியைவிட ஒன்றே உலகம் திருக்குறளின் சிறப்பு முதலிய நூல்களையும் எழுதி வெளியிட்டு எம் – தாய்மொழியாம் தமிழ் மொழியை வளர்த்தார். நூல்கள் எழுதி வெளியிட்டதொடு [illegible] மட்டும் அமையாது பத்திரிகை ஒன்றையும் நடத்தினர்.

தமிழ்ப்பண்பாடு (TAMIL CULTURE) என்ற ஆங்கில முத்திங்கள் ஏட்டிற்கு இருபது வருடங்களாக ஆசிரியராக இருந்து உலகெங்கும் தமிழ் மணம் கமழச்செய்தார். ஏனைத் தமிழ் வளர்த்த துறவியரும் அறிஞர் பெருமக்களும் செய்திராத அரிய தமிழ்த்தொண்டு ஒன்றிற்கு களமமைத்தமையால் தவத்திரு அடிகளார் ஒருபடி உயர்ந்து நிற்கின்றார். பலகண்டங்களிலுமுள்ள தமிழ் அறிஞர்களை ஒன்றுகூட்டி 1964ம் ஆண்டு தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவியமையே அந்த அரிய தொண்டென்றால் அது மிகையாம் புகழ்ச்சியன்று. தமிழ் வழங்கும் நாடுகளிலே தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற வழியமைத்த அவரது தமிழ்த்தொண்டை என்னவென்பது? 19[illegible]ம் ஆண்டில் கோலாலம்பூரில் தொடங்கிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு செல்லுந்தோறும், தனிநாயகம் அடிகளாரின் பெருமைகளையும் * பறை சாற்றிக் கொண்டேயிருக்கும்.

அடிகளார் தொடங்கிய தமிழாராய்ச்சி மன்றத்தைப்பற்றி கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் குறிப்பிடும்போது "அது அவரது * குழந்தை. அக்குழந்தையின் வளர்ச்சியே அவரது இலட்சியம்" என்று விரந்து கூறுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு எவ்வெவ்வ வகையில் தொண்டு செய்ய முடியுமோ அவ்வவ் வகையெல்லாம் முயன்று அரும் தொண்டாற்றிய ஒருவர். தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் உலக ஆசைகளைத் துறந்த கத்தோலிக்க துறவியானபோதும் தமிழார்வத்தினாலே தமிழ் வளர்த்தலே தம் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே". என்ற திருமந்திரத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த அடிகளார் நல்முகத் தமிழ்ப்பணி புரிந்து தமிழ் கூறும் நல்லுலகில் * தனி ஒரு இடத்தைப்பெற்ற தமிழறிஞர்களுள் தனிநாயகமாகத் திகழ்கின்றார் .

*****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயக மாண்மியம்

தனிநாயக மான்மியம்

**************

( பண்டிதர் ஆசிநாதர் )

1. முற்றத் துறந்த துறவியரின்
மூழ்கிப் பிளந்த குருவெனிடம்
பற்றைத் துறவா மொழிப்பற்றால்
பாருல கெங்கும் அறிமுகமாய்
சுற்றவ ரேற்றிப் பாராட்டும்
கலைஞர் அறிஞர் மேதையென்றும்
முற்றைத் தமிழர் நாயகமாய்
இலங்கினர் எம் தனி நாயகனார் .

2, உலகம் எங்கும் செந்தமிழின்
உயர்வுப் பண்பைத் தனித்துவத்தை
தலைமை மரபுப் பண்பாட்டை
தாங்கிய இலக்கிய வரலாற்றை
நிலைபெற விளக்கிய நாவலராய்
நிலாவென விளங்கிய வித்தகராய்
பலமொழி பயின்ற விற்பனராய்
பாரோர் புகழும் பரிசுற்றார் .

3. கலைமுது அறிவினிற் கரைகண்டார்
கல்விப் பட்டம் பல பெற்றார்
உலவிடு முலகுயர் மொழிகளிடை
ஒருமைப் பாட்டை உற்றறிந்தார்
பல்கலைக்கழகம் ஆய்வகங்கள்
பதிப்பகப் பிரசுர நூலகங்கள்
கலைநிலையங்கள் அத்தனையும்
கண்டிட ஆய்ந்த அறிவுற்றார் .

4. ஒன்றே உலகம் இறையவனும்
ஒன்றே மனிதர் இனத்தவரே
இன்றே என்னும் தத்துவத்தை
அன்றே தமிழன் வெளியிட்டான்
என்றே உலகிற் பறைசாற்றி
ஒண் தமிழ் மொழிக்கு உயர்வளித்தார்
என்றே ஒருநாள் உலகமெலாம்
ஒன்றித் தியங்கும் நிலைவருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பட்டதோர் படைத்தான் தமிழ் செய்யப்
பாடநூல்களும் தானமைத்த
விடுதலை மொழியும் மறையும் தாம்
கூரிய எல்லை அருகும
உடைமை நாம் தமிழ் இறைவர்க்கே
உழைப்பை அளிப்பாய் ஏற்றிட்டேன்
விடை தான் இங்கே வருவோரையும்
விடாத தொடர்வேன் என வாழ்ந்தார்

6. கலைமொழி வளர்க்கச் சங்கங்கள்
கலாசாலை நூல் குழுக்கள்
நிலையுள் நலன் புரி இயக்கங்கள்
நீடித்தியங்க நிறுவனங்கள்
சிலையெனக் குறிச் சங்கங்கள்
சிறப்புப் பணிசெய்ய நியமங்கள்
பலபல ஆக்கி உருப்படுத்திப்
பாரோர் புகழ்ப் பணிசெய்தார்.

7. வகை வகையான மொழிநூல்கள்
வகுத்துத் தொகுத்து வெளியிட்டவர்
தொகை தொகையான கட்டுரைகள்
தொலையாப் புகழ்த் தொகுப்புரைகள்
சுவைசுவையான வழிநூல்கள்
கற்றலாக்கலின் வழிநூல்கள்
அவையுடன் ஆய்வுப் பேருரைகள்
ஆக்கி அச்சிட்டு வெளியிட்டார்.

8. கலைவழி மொழிவழி தொண்டிறையில்
விழுத்தமைக்க அப்பருவே
ஏனென்றே தெரிவித்தார்
ஈடு செய்கையில் காண்பித்தார்
உலகில் உயரிய நாடெங்கும்
கூட்டுறுதோழியே உணர்வித்தார்
பலத்தமிழ் மக்களைத் தாக்கத்தந்தார்
மறப்பவர் மறைப்பவர் எவரேனோ.

* * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம்

(பண்டித வி. சீ. கந்தையா).

தமிழுலகம் ஈடுசெய்ய முடியாததொரு பேரிழப்பை அண்மையில் பெற்றுள்ளது. அதுதான் தனிநாயகம் அடிகளாரின் மறைவாகும்.

வண. சேவியர் தனிநாயக அடிகளார் தன் காலம் முற்றும் கற்றோர் மத்தியில் ஒரு தனித்துவம் பெற்றுத் தனிநாயகமாகவே திகழ்ந்தார். தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பிரான்சு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். தமிழில் ஏதாவது ஒன்றைப்பற்றி அவர் பேசினால் * அருகிலிருந்தும் வாய்மூடி அவர் பேச்சைக் கேட்கும். அவ்வளவு தூரம் இனிமை நிறைந்த, தமிழின் சாயல் இனிமை நிறைந்தது தான் என்பதையெவரும் உணரச்செய்யும் பேச்சாற்றல் நிறைந்தது காணப்படும் அவரது சொற்பெருக்கும்; அதன் உயிர்த்துடிப்பும்,

மட்டக்களப்பு நாட்டின் இயற்கைவளம், மொழிவளம், கலை பண்பாடு முதலியவற்றிலே பெரிதும் ஈடுபாடு கொண்டவர். இங்கு வழங்கும் மொழிச்சிறப்பில் அவருக்கு இருந்த பெருமகிழ்ச்சியை எமது மட்டக்களப்புத் தமிழகம், என்னும் நூலுக்கு அவர்கள் தந்துள்ள அணிந்துரையுள்; கூறுவனவற்றைப் படிக்கும்போது நன்கு உணரலாகும். அதற்கென ஓர் ஒரு பத்தி பின்வருமாறு உள்ளது....

மட்டக்களப்புக்குச் செல்லும் வெளிநாட்டாருக்கு வியப்பூட்டும் வகையில் இங்கு வழங்குவதும் பழங்காலத் தொடர்புடையதுமான * மொழிச்செல்வம் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ள ஒன்று. அத்துறை இந்-நூலில் விரிவாக ஆராயப்பெற்று, நாட்டு வழக்கிலுள்ள பல சொற்களுடைய பொருள் வளமும் நன்கு காட்டப்பட்டுள்ளது. தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலே வழக்கிலின்றொழிந்தனவாய் இங்கே வழங்கிவரும் சொற்கள் * சிலவற்றின் பயிற்சிச் சிறப்பைப் பண்டைய இலக்கிய ஆட்சியிலிருந்து எடுத்துக்காட்டி ஆசிரியர் அவற்றிற்கு நல்விளக்கம் தந்துள்ளார்.

இவ்வாறு அடிகளாரது ஆர்வத்திற்கு இலக்கான மட்டக்களப்புப் பழந்தமிழ் மொழிச் செல்வத்துள் ஒன்றினையாவது இங்கு தருதல் பொருத்தமென்று எண்ணுகின்றேன். இல—கா என்னும் இரண்டும் சேர்ந்து— "இலக்கா" என்று பேச்சு வழக்கிலும் மட்டக்களப்பில் வழங்குகின்றது.

" யா ; யா "
பிற, பிறக்கு, அரோ, போ, மாது, எனவரூஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி " ..... சொல் 279

Digitized by Noolaham Foundation

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற் காட்டப்பட்ட ஏழு அசைச் சொற்களும் பண்டைச் செய்யுள் வழக்கிற் பயின்று நடந்தவை,

" அமிழ்துலைக் கொண்டாய் குடைக் [illegible]
நமதிறத் தீர்ப்பட்டோரோ இவைவட் காண்கோ"

என்னும் பதிற்றுப்பத்துச் செய்யுளில் " காண்க" என்னும் முன்னிலையில் வினையோடு "கா" என்ற அசைச்சொல் புணர்ந்து சொல் [illegible] வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவ்வழக்கம் பிற்கால-த்தில் அருகிவந்து மறைந்து போயிற்று, ஆயினும் மட்டக்களப்பு நாட்டிலே, செய்யுள் வழக்கில் மட்டுமன்றிப் பேச்சு வழக்கிலும் இவ்வசை வழங்குவதையும் இன்றும் காணலாம். மட்டக்களப்புப் புலவர் [illegible] அவர்கள் செய்த " [illegible] வெண்பா "வில்

" காண்டகா காண்டகா கழுதே " என்பது ஓரடி நெல்லாங்கு மகளிர்

" நெல்லிக்குத்தகா காக்கே [illegible] " என்று கவிகேட்டாலும்

" [illegible] காக " என்று சொல்பவர் கவி அழைத்தலும், * [illegible] " இல்லகா" என்று சொல்லி விருத்தலும் போல நவின்று பட்ட மாத்திரம் " கா" இடம் பெற்றுள்ளது.

" புள்ளலெக்கா புள்ளலெக்கா – உன்ற
புரூலெங்க போனதகா
கல்லாட்டுத் திண்ணையில
கழு பழகப் போகுதகா " – என்ற

மட்டக்களப்பு நாட்டுக்கவி வழக்கில் "கா" முன்னிலைச்சேற்று அசைச்சொ--ல், [illegible] விளிவும் விடையுமாய் அமைந்திருக்கும் இக்கவியுள் இடம் பெற்றுள்ளது. "கா" என்ற அசைநிலையை ஏற்ற இக்கவியுள் வந்துள்ள " [illegible] " என்னும் விளிப்பெயர் [illegible] ஒருசொல்லாகும். [illegible] சொற்களும் ஒன்று சேர்ட்போது கவியுல-பிரிக்க [illegible] " புள்ளலெக்கா" என்ற ஆகியதின்-யின் [illegible] " புள்ளை" ஆயிற்று. இவ்விதமே. " பிள்ளை" என்ற சொல் திரிந்த "புள்ளை" யுடன் சேர்ந்து வந்த "இலக்கா" என்பது இல வழக்கை " புள்ளை" [illegible] தொடராகும். "இல" என்னும் சொல் [illegible] தொடர்பிலை. சொற்கள் மூலம் மொழிவழக் வழக்கு [illegible] தொடர்பினை. [illegible] , நாட்டு வரலாறு, [illegible] மட்டுமன்றி [illegible] ஒருகலாது , [illegible] புலப்படுகின்றன. இச்சிறப்பினையே ஆங்கிலச் [illegible] சொல் [illegible] லாசிரியரான ஜோன்சிரசிம் என்பவரும் பின்வருமாறு குறிப் பிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பழங்காலத்துச் சமுகநிலை , அரசியல் நிலை என்பவற்றைக்கண்டு அவற்றைப்பற்றிய தம் கருத்தை மற்றோரும் நமக்கு அறிவிக்குமாறு, அந்நிலைகளைக் காட்டுவனவாய் இன்றைய சொல்வடிவில்வழங்கும் நிலவுச் சின்னங்களை ஒரு [illegible] குறித்து வைத்தல்வேண்டும். ஒவ்வொரு நாட்டவரினதும் அகவாழ்வானது, அவரது மொழியிலகா எழுத்திற் பேச்சு வழக்குப்படி பொறிக்கப்பட்டு எதிர்கால மக்களின் அறிவுக்காகப் போற்றப்படுகின்றது. அதனால் நாட்டு வரலாறு, பழக்கவழக்கங்கள் ஒழுக்க விதிகள் என்பவற்றைப் பொருள் வழக்கொழிந்த சொற்களினின்றும் , வெளிக்கொணராத ஆசிரியர், தமது வரலாற்று ஆராய்ச்சியில் மிகுதியும் தவறுபவராவர்.

இப்பெரியாருடைய கற்றக்கழிய தமிழ்ச்சொற்களின் ஆட்சிமுறை , இடத்துக்கிடம் வழங்கும் தன்மை , முதலியவற்றை ஆராய்வதி—லும், ஈடுபட்டிழைத்த பெருமையும் தனிநாயக அடிகளாரைச் சாரும்... பல்வேறு மொழிகளிற் திறமையுடையவராய் இருப்பினும், தமிழ்மொழி—மீது அவருக்கு இருந்த பற்றும் பாசமும் சொல்லமுடியாதவைகள் ஆகும்.

தமிழ் மொழி உலகெல்லாம் பரவும் வகை செய்தல்வேண்டும் என்றும், " யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பும் கூட்டிய தமிழாராய்ச்சி மாநாடுகளின் நிறைவு கண்ட கோலாலம்பூரில் நடந்த முத*லாவது தமிழாராய்ச்சி மாநாடுகளின்போது தமிழ் மொழி அவரால் வளம்பெற்றது எனலாம். பலநாடுகளிலும் இருந்து தமிழ் அறிஞர்கள் அங்குகூடினர் எனினும், எல்லோர் மத்தியிலும் தமிழ் மணம் கமழச் செய்தவர்,, அந்நிகழ்ச்சிக்குப் பூரண பொறுப்பாளராக இருந்த அடிகளாரே. அவர்* மறைந்து விட்டபோதிலும் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து—அவர் வழிநின்று உழைக்கவேண்டியது. நம் அனைவரதும் கடமையாகும்.

( திரு வீ.சி. கந்தையா

வாழ்க. வண. தனிநாயகம் அடிகளார்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

(1) தமிழ்த்தாயின் தவப்பேறாய் வந்[illegible]தோன்
நா[illegible]யில் தனிநாயகம் என்ற பெரியோன்
[illegible]னை தமிழ்மொழியை அயல்நாட்டார்
அழகாகப் பயின்றிட வழி[illegible] [illegible]ந்தோன்.
ஈழத்தில் பிறந்திந்த அடிகளார்
[illegible]திலே யாவையும் [illegible]
[illegible]ழில் பெற தமிழ் மொழியின் மேன்மையை
இலங்கவைத் [illegible] [illegible] அந்தோ

-----

(2) [illegible] மக்கள் [illegible] [illegible]த்தில்
[illegible] கவிதைகளும் வா[illegible] எல்லாம்
[illegible] மகளாய்த் தமிழ[illegible] ([illegible]) வாகாதென
முடிபு[illegible] [illegible] உணர்த்தி
செடி[illegible] [illegible] [illegible] [illegible]
சிறந்த [illegible] நல் மலர்போல
வடிவழகு , அறிவு, நற்பண்புகளால்
வரலாறு படைத்திட்ட அமைதி கொண்டாள்.

(3) பிறக்குமெம் குழந்தையெல்லாம்
பெரியோன் தனிநாயகம்போல்
அறந்தார் அவர் வேளை , [illegible]சொல்
ஆசைகளையறவே அகற்றி[illegible]
மறத்தமிழர் வீரம் [illegible] ,
மாபெரிய பண்பாட் டொழுக்க நிலைகளை
ஆற்றலுடன் காப்பதிலே [illegible]போல்
[illegible] மிளிர்ந்திட [illegible].

-- ----

(4) சொந்த மொழிப் பற்றின்றி வாழ்வில்
எந்த மொழி [illegible] [illegible]
வந்த மொழி யாவுமே [illegible]யகத்தில்
வாகையப்பணிகள் செய்திழிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைகள் புரிந்துயர்ந்து நின்றோன்
சுந்தரம் தாய்த் தமிழ்மொழிக்காய்
தந்தைமார் உயிரையும் தமிழ்த்தழைத்த
வந்த கைகள் செய்திட வழி வகுத்தான்.

---

(5) தன்னுடைத் தன்மொழியைத் தாரணியை
தன்னிகர்த்த தனதாவி உயிர்மூச்சாய்
கண்ணி என்றுட்டோரும் வியந்த
எழுச்சி பெற்று எழுந்து உயர்வதற்கு
கண்ணியமாம் வழிகளைக் கவனமுடன்
காட்டி அழைத்துச் சென்றிட்ட
புண்ணியரும் தனிநாயகம் அடிகளார்
புகழுடம் பிவ்வுலகில் நிலைத்து நிற்கும்

---

(6) தாய்நாட்டின் சரித்திரத்தில் தனியிடத்தை
தாங்கிடத் தக்கதொரு வரலாற்றை
ஓயாத சேவையால் ஒரு துறவி உருவாக்கி
"தாய் தமிழ்" கங்கை போல உலகெங்கும்
பாயவே "அரங்குகள்" ஆக்கிவைத்த
சேயாம் தனிநாயகம் தமிழணங்கு
செய்தவத்தினால் சிறப்புகள் பலபெற்று
மாநிலத்தில் மங்கா விளக்கமானார்.

---

(7) வரலாற்றில் புகழ் படைத்த மக்களிடை
வாழ்ந்த மைம்பப்பும் அடிகளார்
அறம்பொங்கும் தியாகங்கள் பொதுவாழ்வில்
வெற்றியுறத் தமிழுக்காய்ச் செய்துயர்ந்த
ஏற்றம் பெற்றிலங்கும் மகன் இவ்வுலகில்
இறப்பதில்லை அவர் சேவை வையகத்தில்
இருப்பதினால் உலகுள்ள நாளளவும்
ஒளிவிளக்காய் இலங்கி உயர்ந்து நிற்பார்.

---

கவிஞர். ஏ.யு.எம்.ஏ.கரீம்
ஆசிரியர்
கார்மேல் பாத்திமாக் கல்லூரி.

# FATHER XAVIER THANI NAYAGAM - THE DEDICATED TAMIL PATRIOT

A. Jeyaratnam Wilson.

One by one the lights go out. A senior generation of Tamil patriots have departed from the scene leaving a people almost orphaned but for the new leaders who are striving to come to the fore. From the time I knew Father Thani Nayagam, he was right in the vortex of Tamil nationalism. He did not belong to any party and this left him free to take up independent positions on the issues of the day. I have reason to believe that the concept of federalism was attractive to him. However for the greater part of his "romance" with Tamil nationalism he concentrated on the preservation of Tamil culture and the protection of the Tamil language.

This dedication to the Tamil language and Tamil culture, he married into the second of his vocations - university teaching. He had had a long and distinguished record as an exponent of Tamil history and scholarship during his sojourn in South India. He then came to the University of Ceylon at Peradeniya as a lecturer in education. I do not think the position had an appeal to him. But he liked Peradeniya and he loved his friends there. Then came his distinguished appointment to the Chair of Indian Studies at the University of Malasia, Kula Lumpur, shortly after which he also became Dean of the Faculty of Arts. This was the zenith of his second vocation. He had by then published a great deal; written many books and articles and won acclaim and laurels in the world of academe.

But at his back there was the winged chariot of Tamil nationalism always drawing nigh. At Kula Lumpur, Father (as he was often called) organised the First World Conference on Tamil Studies which proved a tremendous success both for Tamil scholarship and cause of Tamil nationalism. The proceedings of the Conference was followed by a two volume publication comprising contributions from the prima donnas of Tamil scholarship the world over, the work being edited by Father. While in Malaysia, Father was also busy raising the consciousness of Tamils of Sri Lankan origin there what is more, he madefrequent visits to Madras to advocate the cause

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of the Tamils of Sri Lanka to the leaders of the Indian National Congress and of the DMK in Tamil Nad. He had the singular advantage of being a friend of many of the leaders in both political parties. He was also close to C.Rajagopalachari.

Late in the 'sixties, ill-health began to take a toll on Father and he decided to retire back to Sri Lanka. For a year or so, he came and lived with me at my residence inperadeniya at the time that my children had moved to Colombo to pursue their education, and opportunity had come my wife's way to practise her profession as a librarian at the Industrial Development Board in the capital city. Just before I left for Canada, Father decided to find his last home in one of the residences of the Roman Catholic Bishop of Jaffna. His health deteriorated but his interest in the Tamil cause remained alive to the end. I visited him on occasion during my recent spells in Sri Lanka and we also corresponded from time to time. The theme was usually the cause of Tamil nationalism.

The fact of the matter was that Father was an unusual bled of pirest,scholar, university teacher and a Tamil national leader. This was a heavy load for any person but Father proved a success in each of these vocations (I deliberately have refrained from describing any of these as "professions" because Father never looked at them a such preferring to regard each as a calling in the reverential sense). Father however never gave into the temptation of resorting to didactiscism and moralizing repetitiveness - an occupational hazard resulting from the doubly compounded necessity of being priest and university teacher. Nor did he seek to move with the times and be in the trend of identifying himself with radical thought and youth militancy. From first to last he remained a Tamil nationalist. His classic Language and Liberty in Ceylon published shortly after the enactment of the Official Language Act in 1956 will forever kindle the hearts of genuine votaries of the Tamil cause.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Father was a cultivated civilized human person. He enjoyed exercise. He loved reading. He often listened to western classical music and he frequented Tamil music festivals in Tamil Nad and Sri Lanka. My wife and I accompanied him in some of his attendances. He would many times wander into discussing the philosophy of life, its meaning and its purpose, brin ing into the discussion his lifelong study and immersion in Roman Catholic theology. True to his gifts as a versatile man, he was also dedicated to the study of languages which in a way made him a complete person. He was fluent in more than eight languages. And his world consequently was ever expanding in concentric circles.

The Tamils have lost a selfless leader. Many of us will miss a true and loving friend. He was extremely close to my father-in-law, S.J.V.Chelvanayagam, to the late M.Tiruchelvam and to his wife Punitham and he was very near to the late G.G.Ponnambalam. Father was fearless in his advocacy of the Tamil cause. He realised sooner than others the importance of identifying himself with the central issue of his times. The relating of that story and its details will be a work in itself for a future historian of Tamil nationalism.

A. Jeyaratnam Wilson

Department of Political Science,
University of New Brunswick,
Fredericton, N. B., Canada.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் வளர்த்த தனிநாயக அடிகளார்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய். என்ற குறளின் இலக்கணமாய் — சான்றோருள் சான்றோராய் — சமயத் தொண்டராய் — தமிழ் நிறைந்த பேராசானாய்த் திகழ்ந்த செந்நல் தவத்திரு தனிநாயகம் அடிகளாவர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழறிஞர்களில் தலையாயவரும் ஈழம் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களுள் ஒருவருமான அருட்திரு தனிநாயகம் அடிகளாரவர்கள் தமிழுக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் ஆற்றிய அரும்பெரும் பணியினை நாம் நினைவுகூராதிருக்க முடியாது.

### உலகெலாம் தமிழ் மணம் பரவ வேண்டும்.

தமிழின் தொன்மை — இளமை — வளமை என்பன உணர்த்தப்படல் வேண்டுமென்ப் பாரதி அன்று கண்ட கனவை நனவாக்க அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை முதன்முதல் முன்னின்று நடாத்தி முழு உலகும் போற்றும்வண்ணம் காரியமாற்றியவர் தவத்திரு தனிநாயகமடிகள். அன்னார் தமிழ்மேற்கொண்ட அளவற்ற மையல் காரணமாக, அதனை ஐயந்திரிபறக் கற்க முயன்று பல ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டார். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கொப்ப தாம் அறிந்த, சுவைத்த தமிழமுதை உலகோரும் சுவைக்க உறுதுணையாயமைந்தார். தமிழின் சிறப்பினையும், அதன் வளர்ச்சியினையும் உலகோர் அறிய ஆங்கில மொழி மூலம் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டார். அடிகள் பன்மொழிப்புலமை பெற்றவரானதால் பல கருத்துக்களை எளிதாகவும் தாக்கமாகவும் வெளியிடும் ஆற்றல் மிக்கவராய் விளங்கினார். இதன் காரணமாகத் தமிழ் அன்னைக்குப் பல அணிகலன்களைச் சூட்டும் வல்லமை பெற்றிருந்தார். தமிழ் அ[illegible] அடிகளார் சமைத்த அணிகலன்களில் ஒன்றும்.

காலத்தில் அழியாத பல கருத்துக்களை வெளியிட்ட [illegible] தவத்திரு தனிநாயகம் அடிகள் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தம் சொந்த மொழியினைப் பண்பாட்டினை வளர்க்கத் தனியானதொரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்தினை முதன்முதல் அடிகளாரே வெளியிட்டார். தாம் கொண்ட கருத்தினை வலியுறுத்த கிடைத்த சந்தர்ப்பங்களை அன்னார் என்றுமே நழுவ விட்டதில்லை.

பொதுவாக உலகின் பல பாகங்களிலும் சிறப்பாக இலங்கையில் ஒவ்வொரு கிராமத்திலும் தமிழ்க்கலாச்சார நிலையம் நிறுவ வேண்டுமென எண்ணங் கொண்டவராகத் திகழ்ந்த அடிகளார் அதன் முதலாவது நிலையினைக் கொழும்பில் நிறுவினார். கடல் கடந்த பல நாடுகளில் கல்விப்பணி புரிந்த அடிகள் தம் ஓய்வு நேரங்களைத் தமிழ் வாழ அர்ப்பணித்தார் என்றால் மிகையாகாது. 1966ம் ஆண்டு, மலேசியப்பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராய் விளங்குங்கால் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டினை

Digitized by Noolaham Foundation

யிலும் கோலாகலமாக ஆரம்பிக்க ஆவன செய்தார். அன்னாட்டின் அன்றைய பிரதமர்களுடு அப்துல் ரகுமான் உட்பட அந்நாட்டுப் பங்கு கொண்ட அவை யிலேயே அடிகளாரைப் போற்றிப் புகழ்ந்தனர். இந்நாட்டின் அர்ச்சானியாய் விளங்கிய அடிகளார் அங்கு ஆற்றி செயலாளராயிருந்து அளப்பரிய சேவையாற்றினர். சொல், செயல் ஆகியவற்றில் சிறந்து பிரகாசித்த தெய்வத்தமிழ்வளர்த்த வள்ளல் வண. தனி நாயகமடிகள்.

கலை, கலாச்சாரம், பண்பாடு, அரசியல், அறிவியல் ஆகிய துறைகளில் அடிகளாருக்கிருந்த ஆர்வமும் அறிவும் அத்துறைகளை மேலும் வளமுறச் செய்தனவெனலாம். அடிகளாருக்கிருந்த தமிழ்ப்புலமை, அவரின் நூல்களைக் கற்பவரை மெய்மறக்கச் செய்யும் கற்றோர் அவை திகழ்ந்திருந்ததை கணிக்க முடியும். ஏசு சபையில் தமது 17வது வயதில் சேர்ந்த அடிகள் தாம் சார்ந்த சமயத்தையும் தம் தாய்மொழியையும் இருகண்களாக மதித்து, அவற்றைப் போற்றி வளர்த்து வந்தார். குறிப்பாக தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளை உலகம் உள்ளளவும் மறக்கவொண்ணாது.

இன்று தமிழ்த்தாய் தன் தவப் புதல்வர்களுள் ஒருவரை இழந்து தவிக்கிறாள். எனினும் அவர் காட்டிச் சென்ற — வளர்ந்துச் செல்ல தமிழ் மொழியையும், பண்பாட்டையும் நாம் தொடர்ந்தும் வளர்க்கத் திடசங்கற்பம் பூணுவதே அவரின் ஆத்மசாந்திக்கு உகந்ததாகும் என்பதனையும் இக்கூறின் பொருத்தமுடைத்து. வாழ்க தமிழ்.

ஜோப். கே. எல். ஞானஉறிந்
ஆசிரியர்,
கார்மேல் பாத்திமா கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திருவே தனிநாயகம் அடிகளாரே
தமிழுலகும் திருமறையும் தவிக்கச் சென்றீர்.
*****************************

(அமுதகவிப் புலவர் யாழ் ஜெயம்.)

1. அன்னமொடு சொரிந்தன நாள மீந்தே
அருங்கொடையின் வளந்திகழ்ந்த மரபிற் பத்த
கவினகர் சும்மாவும் ஸ்ரீயும் காத்த
காதலறக் காவினிலே கனிந்த செல்வா
பகரிய குணசீலம் எழில் மெய்ஞ்ஞானம்
பரிமளிக்கக் கலையிலகின் செங்கோல் தாங்கி
மன்னவனாய் ஒளிர்ந்தவனே மதி வல்லோனே
மாணிக்கச் சுடரொளியே மறைந்தாயோ நீ

2. கருந்தனமாம் திருமறையின் புனித ஞானக்
கலங்கரையாய் ஒளிகாலத் துறவு பூண்டு
பெருந்தவனாய் மிளிர்ந்தவனே வேத போதப்
பெட்டகமே கட்டழகாச் சால்புத் தானே
இருந் தமிழர் பண்பாடு வரலாறாய்வு
இனிமை நலம் பழமை வளம் இயல்பு யாவும்
விருந்தெனவே உலகரங்கம் நுகர்ந்தே போற்ற
விருந்த பணி புரிந்தவனே மறைந்தாயோ நீ

3. தவத்திருவே மறை இயலின் முனிவரே எம்
தனி நாயகக் குருவே அடிகளாரே
அவைப்புலவா முதுகலையே ஆய்வுத் தோன்றல்
அரிய கலைக்களஞ்சியமே தமிழ்ச்சொல்வெள்ள
உவப்புடனே கலையேடு படைத்த தந்தாய்
ஒட்டமிழ்மா நாடுகளின் மேதாய் என்றே
கவித்தனரே புகழ் அனைத்தும் கனவே என்று
கலையொளி வடிவுடனே கலந்தாயோ நீ.

4. சங்கமணித் தமிழ்ச் சான்றோர் தந்த செல்வத்
தனிப்புலமைக் கவிப்புதையல் அனைத்தும் ஆய்ந்து
பொங்கு புகழ் பரப்பிடவே பறந்து போந்து
புவியதிர முழங்கியபோன் முகிலே நின்னைத்

சங்கமணிச் சிலையேற்றித் தமிழ்த்தாயோடு
நாரணியும் போற்றவதைக் காண்போம் ஆனால்
எங்கள் மறைத் தலவிளக்கே கரம்பன் சொத்தே
எமதுயிரின் பேரிழப்பை இனி யார் தீர்ப்பார்.

5. முடிவேய்ந்த மன்னர்களாய்ப் படியாள்வோரும்
மூவாசை துறந்த பெரு முனிவோர் தாமும்
படிமீற மடியாதே வாழ்ந்தோரில் உல
பகத்தனவே இவ்வுலகு பனிநீர்முத்த
இடிவீழ்ந்த வாடக நெஞ்சம் தீய்ந்த
ஏங்குவதாத் தாங்குவதும் இயற்கை அன்றோ
அடிவீழ்ந்தே ஈசனை மலர்ப்பாதத்தை
அஞ்சலிப்போம் இரந்திடுவோம் அமைதி.

*************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இனிய தந்தை

எம் இனிய தந்தை

தமிழ்த்திரு நாட்டின் தவப்புதல்வன், ஈழநாட்டின் எழில் மிகு செல்வன், தரணி போற்றிப் பாடும் தனிநாயகமும் மறைந்தனரே! எங்கு நோக்கினும் இயலாமையின் மனக்குமுறல்கள், மனங்கவர்ந்த மன்னவனை இழந்த மக்களைப்போலப் பரிதவிக்கின்றனர் தமிழறிந்தோர். தமிழே தமிழ் பேசும் நல்லுலகமே உனக்கேன் இந்தச் சாபக்கேடு? உன் புகழ் பாடி உன் கதைபேசி உன்னோடு உறவாடும் உத்தமர்கள் விரைவில் உன்னை விட்டுச் சென்று விடுகின்றனரே.

அமிழ்தினிய செந்தமிழால் உந்தப்பட்டு தனிப்பெரும் * தந்தை, தரணிபோற்றும் தனிநாயகம் சென்றபோதும் தந்தை தனிநாயகம் * நான் யார்? நான் கொண்ட கோலம் என்ன? என்பதை மறக்கவில்லை. தவத்திரு அடிகளாய்த் தன்னை அர்ப்பணித்து தரணியெங்கும் தற்பரன் யேசுவின் நாமம் போற்ற, அவரின் பாதை சென்ற தனித்திரு நாயகம் அல்லவா, தந்தை தனிநாயகம். பதவியும் பவுசும் வந்துவிட்டால் பேரும் புகழும் பெருகிவிட்டால் கொண்டவனை மறந்து கண்டவரோடு சுற்றும் காலமல்லவா இது. இத்தகைய* நாளிலே தான் தான் பெற்ற அறவழியின் செல்வக் களஞ்சியமாம் விவிலியத்திருநூலை தன் கரமேந்தி, உலகவலம் வந்து சிலுவையின் நிழலிலே, தங்கிவிட்ட தனிப்பெரும் நாயகமான தந்தை தனிநாயகத்தை எங்ஙனம் மறப்பது?

" பற்றுக பற்றற்றான் பற்றினை — அப்ப
பற்றினர் பற்றற்றான் பற்றினன்

காண்பவர் கண்களுக்கு தனிப்பெரும் தமிழ்த் தலைவனாய், அறிஞனாய் வித்தகனாய்த் துலங்கிய தந்தை, தனித்தாற்றிய சமயத் தொண்டினையும் நாம் மறந்து விடமுடியாது. இளமையின் சுகபோகங்களை மறந்து நெஞ்சுக்கினிய அன்பர், யேசுவின் வழியைப் பின்பற்றி சற்குருவாய், நற்குருவாய், மாறிச் செயல் புரிந்த அவர் திருவாழ்வையும் மறந்து விட முடியாது. சங்கம் கூடிச் சங்க நாதமாய் தமிழோசை எழுப்புகையிலும் சரி கற்றவரும், மற்றவரும் அறிந்து கருத்துக் குவியல்களைக் குவிக்கையிலும் சரி,

" கற்றதினால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின் "

என்ற வள்ளுவரின் வாக்கை எடுத்தியம்பி இறைபக்தியின் தன்மையையும் முக்கியத்துவத்தையும் எடுத்தியம்பத் தவறவில்லை. இறைவனின் வரமின்றி கல்வியின் பயனைப் பெறமுடியாது அது பயனற்றது என்பதைக்கூற அவர் தயங்கவில்லை..

Digitized by Noolaham Foundation

தான் காணும் சகல விடயங்களையும் தேவனின் திரு மொழியாம் விவிலிய நூலோடு இணைத்து இன்பந்துய்க்க மறக்கவில்லை.. சிந்திய முத்துக்களாய்த் தமிழ் மழை பொழிந்து சென்ற வீரமாமுனிவரின்* சிந்திக்கத் தக்க செம்மொழிகளைத் தொகுத்து இறைமகன் யேசுவின் மகி மையை பாருக்குணர்த்தினார், தந்தை. " தேம்பாவணி " என்னும் நூலை உரமெனக்கொண்டு யேசுதேவனின் அன்புக்கினிய செயலையும் தமிழோடு சேர்த் துத் தரணிக்களிக்க மறக்கவில்லை. அருள் மகனைப்பெற்ற அன்னைமரியின்* புகழ்கூறும் செவிக்கினிய கவிதைகளைத் தொகுத்துத் தாயின் சேயாய், அர வணைக்கும் அன்னையின் திருவடிகளில் தன் சேவையை அர்ப்பணிக்கத் தவறவி ல்லை.

" உருவிலான் உருவாகி உலகில் ஒரு மறவுதிக்கக்
கருவில்லாக் கருத்தாங்கி கன்னித்தாய் ஆயினையே

என்ற திருமறையின் உள்ளக்கிடக்கைகளைத் தன் மனதிலேற்றிச் சுவைத்து மகி ழ்ந்தார். அன்னையின் அருள்வேண்டி அன்புமகனாய் வாழ்ந்தார். திருவள்ளுவ ரின் வாக்குகளைத் திருமொழியாம் விவிலியத்தோடு இணைத்துக் காண்பதி லும் இன்பம் கண்டார். அடிகளவர்களின் நெஞ்சிலே இறைவனின் தோற்றம் துறவறத்தின் முதன்மை, கடமையின் மாண்பு, கற்பின் நிலைமை, வானோரின் உயர்வு. அறத்தின் அருமை; அன்பின் பெருமை. அத்தனையும் ஆழப் பதிந்தி ருந்தன. எந்த இடத்திலும் எந்த நேரத்திலும், தான் கிறீஸ்துவில் இணைந்த நற்குரு என்பதை மறக்கவில்லை..

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்பதுபோல் அடிகள் எத்துன்பநேரத்திலும், அரிய துறவற ஒழுக்கத்திலுள் அவைகளை மேற்கொண்டு, தான் தனிமறை கைக்கொண்ட சமயத்தினையும் போதித்துத் தரணிக்கொரு தவநாயகனாக விளங்கினார். நற்றமிழ்ப்பணி * செய்தது தன் திறவல்ல. அது இறைவனின் சித்தம் எனத் திருமூலரின் வாக் கையே தன் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார்.

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே"

என்று சொல்வதில் பெருமை கொண்டார். இத்தகைய திறன் கொண்ட * தந்தை தனிநாயகம் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும் இறைவனோடு * இணைந்து நித்தியமாய் இறை உலகில் வாழ்வாராக.

வாழ்க தமிழ், வளர்க கிறீஸ்தவம்

போதகர் அமல்ராஜ் ( ஆசிரியர் )
கார்மேல் பாத்திமாக் கல்லூரி—கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தோர் மணி விளக்கு.

அன்பிற்கு வழிவகுத்து அரியதொரு திருச்சபையை
அனைத்துலக மக்களுக்கும் ஈந்தளித்த அன்புருவாம்
இறைமைந்தன் யேசுபரன் திருவடிகள் பின் தொடர்ந்து
இறை வாழ்வு பெற்று நிதம் ஒளியாக மிளிர்ந்த பல
புனிதர்கள் காட்டிவோம் பணியே தம்முயிராகக்
கனிவுடனே இறை செய்த அவர் வழியே தாம் சென்று
துறவு எனும் தூயவழி தெரிந்துணர்ந்து தலைப்பயின்ற
மாறாத பெருமைமிகு தமிழன்னை தலை நிமிர்ந்து
தான் வந்த தனிப்பண்பும் தரணி புகழ் கலைப் பண்பும்
மிளிர்ந்த நல்கலாச்சாரக் கனிரசமும் சுரந்திடவே
அனைவரையும் எவ்வெவரும் வியக்கத் தமிழாராய்ச்சி
மாநாட்டை மலேசிய நாட்டினிலே முதன்முதலும்
அதைத் தொடர்ந்து பாரிஸ் நகரில், பாரதத்தில் சென்னையிலும்
தாய்நாடாம் ஈழத்தில் யாழ்நகரிற்தான் நடத்தி
உலகெல்லாம் தமிழோசை தான்முழங்கத் தனித்தநாய்
பலகாலும் பணி புரிந்து பண்பாட்டிற்கான் திளைத்து
நவாப்புகழ் ஈட்டிடும் இவ்வுலக வாழ்விலே
புகழ் வளரும் பொருள் பெறினும் நீர்க்குமிழி எனவுணர்ந்து
நற்குருவாய் நலம் மிக்க திருந்தவராய்த் தமிழ் வளர்த்த
சற்றுணராய்த் தமிழ்த்தாயின் தவப்புதல்வராய்த் தனித்திருந்து
ஒளிவீசும் விழி மூடி உயிர் பிரிந்து சென்றிடவே
உரை செய்த உதடுகளும் ஓய்வடைந்து உலர்ந்தனவே
மனமே நீயறியாயோ மாணிக்க நாயகத்த
மணி விளக்கு மறைந்ததுவே நம் மறையவர் தான் மறைந்தனரோ
தனிநாயகவடிகள் தணியாத் தமிழ்த் தாகத்தீர்
அணிசேர்வோம் பணி புரிவோம் அன்னவரின் அரும்பணிகள்
அவனியிலே பரந்திடவே ஆவலுடன் உழைத்திருப்போம்
இனிமைமிகு தமிழ்த்தாயின் அரும்புதல்வர் அமைதிபெற
ஆர்வமுடன் செயற்படுவோம் அணிசேர வாரீரே.

திருமதி. ரேன் ஜோசப்,
ஆசிரியை,
கார்மேல் பாத்திமா கல்லூரி,

# அறிஞர்கள் கண்ட அடிகளார்.

சமய கோடிகளெல்லாம் தன்தெய்வம்—என்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதென? என்று தாயுமானவர் என்ற பெரியார் பாடியிருக்கின்றார். அவர் எந்தத் தெய்வத்தைக்குறித்து இவ்விதம் கூறினார்? தமிழ்த்தெய்வத்தைப்பற்றித்தான் அவர் சொல்லியிருக்கவேண்டும் — என்று தோன்றுகின்றது. சொல்லியிருந்தால் மிகப் பொருத்தமாயிருக்கும் — என்பதில் ஐயமில்லை.

ஆதிநாளிலிருந்து தமிழகத்தில் குடிபுகுந்த சமயங்களெல்லாம் தமிழ்த்தெய்வத்துக்குத் தங்கள் பாதகாணிக்கையைச் செலுத்திப் போற்றியிருக்கின்றன. தன்தெய்வம்—என்தெய்வம் என்று போட்டியுமிட்டிருக்கின்றன. சமயப்பிரசாரம் செய்ய இங்குவந்த பெரியோர்கள் பலர் விரைவிலேயே வந்த * காரியத்தை மறந்து தமிழ்த்தெய்வத்தின் வழிபாட்டில் இறங்கியிருக்கின்றார்கள். முருகனைத் தெய்வமாகக்கொண்ட பழந்தமிழர்கள் தமிழ்த்தெய்வத்தைப்போற்றி மகிழ்ந்திருக்கின்றார்கள். தமிழகத்தில் ஒரு சமயம் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்த சமணர்களும் புத்தர்களும் தமிழ்த்தெய்வத்துக்குப் பாமாலை * சூட்டி மகிழ்ந்தார்கள். காவிய அணிகளால் அலங்கரித்து இன்புற்றார்கள். சைவர்களும் வைஷ்ணவர்களும் . . . தத்தம் தெய்வங்களைப்பற்றிப் பாடியபோது தமிழ்த்தெய்வத்தையும் சேர்த்தே பாடினார்கள். பிற்காலத்திலேயும் நம் நாட்டைத் தேடிவந்த முஸ்லீம்கள் கிறிஸ்தவர்களும் தமிழ்த்தெய்வங்களைப் பணிந்தேற்றிக் காவிய மாலை புனைந்திருக்கின்றார்கள். தமிழ்* மொழியைத்தவிர வேறு எந்த மொழியேனும் இவ்வாறு பல்வேறு சமயத்தவர்களால் கொண்டாடப்படுகின்றதா? சந்தேகந்தான். எனவே தாயுமானவரின் அருள்வாக்கில் குறிப்பிட்ட தெய்வம் ஏன் தமிழ்த் தெய்வமாக இருக்கக்கூடாது. அல்லது நாம் ஏன் அவ்விதம் வைத்துக்கொள்ளக்கூடாது?

யாழ்ப்பாணத் தமிழ்த்திருவிழாவில் பூஜ்யர் தனிநாயகம் என்னும் * பாதிரியார் இனிய தமிழில் சொற்பொழிவு ஆற்றி வந்தபோது எனக்குமேற்கண்டவாறு தோன்றியது. இந்தப் பாதிரியார் யாழ்ப்பாணத்தவர். ஊர் தூத்துக்குடியில் வசிக்கின்றார். உலகமெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து எங்குமே தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லிவிட்டுத் திரும்பியிருக்கின்றார். அடடா எவ்வளவு அழகாக ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி, அமைத்து, அழகிய தமிழ் நூல் எடுத்துக் காட்டுகளுடன் அவர் சொற்பொழிவு ஆற்றினார்.

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று அவர் சொற்பொழிவை முடித்தபாணி எவ்வளவு நன்றாயிருந்தது.

( பேராசிரியர் "கல்கி" "தெய்வ தரிசனம்" நூலில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரா.பி. சேதுப்பிள்ளை.

இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருக்கும் பழைய பர
மேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான பந்தலில்
செம்மை தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் திருவிழாவாகிய தமிழ்விழா மிகச் சிறப்
பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பிற்பகல் இலக்கிய மகாநாடு.
சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை இலக்கிய மகாநாட்டுக்குத் தலை
வர். காலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட இரா.பி நண்பகல் உணவுக்குச்
சென்ற பின் இராமநாதன் கல்லூரியிலிருந்து திரும்பிவரும்போது வழியில் சுண
க்கம் ஏற்பட்டுவிட்டது.

பிற்பகல் நிகழ்ச்சிகளைத் தலைவர் வரும்வரை தாமதிக்கலாம் *
என்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். தலைமை தாங்கும் இரா.பி
வராமல் இலக்கிய மகாநாட்டைத் தொடங்கலாமா?

". தொடங்கலாம்; தொடங்கித்தான் ஆகவேண்டும். மகாநாட்டு
நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நேரடியாகவே அஞ்சல் செய்து கொண்டிரு
க்கின்றது. மகாநாடு தொடங்கத் தாமதமானால் எதை அஞ்சல் செய்வது?
என்று இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக அப்போதிருந்த *
திரு.பொ.சிவபாதசுந்தரம் கேள்வி எழுப்பி மகாநாட்டை உரிய நேரத்தில்
தொடங்கவும் செய்தார்.

இலக்கிய மகாநாட்டில் முதல் பேச்சாளர் தனிநாயக அடிகள்.
தலைவர் வரத் தாமதமானதால் முதல் பேச்சாளரான அடிகள் பேசத்தொ
டங்கினார்.

என்னை இறைவன் நன்றாகப் படைத்தான்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.."

என்ற திருமூலர் வாக்குடன் கணீர் என்ற குரலில் அழகு தமிழில்*
அடிகளார் தமது பேச்சை ஆரம்பித்து நிகழ்த்திக்கொண்டிருந்தார்.

இடையில் மகாநாட்டுத்தலைவர் இரா.பி.சேதுப்பிள்ளை, மேடை
க்கு வந்து அமர்ந்து அமைதியாக அடிகளாரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிரு
ந்தார். அடிகளார் பேசி முடித்ததும் சேதுப்பிள்ளை எழுந்தார்.

" இவர் தனிநாயகம் அல்லவா; இதற்கு ஒரு சபாநாயகம்
வேண்டுமா " என்றதும், மகிழ்ச்சி ஆரவாரத்தால் மண்டபம் அதிர்ந்தது..

# பேராசிரியர் சு. வித்தியானந்தன்

அடிகளார் தமிழுலகுக்கு ஆற்றிய சேவைகளும் அவர் என்னுடன் சேர்ந்து தமிழாராய்ச்சி மாநாடு நடத்திய நிகழ்ச்சிகளும் இப்போது என் மனத்திரையிலே ஓடுகின்றன. தனிநாயக அடிகள் தமிழ்த்தூதர். உலக ஆசைகளைத் துறந்த போதிலும் தமிழ் ஆசைகளைத் துறவாதிருந்தார். தாம் செல்லும் நாடுகளிலே தமிழ்த்தூதராய் விளங்கி தமிழின் மேன்மையையும், தொன்மையையும் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், கட்டுரைகள், எழுதியும், வானொலியில் பேசியும், அந்தந்த நாட்டு மக்களுக்கு தமிழ்மொழியிடத்து அன்பும் அக்கறையும் ஏற்படச்செய்தார். உலகமெல்லாம் தமிழ்ப் பண்பாடு, தமிழ் முழக்கம் என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றைப் தோற்றுவித்து அதன் ஆசிரியராகவும் பணி புரிந்தார். இத்தொண்டுகள் யாவற்றிலும் மேலாக இதுவரை யாருமே செய்திராத பெரிய அளவில் ஐரோப்பா ஆபிரிக்கா, ஆசியா முதலிய எல்லாக் கண்டங்களிலுமுள்ள தமிழ் அறிஞர்களை ஒன்றுகூட்டி அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவினார்.

எனவே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் அவரின் குழந்தையாகும். இக்குழந்தைக்குப் பத்தாவது ஆண்டிறுதியில் ஒரு தத்து ஏற்பட்டது. அதாவது யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு தொடங்குவதன் முன்னர் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கும் * பெரிய சோதனை ஏற்பட்டது.

அப்போது குழந்தையைத் தவிக்கவைத்துவிட்டு ஓடிவிட்டார் என அடிகளார் மீது பலர் பழி சுமத்த முற்பட்டார்கள். குழந்தைத் துரோகம் அறியாத தமிழ்ப் பண்பாட்டின் காவலர் அவர்.

எனவே தான் தத்திலிருந்து குழந்தையைத் தப்பவைக்க என்னோடு* சேர்ந்து உழைத்தார். இக்குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நான்காவது மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியபோது உலகறியச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஒன்றே உலகம்" மதிப்புரையிலிருந்து

இவர் அறிந்த மொழிகள் பல; ஆங்கிலம் இத்தாலியன் பிரஞ்சு, ஸ்பானியன், ஜேர்மன், இலத்தீன, கிரீக்கு முதலிய மொழிகளில் பயிற்சியுடைய பன்மொழிப்புலவர். வடமொழி, ருஷ்யமொழி, போர்ச்சுக்கீஸ், சிங்களம், ஹிப்ரு [illegible] மொழிகளையும் இவர் ஓரளவு அறிவார். உலகத்தின் பலபாகங்களுக்கும் சுற்றுச் செலவை மேற்கொண்டு ஆங்கெல்லாம் * தமிழ் மணம் கமழச் செய்துள்ளார்.

அடிகளார் துறவு பூண்டிருப்பினும், தமிழ்ப்பற்றைத் துறக்கவில்லை. தாம் செல்லும் நாடுகளில் தமிழ்த்தூதராய் விளங்கித் தமிழின் மேன்மையையும், தொன்மையையும் பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், கட்டு* ரைகள் வரைந்தும், வானொலி வழியாகப் பேசியும், அவ்வந்நாட்டு மக்களுக்குத் தமிழ்மொழியிடத்து அன்பும் அக்கறையும் ஏற்படச் செய்துள்ளார். உலகமெல்லாம் தமிழ் முழங்க என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றைத் தோற்றுவித்து இப்போது அதன் ஆசிரியராய்ப் பணிபுரிகின்றார். வடமொழியின் * பெருமையை மட்டும் அறிந்திருந்த உலக அறிஞர் பலருக்குத் தமிழின் பெருமையையும் எடுத்துக்கூறி அதன் அருமையை உணரும்படி செய்துள்ள அடிகளாரின், தொண்டு தமிழ்மக்களால் என்றும் பாராட்டப்படுவதாகும்.

***************

## மலேசியா பிரதமர் மாண்புமிகு
## துங்கு அப்துல் ரகுமான்.

எமது இந்திய கலாச்சார இயல் பலமொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பரந்த மனப்பான்மையுடைய ஒரு அறிஞரைத் தலைவராகப் பெற்றது பல்கலைக்கழகத்தின் பெரும்பேறாகும். நாம் இங்கு குறிப்பிடுவது பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே ஆகும். அவருடைய தலைமைதான் இம்மகாநாட்டை இந்தப் பல்கலைக்கழகத்தில் கூட்டுவதற்கு வழியமைத்ததாகும்.

## தமிழக முதலமைச்சர்
## மாண்புமிகு பக்தவத்சலம்.

மலாயாப் பல்கலைக்கழகம் மகாநாட்டைக் கூட்டுவதற்கு முன்னின்றமைக்கு நான் பெருமைப்படுகின்றேன். அத்துடன் அருட்திரு தனிநாயகம் அடிகளாரின் விடாமுயற்சியும், பெரும் உழைப்புமே இன்றைய திலத்தை நனவாக்கியதென்றும்.

# "திருவள்ளுவர் நூலிலிருந்து"

திருக்குறள் தரும் நீதிக்கருத்துக்கள் கிரேக்க நாட்டு நீதிக்கருத்துக்களுடன் ஒப்புநோக்கி விளக்கப்பெற்றுள்ளன. உரோமையர் நீதி நூல்களுடன் ஒப்பு நோக்கும் முறையில் திருக்குறட் கருத்துக்களின் உயர்வு நன்கு விளக்கப் பெற்றுள்ளது.

புத்தருடைய அறவுரைகளும் அவற்றை விளக்கிய [illegible] அறநூல்களின் கருத்துக்களும், திருவள்ளுவர் வாய்மொழிகளுடன் ஒப்புநோக்கி * ஆராயப்பட்டன. புத்த நூல்கள் துறவறத்தின் மேன்மையையும் திருக்குறள்* இல்லறத்தின் சிறப்பினையும் அறிவுறுத்தும் முறையில் அமைந்துள்ளமை இனிது புலப்படுத்தப் பெற்றுள்ளது. தெய்வப் புலவர் அருளிய திருக்குறளைப் பற்றி கி.பி. 16ம் நூற்றாண்டு முதல் 20ம் நூற்றாண்டு வரை வெளிநாட்டு அறிஞர்கள் ஆராய்ந்து கூறிய முடிவுகளைத் தனிநாயக அடிகளார் தம் விரிவுரைகளில் அழகுற எடுத்துக் காட்டியிருப்பது திருக்குறளைப்பற்றிய அறிவியம்பெருமையிலும் நம் நாட்டவரிலும் மேலை நாட்டறிஞர்கள் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள திறத்தினை நன்கு விளக்குவதாகும்.

## "தமிழ்த் தூது" [கட்டுரைக்கொத்து] பதிப்புரையிலிருந்து.

ஆறுமுக நாவலர் அவர்களையும் விபுலானந்த அடிகளையும், நவாலியூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களையும் தமிழுக்குத் தந்த ஈழத்திருநாடு அறிஞர் தனிநாயக அடிகளையும் நமக்குத் தந்துள்ளது. ஈழத்தில் பிறந்த இப்பெருமகனார் தம்மைப் பிறர் பணிக்காகவே அர்ப்பணித்துக்கொண்டவர்.

இளமையில் யாழ்ப்பாணத்தில் உயர்நிலைக்கல்வி பயின்ற பின்னர் உரோம் நகரில் திருமறைக்கல்வி பயின்று வேதசாஸ்திரங்களில் டாக்டர் பட்டம் பெற்றார்கள். தமிழகத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் எம். ஏ. பட்டமும், எம்.லிட் பட்டமும் பெற்றார்கள். இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறைப் பகுதியில் ஒப்பியற் கல்வி பயின்று அதிலும் டாக்டர் பட்டம் பெற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒன்றே உலகம்"
## போர்த்துக்கல்லில் உள்ள பழைய நூல்கள்.

போர்த்துக்கல்லில் தங்கியபோது தமிழ்நாட்டைப் பற்றிய சிலபழைய
போர்த்துக்கல்லில் ஒரு பண்டைத்தமிழ் நூல்களையும் பார்வையிட் *
அறிக்கைகளைப் படித்ததுடன் நூலுடைய கத்தோலிக்கக் குரு ஒருவர் இயற்றி
டேன். ஒரு நூல் டச்சுக்கும் இதுவே நாம் அறிய ஐரோப்பியர்
-ய தமிழ் இலக்கணக் கையெழுத்துப் பிரதி. இந்நூலில் அடங்கிய எடுத்
ஒருவரால் யாக்கப்பெற்ற முதல் இலக்கண நூல். இந்நூலில் அடங்கிய எடுத்
துக் காட்டுகள் சிலவற்றிலிருந்து இந்நூல் தமிழ்நாட்டில் பண்டைக்கொற்கையிரு
ந்த இடத்திற்கு அண்மையிலுள்ள புன்னைக் காயலில் கத்தோலிக்கக் குருவால்
போர்த்துக்கீசிய மொழியில் யாக்கப்பெற்ற தமிழ் இலக்கண நூல் என்று துணி
யக் கிடக்கின்றது.

பிறிதொரு நூல் "Museu Etnologico" என்னும் பொரு
ட்காட்சி நிலையத்தில் உள்ள நூல். இதுவே தமிழில் அச்சுக்கண்ட முதல்நூல்.
இதனை லிஸ்பனில் 1554 ம் ஆண்டில் அச்சிட்டனர். இந்நூலில் தமிழ் எழுத்துக்
கள் கையாளப்படாமல் உரோமருடைய எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களைக்குறி
ப்பதற்குக் கையாளப்பட்டிருக்கின்றன. இப்பிரதியொன்றே இப்போது உலகில் உள்ள
தாகத் தெரிகின்றது. மிக அழகாக உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பெற்ற *
இப்பிரதி போர்ட்டுகல் நாட்டில் அச்சிடப்பெற்ற நூல்களில் அச்சுமுறையி
லும் சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. இந்நூலின் பக்கங்கள் முப்பத்தியாறு

இதில் அடங்கியிருப்பன கத்தோலிக்க சமயத்தின் வழிபாட்டு முறைகளு
ம், செபங்களுமாகும். தமிழ் வசனங்களை உரோம எழுத்துக்களில் அச்சிட்டு *
அவற்றின் உச்சரிப்பையும் பொருளையும் போர்த்துக்கீசிய மொழியில் ஒவ்வொ
ருவரிக்கும் இடையே அச்சிட்டிருக்கின்றனர். இந்திய மொழிகளுக்குள்ளும் கிழக்கு *
ஆசிய மொழிகளுக்குள்ளும் அச்சுக் கண்ட முதல்மொழி தமிழ் மொழி. இந்நூ *
லினை இயற்றுவதற்குப் போர்த்துக்கல்லில் அக்காலத்திலிருந்த தமிழ் பேசும் இந்
தியர் மூவர் துணை செய்தனரென்றும், இந்நூலினை மேற்பார்த்துத் திருத்தி
யவர், இலங்கையில் கத்தோலிக்க மறையைப் போதித்த "ஜேவாம் விலா –
கொண்டே" என்பவர் என்னும் நூலின் முகவுரையிலே கூறப்பட்டுள்ளது. இந்
நூலைப் பார்வையிடுவதற்காகவே நான் சில நாட்கள் லிஸ்பனில் தங்கியிருக்க
வேண்டியதாயிற்று. இந்நூல் ஏதோவொரு காரணத்தால் பாதுகாக்கப்பெற்ற
நூற்கூடத்திலிருந்து தவறிப் பிறிதொரு பொருட்காட்சி நிலையத் தலைவரின் –
கையில் சேர்ந்தது. எனவே இன்று பொருட்காட்சி நிலையத்தின் இரும்புப்பெட்
டியில் காப்பாற்றப்பட்டு வருகின்றது. இந்நூலின் சில பக்கங்களைப்படம் –
பிடிப்பதற்காக ஒரு முறைதான் இதனைக் கட்டிடத்தின் வெளியே எடுத்துச்சென்
றனர்

( ஒன்றே உலகம் )

## அனுதாபப் புத்தகத்திலிருந்து..

தமிழ்த்தாயின் பெருமையைத் தரணி அறியச்செய்த தலை சிறந்த அறிஞரின் மறைவு, தமிழினத்துக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப் பாகும்.

அ. அமிர்தலிங்கம் பா.உ
செயலதிபர், தமிழர் விடுதலைக் கூட்டணி.

தமிழ் மொழியை உலக அரங்கில் தனியிடம் பெறச்செய்த தனிநாயக அடிகளாரின் எதிர்பாராத மறைவு பேரதிர்ச்சியையும், பெருந்துன்பத் தையும் தந்துள்ளது. அரசுகளும், பல்கலைக்கழகங்களும், செய்யமுடி யாத தமிழ்த் தொண்டினைச்செய்த தனிப்பெரும் தமிழ்த்தொண்டர் - அவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை அவருடன் சேர்ந்து நிறு வியவன் என்ற தொடர்பில் அவருடைய அரும்பெரும்பணியை நன்கு அறி ந்த எனக்கு அவருடைய பிரிவு தாங்கொணாதது. வேலணையில் நட ந்த இருபதாவது திருக்குறள் மகாநாட்டில் அவர் நிகழ்த்திய உரையே அவருடைய கடைசி உரையாக அமையும் என்பதை நாங்கள் எதிர்பா ர்க்கவில்லை.

க.பொ.ரத்தினம் பா.உ
ஊர்காவற்றுறைத் தொகுதி.

தமிழீழம் தந்த தலைமகனும் இறைவன் தன்னை நன்றாகத் தமிழ்செய்த தமிழோசை தரணியெல்லாம் பரப்பி தமிழ்ப்பண்பாடு உலகறிந்து ஆரா ய்ந்து, களிக்க வைத்த தனிநாயக அடிகள் பாதம் அஞ்சலி செய் வோம்.

சி.கதிரவேலுப்பிள்ளை, பா.உ
கோப்பாய்.

தன் கடமையைத் தனியாகச் செய்த பெரிய தமிழனை இழந்து விட் டோம். வழிகாட்டியையும் இழந்து விட்டோம்.

ச.அ. தருமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருலகமெங்கிலும் தமிழ் ஒலிபரப்பிய அடிகளார் இறைவனடி எய்திவிட்டார். எனிடம் அவர் ஊட்டிய தமிழ்ச்சக்தி என்றென்றும் நிலைத்து நிற்கும் இந்த நூற்றாண்டில் சமய வாழ்க்கையோடு தமிழ் உணர்வினையும் கல்விப் பணியையும் இணைத்த மக்களுள் முதல்வராய் விளங்கிய அடிகளார் அவர்களின் வாழ்க்கை இலட்சியத்தைப் பேணிக்காப்பது நமது* கடமையாகும். அடிகளார் எனை பெருமதிப்புக்குரிய பேரரசன்.

ப. சந்திரசேகர்.
ஆண்டகையர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

தமிழ்க்கல்வி உலகில் தனிநாயகமாக விளங்கிய பெரியாரின் மறைவிற்குப்பெரிதும் வருந்துகின்றேம். அவரின் மறைவு ஈடு செய்ய முடியாததாகும்.

க. கைலாசபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

அனைத்துலகத் தமிழ்ச்சுவை வளர்த்தவரும் பன்மொழிப் புலமையுலம்** சர்வதேசியத்தை நடைமுறையிற் கடைப்பிடித்தவருமான மனிதாபிமானி* பேரறிஞர் அடிகளாருடைய மறைவு ஈடு செய்ய முடியாததே.

கா. இந்திரபாலா,
யாழ். பல்கலைக்கழகம்.

தமிழுக்கு ஒருநாயகம் தனிநாயகம். அவரது மறைவு ஒரு பேரிழப்பாகும்.

இராசா. விஸ்வநாதன்,
யாழ். முதல்வர்.

தற்காலத் தமிழ்நாயகம் அருட்திரு தனிநாயகம் அடிகளாரின் மறைவு* ஈழத் தமிழருக்கும் உலகத் தமிழருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒருபேரிழப்பு.

க. சிவஞானம்
மா. நகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

தமிழ்மொழிக்கு உலக அரங்கில் பலமொழிப்புலவர்களிடையே ஒரு உன்னத நிலையைத் தேடித்தந்த உலகத் தமிழ் மகாநாட்டைப் பல நாடுகளிலும் நடத்திய தமிழுக்கொரு தனிநாயகத்தை இழந்து தவிக்கின்றோம்.. இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. பல மதத்தவரும் மதித்த * மாமேதை மறைந்து விட்டார்.

சதா. ஸ்ரீநிவாசன்,
யாழ் வழக்கறிஞர் சார்பாக.

Digitized by Noolaham Foundation

From the Condolence Book..............

In the demise of Father Thani Nayagam ,the Tamils of Sri Lanka and Tamils the world over have lost one who wonfor their language and culture a place of honour among the cultures of the world.In the critical timefaced by the Tamils here today Father Thani Nayagam has made an abiding contribution by helping to build their identity and political consciousness.We mournhis loss.I mourn thepassing away of adear colleague and friend.May the goodLord bless his soul.

( K.Nesiah)

He was undoubtedly the greatest Tamil of his generation for he was instrumental in giving aconsciousness to his people of the greatness of thelanguage and culture.

( James T. Ratnam )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடு பெரம்பளூரில் 18.02.68ல் நடைபெற்ற " விதீத்தவத் தமிழ் தொண்டர்கள் " என்னும் கவியரங்கில்* "தனிநாயக அடிகளைப்பற்றி கவிஞர் அமலனின் பாடலில் இருந்த ஒரு பகுதி........................................

## நமது பெருமை

அறம் பொருள் இன்பம் கண்டு — உயர் ஞானம்
யாத்தவர் இத்தமிழர் — மொழி
அருமை உணர்ந்த இலக்கியம் பலவும்
இயற்றினர் செந்தமிழர்.

கல்லும் தோன்றி மண்ணும் தோன்று
காலம் முதலாக — பகை
வெல்லும் ஆற்றல் பெற்றவர் யாரோ
வெற்றித் தமிழர்களாம்

மயில் பொறி ஏறி வானம் அளந்தார்
மண்ணில் புகுந்தோடு — பல்
லயல்நாடு கொடியும் கண்டார்
கடல்படை தன்னிலே.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
என்றவர் வாழ்க்கையிலே — இன்
றோரொருமைப் பாட்டினை அறிந்த
உள்ளம் களித்தனரே

களவில் காதல் கற்பில் வாழ்வு
கண்டவர் மாத்தமிழர் நல்
லுறவில் யௌவனம் சாவகம் வென்ற
உலகம் வாழ்த்தியதே

இக்கதை எல்லாம் ஏட்டில் நின்றது
அக்கரை செல்வதில்லை — இதில்
அக்கறையின்றிக் காலம் கடத்தினர்
அறிஞர் என் போரும்.

உலக அரங்கில் தமிழ் வரலாற்றை
ஒருவரும் ஏற்றிடவில்லை — இதை
உணர்ந்தவர் யாரும் முயன்று தமிழை
உயர்த்திப் போற்றவில்லை.

முதல்மொழி பேசி மூத்த குடியாய்
வாழ்ந்தவர் நற்றமிழர் —ஒரு
மூலையில் வீசி எறிந்த தோலாய்
சுருங்கித்தான் கிடந்தார்.

பெண் தாயாய்த் தெய்வமாய்ப் போற்றிப்
பேணிய நற்றமிழர் — இரு
கண்கள் இருந்தும் குருடர்களாகிக்
காட்சிப் பொருளானார்.

இயலுக்கொரு தமிழ் இசைக்கும் ஒன்று
இன்பொருள் நாடகமாய் — தமிழ்
வகுப்பிட்டு முத்தமிழ் காத்த
வளமும் குன்றியதே.

நம் குடிப் பெருமை நானிலம் அறிய
நல்லவர் செய்யவில்லை — அந்
நல்லவர் நாமும் இலக்கியம் படித்தே
நாளினைப் போக்கி விட்டோர்

நமது பெருமை நாமே சொல்லி
நாளைக் கடத்தவதோ — இந்
நிலையும் நீங்கி பலரும் தமிழை
படிக்கும் நாள் வருமோ

நாளும் வந்தது

அந்த நாளும் வந்திடத்தான் உழைத்தார் பாரில்
அன்று நேரம் சென்ற தனிநாயகம் தான்
சொந்தமுடன் குருமாரைச் சேர்த்துக்கொண்டு
சொல்லவொண்ணு தனிச் சேவை செய்யலானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை பல நிகழ்த்தவே அங்கே நாட்டம்
வித்தகராம் அருளப்பா ஒத்துழைத்தார்.
முத்திபரன் சேவைக்கும் முந்திக்கொண்டு
முத்தமிழை வளர்த்தாரே அடிகளாரே.

அத்தோடு முடியவில்லை பணிகள் மேலும்
அடுக்கடுக்காய்ச் செய்யலானார் நாளும் நாளும்
எத்தனையோ இடங்களிலே சுற்றிச் சுற்றி
இன் தமிழைச் சொல்லிவந்தார் பற்றிப்பற்றி
பத்திரிகை கழகங்கள் பல்லோர் மேடை
பாரெல்லாம் குரல்கொடுத்தார் குறளெடுத்து
சத்தியத்தின் வாசலிலே நின்று கொண்டு
தித்திக்கும் தமிழ்க்கதவைத் திறந்து வைத்தார்.

இலங்கையினில் கல்லூரி வாழ்வின்போதும்
இலண்டன்மா நகரினிலே கற்றபோதும்
சலங்கையொலி தமிழ்ச்சுவையின் பெருமைதனை
சாற்றியவர் பேச்செடுத்தார் மற்றும் ஏறி
விலங்கொடித்த மலாயாவின் கோலாலம்பூர்
விரிவான பொருளுணர்த்தும் கல்விச்சாலை
களங்கமில்லாத் தமிழ் ஓதும் ஆசான் ஆவர்
கற்பனைக்கும் எட்டாத சேவைச்செல்வர்.

கோலாலம்பூர் இருந்துகொண்டு தமிழின் ஓசை
குவலயமே கேட்கச்செய்த அறிஞர் கோமான்
நாளெல்லாம் பாடுபட்டுக் கண்டார் ஒன்றை
நமது தமிழ் முதலுலகம் கூட்டம்தன்னை
சீலமாய் உலகத்தமிழ் இரண்டாம் கூட்டம்
சிக்கலின்றி நடைபெறவே வழியும் செய்தார்
கோலமாம் கோலம் என்றே கூடிவிட்ட
கொள்கை வளர் தமிழர்களை இங்கு கண்டார்.

Digitized by Noolaham Foundation

"தமிழ் வாழ இப்போதும்" என்றே எண்ணி
தருட்டையா நாயகம் தான் செருக்குற்றாரே
"அமிழ்ந்தான தமிழ்க்கூட்டம் அடடா என்ன.....
ஆர்ப்பாட்டம் அழகுக் கலை ஊர்வலம் தான்
அமிழ்திரை கடல் வான எல்லை எங்கும்
இன்னோசை தமிழோசை" என வியந்தார்
கமழ்கின்ற தமிழின் மணம் திசை எட்டெல்லாம்
படர்ந்து மிகச் சென்றதனால் பூரித்தாரே..

ஔவைக்குப் பேரன்
*******************

" ஐயனே இளமை போதும்
அடியேற்குத் தமிழைத்தந்தால்
பையவே வேண்டாம் மூப்பு
பட்டெனக் கொடுத்துத் தீர்ப்பாய் "

என்றவள் ஔவைப்பாட்டி
இளமையில் முதுமை பெற்றாள்
அன்றவள் தமிழுக்காக
அழகினை அழித்துக் கொண்டாள்

அந்த ஓர் ஔவைப்பாட்டி
அடி வந்த பேரன் யாரீர்
இந்த நாள் வாழ்க்கை தன்னில்
இருவருமே துறவு பூண்டார்

ஔவைக்குப் பேரன் ஆனார்
அடுத்த கதை சொல்வேன் கேளீர்
இவ்வைய வாழ்வு மேட்டில்
இருந்தவன் இளங்கோ ஆனான் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளங்கோவின் அவதாரம்

* * * * * * * * * * * * * * * *

" அரசினைத் துறந்த ஐயன்
அன்னை மன்னை [illegible]
முரசினை ஒலிக்க சொன்னான்
முத்தமிழ் பாட்டிசைத்தான்.

துறவினை விரும்பியேற்று
தூயவன் நாட்டில் சென்று
அறவினைப் பரிந்து மேலும்
அருந்தமிழ் விருந்து வைத்தான்

அன்னவர் மீட்டும் இங்கே
அவதாரம் செய்தல் போலே
வந்தவர் நாயகம் தான்
என்பவன் நாட்டில் உல

செந்தமிழ் நாவலர் தான்
சேதுமாப்பிள்ளை சொன்னார்
இந்த சீர் பெற்ற பிள்ளை
என்றும் சொல்ல உண்டோ

இருந்தாலும் சொல்லப் போந்தேன்
இயல்பான தமிழிலே
விருந்தான பண்டம் போலே
விரும்பி நீர் உண்டு தீர்ப்பீர்.

## தமிழ்க் காதல் தனித்துறவி

* * * * * * * * * * * * * * * * * * * *

சங்கம் வைத்து மொழி வளர்த்த — காலம் தொடங்கி -அக்
காலம் தொடங்கி -இக்
காலம் வரைக்கும்

[illegible] பல மொழி வளர்த்தார் — நாளும் தெளிந்தோம் -இதி
நாளும் தெளிந்தோம் -[illegible]
மேலும் அறிந்தோம்

[illegible] நிகர் தமிழர்களின் — வாழ்வின் நடத்தை -[illegible]
வாழ்வின் [illegible] -[illegible]
வாழ்வின் [illegible]

தங்கச் சுடர் கொள்கைகளை
பாரில் சொன்னவர் — இப்
பாரில் சொன்னவர் — தப்
பாமல் சொன்னவர்

எத்தனை பேர் இருந்தாலும்
நாயகம் போலே — தனி
நாயகம் போலே — உயர்
நாயகம் போலே

இத்தரையில் தமிழைச் சொல்ல
அறிஞர் உளரோ — வேறு
அறிஞர் உளரோ — பேர்
அறிஞர் உளரோ

சத்தியமாம் மார்க்கம் தன்னைப்
பரப்ப வந்தவர் — யேசு
மார்க்கம் வந்தவர் — மறை
ஓத வந்தவர்.

வித்தகராய்த் தமிழ்ச் சேவை
செய்து காட்டினர் — உயர்
வெய்து காட்டினர் — புகழ்ப்
பெய்து காட்டினர்

அந்தப் பெரும் அறிஞர்களில்
பின்னர் வந்தவர் — எனின்
முன்னர் நிற்பவர் — ஆம்
முன்னர் நிற்பவர்

இந்த ஒரு அரங்கில் கூட
இறுதி வாய்ந்தவர் — சொல்
உறுதி வாய்ந்தவர் — நல்
உறுதி வாய்ந்தவர்

அந்தக் கவி பாடலிலே
இடமும் பெற்றவர் — நல்
மடமும் பெற்றவர் — வல் ?
திடமும் பெற்றவர்

பந்தயில் லை என்றும்
பாசம் கொண்டவர் — தமிழ்
காதல் கொண்டவர் — அவள்
வாழ்வு கண்டவர்

எங்கள் தனிநாயகமே
என்ற சொல்லாலே — புகழ்
நின்ற தன்னாலே — சுடர்
நிறும் மென்மேலே

தங்க மணி நாயகத்தின்
சேவையினாலே — தமிழ்
வாழ்வதனாலே — உயர்
வாழ்வுறவோமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலாநந்த அடிகளாரின் கல்வித் தொண்டு.

சமயத்தோடு தொடர்புடையது கல்வி. எச்சமயத்தையும் கல்வியையும் இரு கண்களைக் கண்களாகக் கருதியவர் தமிழர். இவையிரண்டும் ஒளி குன்றாமல் இதுவரை காத்துப் பயன் பெறுவதே [illegible] கொண்ட தமிழர் மரபில் வந்த தமிழ் அவ்வையின் தவப்புதல்வர்கள் பலரில் இருவர்தாம் விபுலாநந்தரும், வண. தனிநாயகம் அடிகளாரும் ஆவர்.

தனிநாயகம் அடிகளாரின் நினைவுமலரில் விபுலாநந்தரின் கல்வித் தொண்டுபற்றி எழுவது பொருத்தமாகுமென நான் நம்புகின்றேன். [illegible] ஈழநாட்டுச் சோதியாகிய விபுலாநந்த அடிகளார் ஈழநாட்டிற்கும், தென்தமிழ் நாட்டிற்கும் பொதுவாகவும் தாம் பிறந்த மட்டக்களப்பு மாநாட்டிற்குச் சிறப்பாகவும் ஆற்றியுள்ள கல்வித் தொண்டு பற்றி எழுவதெனில் அது கட்டுரையில் அடங்காது. பல [illegible] பரிணாமத்தில் எழுந்ததாக அது விரிவு பெறும்.

1892ம் ஆண்டு பிறந்து 1911ம் ஆண்டுவரை மாணவராயிருந்து 1912ம் ஆண்டு தொடக்கம் 1947 முடிவுவரையுள்ள காலப்பகுதியில் தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலிய பன்மொழிப் புலமையால் அறிவொளி பரப்பிய ஈழநாட்டுச் சோதியின் கல்வித் தொண்டு பழமையிற் புதுமையும், புதுமையிற் பழமையும் காட்டிய அதியற்புத சாதனையை நிலைநாட்டியுள்ளது.

மயில்வாகனம் எனும் பிள்ளைப்பெயர் பெற்ற அடிகளார் 1912ம் ஆண்டுக்கும், 1925ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சாமிநாத சுவாமிகளார் என அழைக்கப்பட்டார். 1916ம் ஆண்டு தொடக்கம் 22ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் பண்டித மயில்வாகனார் என்னும் பெயர் பெற்று விளங்கி [illegible] 1922ம் ஆண்டு தொடக்கம் 1924ம் ஆண்டு வரையும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துப் பிரமச்சாரியாகவிருந்து பிரபோதசைதன்னியர் என்னும் நாமத்தால் வழங்கப் பெற்றார். 1925ம் ஆண்டு தொடக்கம் அவர் விபுலாநந்த அடிகள் என்னும் சிறப்புப் பெயரால் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராயித் தம்மை மக்களுக்காக அர்ப்பணஞ் செய்து யாவர் பெற்ற [illegible]

[illegible] பெருக [illegible] எனும் தியாக சிந்தை பூண்டவராக 1947ம் ஆண்டுவரை தளர்வடையாத சேவை புரிந்து [illegible] உலக மக்களின் உள்ளங்களிலிருந்து வாழ்கின்றார்.

[illegible] விபுலாநந்த அடிகளாரின் கல்வித் தொண்டு [illegible] ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு உட்பட்டதாயினும் அவ [illegible] அப்பாற் செல்ல

நிலைநாட்டிய சாதனைகளைக் கொண்டதாகும். அடிகளார் பயிற்றப்பட்ட ஓர் ஆங்கில ஆசிரியர். பொறியியற்கலையில் டிப்ளோமா பெற்றவர். லண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டதாரி. மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பண்டிதர். இத்துணை வாய்ப்புக்களையும் பெற்றிருந்த அடிகளார் அவற்றைத் துணையாகக் கொண்டு பிற வாழ்க்கையில் பிரபலம்பெற விரும்பாது அறவழியிற் புகுந்தமையால் தேசிய சமுதாயத்தை நமது கல்விமான்கள் உருவாக்கித்தரவேண்டுமென்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தவர் நமது மயில்வாகனனார்.

கல்விக் கொள்கையிலே புரட்சிகரமானதோர் மாற்றம் செய்தவராகப் பாராட்டப்பட்டார். உதவாத கல்வியில் சிறந்த நிலை பெற்று உதவும் கல்வியை நாட்டு மக்களுக்கு ஊட்டவைத்தல் என்பது அவரின் புதிய கல்வித்திட்டமாகும்.

எல்லா அறிவுகளும் மேற்கிலிருந்துதான் இறக்குமதி செய்யவேண்டும் என்னும் கொள்கையை அடிகளார் அடியோடு வெறுத்தார். உயர்ந்த கல்வியை நாம் சந்ததி சந்ததியாகப் பெற்று அறிவு வளர்த்து உழைத்தது போதும். இனி நமக்கு வேண்டியது கையாளும் கல்வியே. கல்வி தேசீய கல்வியாய் அமைதல் வேண்டும். பொருளைத் தேடும் கல்வி, கடவுளைத் தேடும் கல்வியென அமையவேண்டுமென அவர் கொண்டிருந்த எண்ணம் இன்று செயல் முறையில் வந்திருப்பதைக் கண்டு மகிழ்வு கொள்ள அவரிங்கில்லை. என்றாலும் ஆவி வடிவிலேனும் நிச்சயமாக அவர் இதைக் கண்டு மகிழ்வு கொள்ளாமலிரார்.

1922ம் ஆண்டு வரை பண்டித மயில்வாகனனார் என விளங்கிவந்த நிலைமாறி உலகியல் நெறி வழியேயிருந்து நேர்மையாகவும் கூர்மையாகவும்; சீர்மையாகவும் கலைத்தொண்டு செய்து வந்த நிலைமாறித் துறவு பூண்டு 1925ம் ஆண்டுமுதல் அருள்நெறியை நோக்கி விபுலானந்தரின் கல்வித் தொண்டு விரிவடையலாயிற்று. அவரது கல்விச்செல்வம், அறிவு ஆற்றலெல்லாம் உலகிற்கு உரிமையாகிவிட்டன.

1922ம் ஆண்டு தொடக்கம் 1925ம் ஆண்டுவரை உள்ள காலப்பகுதியில் அடிகளாரின் அறிவாற்றல் சிந்தனாசக்தி முதலிய உள்ளமைப்புகளும் உடலுழைப்பும் புதிய சக்தியும் வளர்ச்சியும் பெற்று, ஆராய்ச்சித் துறையில் ஆழ்ந்து அகன்று நுண்ணிதாகச் சென்று புதிய சாதனைகளை நிலைநாட்டும் திண்மைபெற்றுத் திகழ்ந்தன.

1925ம் ஆண்டு தொடக்கம் 1947ம் ஆண்டு வரை நிறைவேற்றி நிலைநாட்டிச் சென்ற கல்வித் தொண்டுகள் குறிப்பிடத்தக்க சிறந்த அம்சங்கள் நிறைந்தவையாகும். யாழ்ப்பாணத்தில் நாவலர் காலத்தில் சமயத்தோடிருந்த பண்பும் கெட்டநிலை விபுலானந்தர் துறவியாக எழும் போது நிலவிய காலச்சூழ்நிலையே மட்டக்களப்புத் தமிழ்ச் சமூகத்திலும் நன்கு வேரூன்

யார் உண்மைச் சைவர். யார் உண்மைக் கிறிஸ்தவர் என்று அறி ந்திட்டீர். யமுடியாதபடி சமயவாதிகளிடையே அரசியல் செல்வாக்கே நிலைநிறுத்தாடிய காலத்தில் விபுலாநந்த அடிகள் தம் கல்விப்பணியை ஆரம்பித்தார்கள்.

சுவாமிகள் சமுகத்தைப்பற்றியிருந்த ஒருமைப்பாடு நம் கோரை முடிவு கண்டுவிட்டார். அதுவே அச்சமின்றியும் நேர்மையும். அடிகளாரின் சேவை அப்பழுக்கில்லாத புனித சேவையாயிருந்தமையால் எல்லா மதத்தினரும், அந்நியரும் தம்முள்ளே பேத உணர்ச்சி நீங்கப் பெற்று ஒருமுகமாக வாழும் சமூக நிலையை நாட்டில் ஏற்படுத்தியிற்று. நூலில் அடிகளாரின் கல்வித்தொண்டு தமிழர், கிறிஸ்தவர், முஸ்லீம், பௌத்தர் முதலிய எல்லோரையும் இணைத்து வைத்த ஒருமைப்பாட்டுக்கு ஒருவித்தாகவே நின்றதை நினைப்பொருபோதும் மறக்க முடியாது. மறக்கவுங்கூடாது.

1925ம் ஆண்டில் நாட்டில் ஒரு நிகழ்ச்சி ஒளிபரந்து மக்களிடையே கல்வித் துறையில் ஒரு உத்வேகம் உண்டாயிற்று. சைவப்பாடசாலைகளை நாடிப்பதும் அதற்கு அரசினர் நிதிகொடுத்து வழங்குவதும் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டு வந்த நிலை மறைந்து போயிற்று. ஆரம்பத்திலே மட்டக்களப்பு, காரைதீவு, [illegible], மண்டூர், ஆரையம்பதி, முதலிய ஊர்களிலுள்ள சைவப்பாடசாலைகளை நடத்தும் பொறுப்பு மட்டக்களப்பு விவேகானந்த சபையாரால் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் நாட்டப்பட்டுள்ள சிவானந்த வித்தியாலயமே கிழக்கிலங்கையில் அடிகளாரின் திருவுருவம் போன்ற தோற்றமுடையது. அக்கலாசாலையமைந்துள்ள நிலப்பரப்பியானது பரிவாரத் திருவண்ண ஆச்சிரமத்தையும், மாணவர் குருகுலத்தையும் கொண்டுள்ளதால் ஒரு தவச்சோலை போன்று காட்சியளிக்கின்றது. இந்துக்கள் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் ஆகிய எல்லோரையும் கவர்ந்திழுக்கின்ற சிவானந்த வித்தியாலயம் அடிகளாரின் விசாலமான நோக்கத்தைப் பிரதிபலிக்கின்றது.

திருகோணமலை இந்துக்கல்லூரியும், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரவித்தியாலயமும் அடிகளாரின் தன்னலமற்ற கல்வித் தொண்டினால் மிகவும் உயர்நிலையடைந்து விளங்குகின்றன. அவற்றைத் தொடர்ந்து மட்டக்களப்பில் பல பாகங்களிலும் தோன்றிய பல கல்விச்சாலைகளால் நாடு மறுமலர்ச்சியடைந்திருந்தைப் பிரத்தியட்சமாகக் காணமுடிந்தது.

ஈழநாட்டில் அடிகளார் இட்ட கல்வி வித்தானது ஆரம்பக்கல்வியையும், உயர்தரக் கல்வியையும் விருத்தி செய்து ஈழநாட்டில் பல்கலைக்கழகம் என்னும் கலாவிருட்சத்தைத் தோற்றுவித்தற்கேற்ற அங்குரார்ப்பணம் ஆயிற்று. ஆக்கபூர்வமான ஆலோசனைகள் உருப்பெறும் வகையில் அடிகள் அறிய ஆலோசனையின் பயனாகவே சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக்கழகம் தோன்றியது என்று கூறினால் அது புனைந்துரையாகாது.

1931ம் – 33ம் ஆண்டு வரை அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பெரும் பேராசிரியராக அப்பீடத்திலே அணிசெய்த சிறப்பியும் புலமை அரசோச்சிய நிற்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் தொண்டு செய்த காலப்பகுதியிலேதான் அவரின் யாழ்நூல் உருக்கொண்டதெனக் கூறுவதுபொருத்தமாயிருக்கும். 1943ம் ஆண்டு தொடக்கம் 1947ம் ஆண்டு வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பீடத்தின் பெரும் பேராசிரியராக அமர்ந்து அளப்பரிய பணி புரிந்து தமது இறுதி மூச்சிலே அடிகளார் அங்கேயே இளைப்பேறுதற்கு உரியவரானார். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் விரிவுரைகள் நடத்துவோரைப் பேராசிரியர் எனவும், அவ்வத்துறைப் பீடங்களின் தலைவர்களைப் பெரும் பேராசிரியர்கள் எனவும் வழங்கவேண்டும் என்பது அடிகளாரின் அபிப்பிராயமாகும்,

அவர்கள் கல்வித் தொண்டு 1912 – '22 ஆண்டு காலப்பகுதியில் முளை கொண்டு வளர்ந்து 1926 – 30ம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக் கழகம் உலகம் அறிவிக்குமாறு வளர்ச்சி நிலைபெற்ற பெரிய விருட்சமாகத் திகழ்வதை நாம் காண்கின்றோம்.

அடிகளார் கலாசாலைகள், ப பல்கலைக்கழகங்கள் என்னும் எல்லைகளையும் கடந்து அப்பால் சேவை செய்த கல்வித் தொண்டு அளப்பரியது. அவரது மரணத்தின் பின்பு உலகம் அறிந்துகொள்ளும் வண்ணம் அமைந்து நிற்கின்றது.

நக்கீரர் கபிலர் என்பது அவரவர் எச்சத்தினாற் காணப்படும். என்னும் திருக்குறளுக்கு உதாரணமாக விளங்கிநிற்பவர்களுள் ஒருவர். அடிகளார் தமது நாட்டுச் சிறுவர் சிறுமியரை நோக்கி உள்ளுருகினர். மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் மாணவர் வாசஸ்தலங்களை அமைத்து, மாணவர்கள் ஆசிரியர்களோடு உடனிருந்து, உடனுண்டு, உடன்பழகி உயர்கலை பயின்று, நாட்டின் நலசிற்பிகளாக உருவாகும் வாய்ப்பினை உண்டாக்கி வைத்தார். அடிகளாரின் உள்ளக் கருணையைச் சம்பளம் சத்திரம் அது எடுத்துக்காட்டுகின்றது. மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அமைந்துள்ள வித்தியாசாலை சாதிசமய பேதமின்றி எல்லோராலும் போற்றப்படும் ஒரு சிறந்த முன்மாதிரியான ஸ்தாபனமாகும்.

இராமகிருஷ்ண மடம் தமிழ்நாட்டுச் சிறார்களின் நன்மைக்காகவும், சுயநலத்தை ஒறுக்கும் சுபாவம், தியாக சேவைபுரியும் உளப்பண்பும், உள்ளவர்களாக வாழ முயலும் பரந்த ஞானம் கருணையுடைய போதனை சாதனைகளில் சித்தி பெற்றவர்களாகத் தம்மை உயர்த்திக் கொள்ளும் சமசந்தர்ப்பம் உள்ளவர்களாக உயர் கல்வியை, தொழில்கல்வியைப் பயில வருகின்ற தேசியத்திலே நாம் வேறெங்கும் காணமுடியாது. அவர் இராமகிருஷ்ண மிஷன் சங்கத்தின் இலங்கைக் கிளையின் நிலையும், மதிப்பும் பெறச் செய்தார். இச்சபை

யினரின் சமய கலாச்சாரத் தொண்டுகள் விபுலானந்த அடிகளாரை நமக்கு எவரும் நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன. உயர்தர வேதாந்த சஞ்சிகைகளில் ஆசிரியராகவிருந்து அருந்தொண்டாற்றினார். 1939 — 41ம் ஆண்டுப்பகுதி அவர் பத்திரிகையாசிரியராகத் தொண்டு புரிந்த காலமாகும். இலங்கைக் கல்விச் சீர்திருத்தச் சபையிலும், செனட் பல்கலைக்கழக ஆலோசனைச்சபைகளிலும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க ஆலோசனைச் சபையிலும், கரந்தைத் தமிழ்ச்சங்க ஆலோசனைச் சபையிலும் பிற கல்வி ஆலோசனைச் சபைகளிலும் அங்கம் வகித்த அடிகளார் அளித்த ஆலோசனைகளால் கலாபீடங்கள் அடைந்த பயன்களும் வளர்ச்சி உயர்ச்சிகள் அளப்பரியனவாகும்.

பன்மொழிப் பண்டிதராய் விளங்கிய அடிகளார்க்கு மொழிபெயர்ப்புக்கலை கைவந்த ஒரு பொருளாயிற்று. அவர் மேல்நாட்டு இலக்கியங்கள், சேக்ஷ்பியர் நாடகங்கள், மகாகவி தாகூர் போன்ற அறிஞர்களின் புலமைக்கவிகள் பல அடிகளாரின் நாநயம் கனிந்த இனிய தமிழ்ப்பாடல்களாலும் உரைநடைகளாலும் உலகத்துக்கு உபகரிக்கப்பட்டுள்ளன. மதங்க சூளாமணி என்னும் கலையில் செகசிற்பியரின் கவிதைச் செல்வத்தைத் தமிழ் மக்களுக்குத் தொகுத்து அளிக்கின்றது. சொல்லாக்கத்துறையிலும் அடிகளார் சிறந்து விளங்கினார். சொல்லாக்கம் செய்யும்போது, முதலில் [illegible]ல்களில் பரந்து கிடக்கும் சொற்களைக் கண்டு எடுத்தாண்டு பயன் கொள்ள வேண்டும். தமிழில் பெற முடியாத சொற்களை வடமொழியிலிருந்து பெற வேண்டும். இரு மொழிகளிலும் பெற முடியாதபோதுதான் வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். சொற்கள் எழுத்துச் சிக்கனமும், நாவுக்கு உச்சரிக்க எளிதாயும், இனிதாயும் அமையும் அமைதியைக் கொண்டும் வழங்க வேண்டும், எனக்கூறி உதாரணம் காட்டியுள்ளார் அடிகளார்.

1936ம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சொல்லாக்க மகாநாட்டுக்கு அடிகளார் தலைமை தாங்கினார். ஆசிரியராக அடிகளார் செய்த தொண்டும் மகத்தானது. செய்யுள் நடையிலும், உரைநடையிலும் அடிகளார் இயற்றித் தந்துள்ள நூல்கள் மிகப்பலவாகும். அவற்றுள்ளே யாழ் நூல் என்னும் பெயர் கொண்ட ஆராய்ச்சிப் பெருநூலானது இசைத்தமிழ்பற்றிய ஒரு முதல் நூலாகும். ஓர் ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த தமிழ் இசைக்கலையின் நுட்பங்களை ஆராய்ச்சிமுறையாக விரித்து விளக்கி வெளிப்படுத்துகின்ற ஒரு பெருநூலாகும். மறைந்து ஒழிந்து போன இசைநுணுக்கங்களையும், சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக்காதையிலும் சங்கநூல்களிலும் தலைமயங்கிச் சிதைவுண்டு கிடந்த இசை மரபுகளையும் ஆராய்ந்து விடிவெள்ளியாக விளங்குகின்ற இந்நூல் தமிழ் இசை ஆராய்ச்சியாளர்க்கு இசைக்கடலைக் கடப்பதற்கேற்ற கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது.

அடுத்துக் குறிப்பிடத்தக்கது மதங்கசூளாமணியென்னும் நாடகக்கலை பற்றிய நூலாகும். மதங்கர் என்பது

நாடக ஆசிரியர்கள். ஞாயிறு ஏனைய கிரோகத்திரம். நாடக ஆசிரியர்களுக் கெல்லாம் சிரோமணி போல் விளங்குகிற ஆசிரியர் செகசிற்பியரின் பெயரை த்தாங்கி வெளிவந்துள்ளது. இக்கவிதை நாடகம் தமிழ் மொழி, வடமொழி நாடக இலக்கண அமைதிகளையும் ஆங்கில நாடக இலக்கண அமைதிகளையும் எடுத்துக் காட்டி ஒப்பு நோக்கிக் கண்ட முடிபுகளை உவந்து உபகரிக்கின்றது. இந்நூல் அதிகாரியின் மொழி பெயர்ப்புத் திறமைக்கு ஓர் உரை கல் போன்றதாகும். உலகம் முழுவதையும் ஓர் நாடக மேடையாகவும், ஆண் பெண் யாவரை யும் நடிகர்களாகவும் உருவகஞ் செய்து காட்டிய செகசிற்பியரின் கற்பனை வளப்பிர யும், கவிதா சாமர்த்தியத்திலும் அறிவாற்றலிலும் அதிகாரியின் மாப்புகழ், கவிவு பெற்ற நா நலமும் ஆழ்ந்த புலமையும் விளங்குவதை நாம் காணலாம்.

மீண்டும் விவேகானந்த ஞான தீபம், கர்மயோகம், ஞானயோகம் நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணைகள் முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்க சிறந்த பயன்தரு நூல்களாகும். விபுலானந்தர் பிரபந்தத் திரட்டு என்னும் பெயருடன் 25 தொகையில் வெளியிடப்படுமேல் அதிகாரியவர் ற்றிய நூல்கள் பலவற்றை உலகம் அனுபவித்தற்குச் சிறந்த வசதி ஏற்படும். அதிகாரி பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதி உபகரித்துள்ள கட்டுரைகளோ மிக நுட்பமானவை யாம். அவற்றுள்ளே வண்ணமும் வடிவும், நிலவும் பொழிலும், மலையும் கடலும் நாடும் நகரமும், முதலிய கட்டுரைகள் நம்மிடையே வாழ்ந்து மறைந்து போன எழுத்தாளர் அருள் செல்வநாயகம் அவர்களால் 1963ம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அவர்க்குத் தமிழ் உலகம் கடப்பாடுடையது.

நடேசவர் வாக்கியம்,

கங்கையில் விடுத்த ஓலை, செகசிற்பியர் நாடகக் கவிதைகளின் மொழி பெயர்ப் புறக்கி, நறுவருவக்கும் முத்து மலர்கள், மகாலக்ஷ்மி தோத்திரம், மகாகவி தாகூரின் கவிதைகள் இலவற்றின் மொழி பெயர்ப்புகள் முதலான பயிரக்கணக்கான கவிதைகள் மூலம் அதிகாரி செய்துள்ள கவித் தொண்டுகள் அளவில்லடங் காதன. அதிகாரியின் கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தன. தெளிவும், தெளிவு ம், எளிமையும், இனிமையும் வாய்ந்தவ. உண்மையும் அழகும் செம்மையும் ... வளப்புகள் நிறைந்தேயமைந்த இக்கவிதைகள் அறிவும் உணர்ச்சியும் அளித்து, செவி க்கும் மனத்துக்கும் இனிமையூட்டி உயிர் தளிர்க்கச் செய்யும் அமைதியுடையனவாகும்.

அதிகாரியின் கல்வியறிவு பல ஆக்க வேலைகளில் பயன்பட்டுள்ளன. அதிகாரி மேல்நாட்டுக் கல்வி முறைகளிலே நன்கு திளைத்தவர். மேல்நாட்டு நாகரிகப் பண்பு களை அவர் நன்கு கடைப்பிடித்து நமது நாட்டுக் கல்வி முறையிலே பயன்படுத்திய ... அமைகிறது.

... ஒருவர் உண்மையான திபுணரா ல் அவரது திபுணத்துவம் ஆக்கவேலைகளிற் பிரதிபலிக்க வேண்டும். ... அவரது யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றிய ... அவரது ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றகல்வியால் பிறரை வெருட்டக்கூடாது. தமிழையும் பிறரையும் அளக்கக் கொள்ளல் வேண்டும். என அடிகளார் அடிக்கடிக் கூறியுள்ளார். அடிகளார் சர்வதேசிய நோக்குடையவராயிருந்தும் தமது தேசிய நோக்கத்தில் நிலைத்து நின்று அத்தனித்தன்மையைப் பேணிக்காத்து அதில் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்பதே அவரது கொள்கையாகும். அடிகளார் ஒரு தீவிர விஞ்ஞானி. அதேவேளையில் தெய்வநம்பிக்கையில் உறுதி பூண்ட துறவியார். மெய்ஞ்ஞானத்தில் திளைத்து நின்றார். அவர் ஒரு கவிப்புலவர் அதேவேளையில் இனிய உரைநடை கைவந்தபேராசானாய் விளங்கினார். அத்தோடு ஒரு கணித மேதையாக இருந்த அருங் கலைகளையும், நுண்கலைகளையும் இணைத்து வைத்து அருஞ்செயல் புரிந்தவர்.

இத்தகைய அதியற்புத சாதுரியமும், சாமர்த்தியமும் ஒருங்கிணைந்த அடிகளாரின் கல்விக் கொள்கை வெறும் ஏட்டறிவை மாத்திரம் துணையாகக் கொண்டதல்ல. அது உயிர்ப்புள்ளது. உண்மை காட்டுவது. நம்பிக்கை தருவது. சுயநாபகிப்புக்கு வழி செய்வது. மனிதனையும் மனிதனையும் மனத்தால் இணைத்து வளர்ப்பது. அகத்தூய்மையும், புறத்தூய்மையும் அளிப்பது. மனிதனை மனிதனாகவே வாழச்செய்வது. மனிதனுக்காக வாழப் பணிப்பது. அடிகளாரின் இக்கல்விக் கொள்கையின் ஒளி வழியே நமது மாணவசந்ததி செல்வதாக. அடிகளார் காட்டிய இந்தக் கல்விப் பாதையிலே சென்று நாடு மறுமலர்ச்சி பெறுவதாக.

திருமதி. சி. விஜயரெட்ணம். பி.ஏ
டிப். இ. டி
கார்மேல். பாத்திமா கல்லூரி,

Tercentenary of the birth of Fr.Constantine.

Fr.Beschi - a great literary genius

Father Constantine Beschi,the Italian Missionary who arrived in South India in 1711,studoed Tamil Language so well that in course of timehe turned out to bea great Tamil poet, a gramm-arian, a dialectian, a lexicograper anda andawriter of elegant Tamil prose.

Indiaand the Society of Jesus celebrate this year the third Centenary of the birth of Father Joseh Constantine Beschi a missionary in South India , whois rightly considered to be a great literary genius and aresearch scholar of the first magnitude.He cametothe Tamilcountry in South India after he had attained his thirtieth year andlearnt the Tamil language so wellthat hecomposed Tamil poetic works which are consideredto be as good as the best works of the Tamil poets themselves. Not only washeapoet, but also a grammarian, dialectician,a lexicographer, a writer of elegant Tamil prose and at the same time a great missionary of the Catholic Church.

BIRTH

Beschi was born nearas Mantua in Italy,the birth place also of Virgil,on the eighth of November,1680.He joined the Society of Jesus and went through his Philosophical and Theological studies like any other Priest of the Society. He was the n assigned to the Madura Mission begun by Robert De Nobili in 1606 in which the missioneries were experi-menting by living the life of Hindu asetics.Beschi reached the Madura Mission in 1711,and ever since lived for over 30 years as an exemplary missionery andscholar.It remains a wonder to everyone who has read his life how he couldhave studied the language and literature of the people amidst his missionery labours and theunstablepolitical situation in the country.Beschi was imprisoned a number of times hispeople obliged at the point of the sword to renounce Catholicism. He washimself subject to severe illnesses andexperience often famine which stalked the land. Such agreat missionary andscholar deserves to be better known and perhaps Centenary will help to popularise his life and works.

Besides being aTamil poet, Beschi was awriter of elegant Tamil prose and a lexiographer.As a dialectician he was a pitted against the Lutheran missioneries of Tranquebar who had plenty of funds at their disposal andsought to attract poverty stricken poor Catholics .He wrote two or three books in support of the claims of Catholicism and to contradict the claims of Lutheran Protestantism.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A POET

As a poet his chief work was the " Unfading Garlands of verses " praising his patron, St.Joseph. The Thembavani is an epic of over 3000 quatrains and includes several episodes from the Bible. At the time when the Bible was not readily available, the Tamil Catholics found in Boschi's epic a handbook of reference on Catholicism. It was written in the style of the times and its language is very terse and recondite. To the people of this century, it requires to be explained and the difficult words also explained in modern language. This is one reason why Boschi's epic is not so popular among Tamil Catholics in Sri Lanka.

Beschi built Chapels in honour of Our Lady. One such Chapel was dedicated to our Lady of Refuge, and Beschi composed a beautiful poem in her honour. Another such Chapel built near Cuddalore is said to have had statue of our Lady dressed in saree like a Tamil Mother. There exist a nummber of small poems too in honour of Our Lady and his favourite Saints.

A LEXICOGRAPHER

As a Lexicographer, Beschi compiled a Tamil- Tamil Dictionary in four parts. This dictionary shows Böschi's astounding knowledge of Tamil. Material readily available in his dictionary was used in the compilation of Miron Winslow's Tamil Dictionary and in the compilation of the Madras University Lexicon. Beschi gave a new dignity to colloquial Tamil. He compiled a dictionary and grammar of the spoken dialect. Modern linguistic scholars have not used these studies because of their being written in Latin. As a grammarian his grammars broke new ground. His five fold grammar expounding in a scientific way the five parts pertaining to grammar is a great source of practical grammar.

Both as grammarian and poet, Beschi made use of his knowl edge of Latin and Italian to introduce a new figures of speech in his Grammars. There are also several passages in his poetry which remind one of passages in Virgil, in, Dante and Tasso. Such a one is his Tamil rendering of Dante's memorable concerning the Blessed Virgin.

Like every other European who studies Tamil , Beschi was was attracted by the Thirukural. He translated into Latin two of three parts of this unique book of maxims. Beschi heads the list of Europeans who made contributions to Tamil scholarship.

DEATH

This astounding output along with the busy life of an active missionary brought about illnes and death. Beschi dies in 1747 at the age of 67. His works remain a monument to his genius. Every generation has since then a number of Beschi scholars among the Hindus. Tamil Catholics should learn from their enthusiasm to know Beschi a little more and study his works

N.B. This Article is taken from the Catholic Messenger of 14.9.80. It was sent by Fr. Thani Nayagam on almost on the eve of his death.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

University of Jaffna
63539
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation